அறைவு 02 இயம் 23 January 18 - 24 2014

உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்

# மலைமுரசு

MALAIMURASU

விலை : 30.00 பக்கங்கள் : 16 Registered as a newspaper in Sri Lanka பிரதி சனிதோறும் வெளியாகும் வார இதழ்

## உலகின் அழுக்கான மனிதன்



குளித்து 60 வருடங்கள்

உலகின் மிகவும் அழுக்கான மனிதனாக அடையாளம் காணப்பட்டுள்ள ஹாஜி குளித்து 60...

13

உன்னிச்சைக் குளம், மாதுறு ஓயா, முந்தானைக் குளம் பெருக்கெடுக்கும் நிலையில்...

# வெள்ள அபாயத்தில் மட்டக்களப்பு



## "தயார் நிலையில் பிரதேசச் செயலாளர்கள்"

கிழக்கில் பெய்து வரும் கடும் மழையை அடுத்து மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்கள் வெள்ள அனர்த்தத்தை எதிர்கொண்டுள்ளன.

இவ்விடயம் தொடர்பில் கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் எஸ்.இன்பராஜன், மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் தொடர்ச்சியாக பெய்து வரும் மழை காரணமாக உன்னிச்சை குளத்தில் அதிகளவான நீர் தேங்கி நிற்பதன் காரணமாக அங்கு வான் கதவுகள் அரை அடி திறக்கப்பட்டுள்ளன. இதேபோன்று மாதுறு ஓயா ஆறும் முந்தானை ஆறும் பெருக்கெடுத்துள்ளன என்று தெரிவித்தார். இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி, கிரான், ஓட்டமாவடி, வாழைச்சேனை....

13

## வைத்தியர் கடலுக்குப் பலி



நிலாவெளி கடற்பரப்பில் நீராடச் சென்ற வைத்தியர் ஒருவர் கடலலைக்குள் சிக்குண்டு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

29 வயதான வைத்தியர் ஜெயரட்ணம் றொபின்சன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். அவரும் அவரது வைத்திய நண்பர்கள் சிலரும் கடந்த 15ம் திகதி நிலாவெளிக் கடற்பரப்பில் நீராடச் சென்றுள்ளனர். அன்று முழுமதி தினமாக இருந்ததால் மாலை வேளையில் கடலடி நீரோட்டம் அதிகரித்திருந்ததுடன்....

13

"திவிநெகும" திட்டத்தின்

# 5வது வலயத்தினுள் மட்டு+மலை



திவிநெகும சட்ட மூலத்தினை செயற்படுத்தும் விதமாக இலங்கையை ஆறு நிர்வாக வலயங்களாகப் பிரிக்கும் வர்த்தமானி அறிவித்தல் வெளியாகவுள்ளது.

அவ்வறிவித்தலின் படி கிழக்கின் திருகோணமலையும் மட்டக்களப்பும் 5வது வலயத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன. அத்துடன் அனுராதபுரம், பொலனறுவை ஆகிய மாவட்டங்களும் அவ் 5வது வலயத்தினுள் அடங்கியுள்ளன. ஹம்பாந்தோட்டை, மொனராகலை மற்றும் அம்பாறை ஆகிய மூன்று மாவட்டங்களும் வலயம் 4ல் உள்வாங்கப்பட்டுள்ளன. வடக்கின் மாவட்டங்கள் அனைத்தும் 6வது...

13

## நூற்றாண்டுக்கு முற்பட்ட கப்பற் சிதிலங்கள் கிழக்குக் கடற்படுக்கையில்

1908ம் ஆண்டின் செப்டெம்பர் மாதம் 26ம் திகதி அரிசியையும் சேளத்தையும் ஏற்றிச் சென்ற பிரான்ஸ் நாட்டுக்குச் சொந்தமான கப்பலொன்றின் சிதைவுகள் கிழக்குக் கடற்படுக்கையில் சிதறிக் கிடப்பதாக காலியில் இயங்கும் இலங்கையின் கடல் அகல்வாராய்ச்சிப் பிரிவு தெரிவித்துள்ளது.

சுமார் 17 க்ப்பறி சிதிலங்களே இவ்வாறு

13

## வெளிநாட்டு மோகம்

# புத்தகக் கப்பலில் ஒளிந்திருந்தோர் விரட்டியடிப்பு

உலகின் ஒரே மிதக்கும் புத்தகக் கப்பலான "லோகோஸ் ஹோப்" கப்பலைப் பார்வையிட வந்த சிலர் அக்கப்பலை வட்டு வெளியேறாமல் ஒளிந்திருந்ததாக தகவல் கிடைத்துள்ளது. அக்கப்பலில் வெளி நாட்டுக்குப் பயணிக்கும் எண்ணத்துடன் மறைந்திருந்த சுமார் 18ற்கும் மேற்பட்டவர்களைக் கப்பல் சிப்பந்திகள் வெளியேற்றியதாகப் பார்வையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கப்பலைப் பார்வையிட வந்தவர்களிற் சிலர் வாழ்த்து அட்டைகள் உட்பட பொருட்கள் சிலவற்றைக் களவாடியது கண்டு பிடிக்கப்பட்டதாகவும் அவர்கள் மலைமுரசிற்குத் தெரிவித்தனர்.

கடந்த 10ம் திகதி திருகோணமலைக்கு வருகை தந்த இக்கப்பல் 16ம் திகதி மதியம் திரும்பிச் சென்றமை குறிப்பிடத்தக்கது.




படப்பிடிப்பு - சங்கர்

# சோலையடி கி. அ. ச தலைவர் மீது பாலியல் குற்றச்சாட்டு



திருகோணமலை மாவட்டத்தின் சோலையடி கிராம அபிவிருத்திச் சங்கத்தலைவர் மீது பாலியல் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப் பட்டுள்ளது. அக்குற்றச்சாட்டுக்களில் அவர் பதினைந்து வயதுப் பெண்ணொருவரைப் பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்த முனைந்ததாகத் தெரிய வந்துள்ளது.

அச் செய்தியை அடுத்து குறித்த பராயமடையாத பெண் குழந்தையை நாம் சந்தித்த போது அவர் "எனது அம்மா கையில் ஒப்பரேசன் செய்வதற்காக சிலாபம் மருத்துவமனைக்குச் சென்றிருந்தார். அவர் சென்ற மறுநாள் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் வீட்டில் இருந்தேன்....

13




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU
159A, 2ஆம் மாடி, கடல் முக வீதி,
திருக்கோணமலை.
malaimurasu@hotmail.com
0754252042 fax: 026 2223071

## வணக்கம்

### அவதானிக்கப்பட வேண்டிய வலயம் 5

திவிநெகும சட்ட மூலத்திற்கு அமைவாக ஆறு வலயங்களாக இலங்கை வகுக்கப்பட்டு நிர்வகிக்கப் படும் அறிவிப்பு வர்த்தமானியில் வெளியாகியுள்ளது.

அவ் அறிவித்தலுக்கு அமைவாக கிழக்கு மாகாணம் தனியானதொரு வலயமாக்கப் படவில்லை. கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்கள் துண்டாடப்பட்டு வலயம் 4 மற்றும் வலயம் 5 ஆகியவற்றுக்குள் உள்ளடக்கப் பட்டுள்ளன.

அதற்கமைய அம்பாறை மாவட்டமானது மொனராகலை மற்றும் ஹம்பாந்தோட்டையுடன் இணைக்கப்பட்டு வலயம் 4 உருவாக்கப்பட்டுள்ளது. மட்டக்களப்பும், திருகோணமலையும் பொலன்னறுவை மற்றும் அனுராதபுரத்துடன் இணைக்கப்பட்டு வலயம் 5 உருவாக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்கள் துண்டாடப்பட்டமையானது தமிழ் பிரதிநிதித்துவத்தினைச் சின்னா பின்னமாக்கும் நோக்கை கொண்டுள்ளதா? என்பதை அனைவரும் கவனிக்க வேண்டியவர்களாகின்றோம்.

ஏனெனில் கிழக்கு மாகாணத்தின் மாவட்டங்கள் யாவும் தனியானதொரு வலயமாக்கப் பட்டிருப்பின் தமிழ்ப் பெரும்பான்மை அவ்வலயத்தினுள் இருந்திருக்கும்.

கிழக்கிலுள்ள தமிழர்களின் மொத்த குடித்தொகையானது 2012ம் ஆண்டின் கணக்கெடுப்பின் படி முஸ்லிம்கள் உள்ளடங்கலாக 1.12 மில்லியனை அண்மித்துள்ளது. எனவேதான் அவ்வாறானதொரு வலயம் உருவாக்கப்பட்டிருப்பின் தமிழ்ப் பெரும்பான்மை அங்கு காணப்பட்டிருப்பதுடன் வடக்குடன் சேர்ந்து திவிநெகும நிர்வாக வலயங்கள் 6ல் இரண்டைத் தமிழ்ப் பெரும்பான்மை பெற்றிருக்கும்.

ஆனால் கிழக்கு மாகாணத்திலுள்ள மாவட்டங்களைத் துண்டாடியதன் ஊடாக தமிழ்ப் பெரும்பான்மை எள்ள வலயமொன்று பூடகமாக இல்லாதொழிக்கப் பட்டுள்ளதோ என்றே எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வாறு உருவாக்கப்பட்டதன் ஊடாக வலயம் ஐந்திலும், நான்கிலும் பெரும்பான்மைப் பலத்தை சகோதர இனம் பெற்றுக் கொண்டுள்ளது. எதிர்காலத்தில் வளப்பகிர்வு, நிதி ஒதுக்கீடு, வறுமைக் குறைப்பு நடவடிக்கைகள் போன்ற திவிநெகும சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவற்றிலும் கிழக்கிலுள்ள தமிழர்கள் இரண்டாந் தரப்பாக போய்விடும் ஆபத்தை இவ்வலய அமைப்பு உருவாக்கிவிட்டுள்ளதோ என்ற கேள்வி எழுகின்றது.

உண்மையான இணக்கம் வார்த்தைகளில் அல்ல நடவடிக்கைகளில் தான் இருக்கின்றது என்பதை இன்னும் ஆளும் தரப்பு உணரவில்லை. வேற்றான் உணர்த்தும் காலம் வெகுவிரைவில் இல்லை போல்தான் இருக்கின்றது.......

# இனத்தையோ மதத்தையோ அடிப்படையாக கொண்டு எந்தவொரு பாகுபாடும் காட்டமாட்டோம் – மட்டக்களப்பில் பிரதமர்



இனத்தையோ மதத்தையோ அடிப்படையாக கொண்டு தமிழ் மக்கள் மீது எந்தவொரு பாகுபாடும் காட்டாமல் சிங்கள மக்களுக்கு நாம் எவ்வாறான அபிவிருத்திகளை ஆற்றிவரு கின்றோமோ அவ்வாறான அபிவிருத்தி களையே அனைத்து சமுகத்தினரு க்கும் வழங்கி வருவதுடன் குறிப்பாக மட்டக்களப்பு மக்களுக்கும் வழங்கி வருகின்றோமென கூறிக்கொள்வதில் பெருமகிழ்ச்சியடைகின்றேன் என மட்டக்களப்பில் கடந்த 14.01.2014 ஆம் திகதி இடம்பெற்ற சிறப்பு தைப் பொங்கல் விழாவில் பிரதம அதிதியாக கலந்துகொண்ட பிரதமர் தமது உரையில் கூறினார்.

மட்டக்களப்பு மாமாங்கப் பிள்ளையார் ஆலயத்தில் லேக்கவுஸ் லிமிடெட்டின் பங்களிப்புடன் மீள்குடி யேற்ற பிரதியமைச்சர் வினாயகமூர்த்தி முரளிதரனின் அழைப்பின்பேரில் இலங்கை ஜனநாயக சோசலீச குடியரசின் பிரதமரான டி.எம்.ஜயரத்தன வின் பங்குபற்றலுடன் விசேட பூசையும் சிறப்பு பொங்கல் விழாவும் மிகவும் கோலாகலமாக இடம்பெற்றபோதே மேற்கண்டவாறு கூறினார்..

இந் நிகழ்விற்கு மாவட்ட அரசாங்க அதிபருட்பட அனைத்து திணைக்களங்களின் உயரதிகாரி களும்,லேக்ஹவுஸ் உயரதிகாரிகள், உத்தியோகத்தர்கள் மற்றும் பொதுமக்களும் கலந்து கொண்டதுடன், சிறார்களின் கலைநிகழ்வுகள் அரங்கோற்றப்பட்டதுடன், 1500 மூக்குக் கண்ணாடிகளும் இலவசமாக வழங்கி வைக்கப்பட்டதுடன் லேக்கவுஸ் நிறுவன த்தினால் குட்டிசுட்டியெனும் சிறுவர் சஞ்சிகை வெளியிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

## கிழக்கின் விருத்திக்கும் வளர்ச்சிக்கும் "கிழக்கில் முதலிடுவோம்" மாநாடு வழிவகுக்கும்.

கிழக்கு மாகாணத்தின் துரித அபிவிருத்திக்கும், மறுமலர்ச்சிக்கும் "கிழக்கில் முதலிடுவோம்" சர்வதேச மாநாடு அடித்தளமாக அமையுமெனத் தான் நம்புவதால் இம்மாநாட்டில் பங்குபற்றுவதற்காக கொழும்புக்கு வருகை தந்துள்ள மலேசிய நாட்டின் முன்னணி முதலீட்டாளர்களில் ஒருவரான பேராசிரியரும் கலாநிதியுமான டட்டோ சிறி கோபால கிருஸ்ணன் நேற்றுத் தெரிவித்தார்.

பாம் மரத் தோட்டம் மற்றும் சர்க்கரை துளசி செய்கைகளில் நாம் கிழக்கு மாகாணத்தில் முதலிடத் திட்டமிட்டுள்ளோம் என்றும் குறிப்பிட்ட அவர் அலங்கார மீன் வளர்ப்பு, கோழி வளர்ப்பு மற்றும் இறால் வளர்ப்பு ஆகிய கைத்தொழில்களில் முதலிடுவதற்கான வாய்ப்புகள் குறித்தும் கவனம் செலுத்தவுள்ளோம் எனவும் அவர் கூறினார்.


கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, கிராமிய கைத்தொழில் அபிவிருத்தி, மீன்பிடி மற்றும் சுற்றுலா அமைச்சின் ஏற்பாட்டிலான "கிழக்கில் முதலிடுவோம் சர்வதேச மாநாடு" இன்று 17ம் திகதி கொழும்பு தாஜ் சமுத்ரா ஹோட்டலில் நடைபெறுகின்றது. கிழக்கு மாகாண விவசாய, கால்நடை உற்பத்தி அபிவிருத்தி, மீன்பிடி, சுற்றுலா அமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தலைமையில் நடைபெறும் இம்மாநாட்டில் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ஸ பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார். இம்மாநாட்டில் கிழக்கில் முதலிடுவோம் என்ற தொனிப் பொருளில் இணைய தளமொன்றும் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது. முன்னூறுக்கும் மேற்பட்ட உள்நாட்டு வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இம்மாநாட்டில் பங்குபற்றுகின்றனர்.

இம்மாநாட்டில் மலேசிய நாட்டின் பி. என். ஜி. ஹோல்டிங்க்ஸ் தனியார் நிறுவனத்தை பிரதிநிதித்துவப் படுத்தி அந்நிறுவனத்தின் பணிப்பாளர் பேராசிரியர் டட்டோ சிறி கோபாலகிருஸ்ணனும், நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பேராசிரியர் எஸ். சப்ரினாவும் பங்குபற்றியுள்ளனர்.

இம்மாநாடு தொடர்பாக கோபால கிருஸ்ணன் தொடர்ந்தும் குறிப்பிடுகையில் இம் மாநாடு விசேட பண்பைக் கொண்டிருக்கும் ஓர் மாநாடு. இந்நாட்டின் ஒரு பிராந்தியத்தை அடையாளப்படுத்தியே இம்மாநாடு நடாத்தப்படுகின்றது. இதன் மூலம் கிழக்கில் முதலிடுவதற்கான வாய்ப்புகளையும், வளங்களையும், வசதிகளையும் எம்மால் இனங்கண்டுகொள்ள முடியும்.

அதேநேரம் இந்நாட்டிற்கு அதிகளவு முதலீடுகள் வந்து சேருவதற்கு இவ்வாறான மாநாடுகள் பெரிதும் உதவும். இம்மாநாட்டின் மூலம் முதலீட்டுக்கான வாய்ப்புகள் உள்ள துறைகள், அவற்றுக்குரிய ஊக்குவிப்புகள், உள்ளிட்ட பல விடயங்கள் குறித்த தெளிவுகளை எம்மால் பெறலாம் என நம்புகின்றோம். இம்மாநாட்டை நாம் பெரிதும் வரவேற்கின்றோம் என்றும் அவர் கூறினார்.

## "சம்பந்தன் காலத்திலேயே தீர்வு வேண்டும் - பிரிவு ஆரோக்கியமானதல்ல" - சென்னன்



வடக்கில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு எதிராக ஓர் அமைப்பு உருவாவது பாராளுமன்றத் தெரிவுக்குழுவை இலக்கு வைத்தே ஆகும். எனவே பிளவு என்ற அபாயத்துக்கு இடம் கொடுக்காது சம்பந்தன் காலத்திலேயே தமிழ் மக்களுக்கான தீர்வினைப் பெற்றுக் கொடுப்பதற்கு முயல வேண்டும். மாறாக பிளவுகள் ஏற்படுமானால் அது தமிழருக்கு ஆரோக்கியமானதாக அமையாது என்று இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் பி.வி. சென்னன் தெரிவித்தார்.

## "ஆயர்களைக் கைது செய்யுங்கள்"

### -இராவணபலய-

அமெரிக்க தூதுவரான ஸ்டீபன் ரப் பிடம் பிழையான தகவல்களை அளித்துள்ளார்கள் மன்னார் மற்றும் யாழ்ப்பாண ஆயர்கள். எனவே அவர்கள் இருவரையும் கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என்ற முறைப்பாட்டை ராவணபலய காவல்துறையிடம் கடந்த 16ம் திகதி கையளித்துள்ளது.

இம் முறைப்பாடு தொடர்பாகக் கவனம் செலுத்துவதாகத் தெரிவித்த காவல்துறைப் பேச்சாளர் "இவ்விடயம் தொடர்பான சட்ட ஏற்பாடுகள் எவை என்பதையிட்டு எமக்குத் தெரியாது. ஆனாலும் ஆயர்கள் இருவராலும் மேற்கொள்ளப்பட்ட கூற்றுக்கள் தொடர்பான சட்டவிரோத விடயங்களை பற்றி கவனிக்க வேண்டியுள்ளது" எனத் தெரிவித்தார்.

கொத்துக் குண்டுகள் தொடர்பாக ஆயர்கள் தூதுவருடன் அரட்டையடித்துள்ளார்கள். ஏனெனில் இராணுவத்திடம் கொத்துக் குண்டுகள் இல்லை. இரசாயனப் பாவனை நடந்ததாகவும் ஆயர்கள் தெரிவித்து ள்ளனர். இரசாயனம் பாவிக்கப்பட்டால் சிரியாவில் நிகழ்ந்தது போல் ஆடு, மாடுகளும் அல்லவா இறந்திருக்க வேண்டும் என்று ராவண பலயவின் பொதுச் செயலர் சதாதிஸ்ஸ தேரர் தெரிவித்துள்ளார்.

## கிழக்கில் 50 கிலோமீற்றர் வேகத்தில் காற்று வீசும் ஆனால் தாழமுக்க முகாந்திரம் இல்லை

கிழக்கிலும், வட மத்திய மாகாணங்கள் மற்றும் அம்பாந்தோட்டை மாவட்டத்திலும் தொடர்ச்சியாக மழை பெய்யும் அத்துடன் மலையகப் பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் சப்ரகமுவ மற்றும் மத்திய மாகாணங்களில் இடைக்கிடை மழை பெய்யும் என வானிலை அவதான நிலையத் தகவல் தெரிவிக்கின்றது.

இடியுடன் கூடிய மழை காரணமாக காற்றின் வேகம் அதிகரிக்கும், மின்னல் தாக்கங்களிலிருந்து மக்கள் தம்மைப் பாதுகாத்துக் கொள்வது அவசியமாகும்.

கடல் பிரதேசம் தொடர்பில் அத் தகவல் குறிப்பிடும் போது காங்கேசன் துறையிலிருந்து திருகோணமலை அம்பாந்தோட்டை மன்னார் புத்தளம் கடற்பரப்புகளில் மழையுடன் சுமார் 50 கிலோ மீற்றர் வேகத்தில் காற்று வீசும் இதனால் கடல் கொந்தளிப்புகள் ஆங்காங்கே ஏற்படும் எனவும் தெரிவிக்கின்றது.

## கிண்ணியாவில் ஒருங்கிணைப்புக்குழு கூடியது

கிண்ணியா பிரதேச ஒருங்கிணைப் புக் குழுக் கூட்டம் 16ம் திகதி கிண்ணியா பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் நடைபெற்றது.

ஒருங்கிணைப்புக் குழுத் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீகின் தலைமையில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் அப்துல் மஜீத், மாகாண சபை உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்ற தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முஸ்லிம்கள் தொடர்பாகவும் விசாரணை வேண்டும்

வடக்கில் முஸ்லிம்கள் மீது நடாத்தப்பட்ட இன வன்முறைகள் தொடர்பாக விசாரணைகளை அரசு முன்னெடுக்க வேண்டும் என்ற கோரிக்கை எழுப்பப்பட்டுள்ளது. இக் கோரிக்கையை முஸ்லிம் காங்கிரஸ் எழுப்பியுள்ளதாக அக்கட்சியின் செயலாளர் ஹசன் அலி தெரிவித்துள்ளார்.

இறுதியுத்தத்தில் முஸ்லிம்கள் நேரடியான இழப்புக்கள் எதனையும் சந்திக்காத போதும் இனவன்முறைகளில் கொல்லப்பட்ட சுமார் 20,000 முஸ்லிம்கள் தொடர்பாகவும், வடக்கிலிருந்து வெளியேற்றப்பட்ட ஆயிரக்கணக்கான முஸ்லிம்கள் தொடர்பாகவும் சனாதிபதி ஆணைக்குழு மூலமான விசாரணையொன்றை தாம் கோருவதாக அவர் தெரித்தார்.

## உண்மை மற்றும் இணக்க ஆணைக்குழுவில் நம்பிக்கை இல்லை

இலங்கையின் இனப்பிரச்சனைக்குத் தீர்வாக முன்மொழியப்படும் உண்மை மற்றும் இணக்க ஆணைக்குழுவில் தமக்கு நம்பிக்கை இல்லை என ஐக்கிய தேசியக் கட்சி தெரிவித்துள்ளது.

ஏற்கனவே நியமிக்கப்பட்டு தமது முன்மொழிவுகளையும் வழங்கியுள்ள இலங்கை கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளே இன்னமும் நிறைவேற்றப்படாமலிருக்கும் இவ் வேளையில் மற்றொரு ஆணைக்குழு தேவையற்றது என ஐ.தே.க தெரிவித்துள்ளது.

## அரசின் அலுவலகப் பற்றற்ற காவல்துறையாக "சிஹலநாவய"

இலங்கையின் அரசின் அலுவலகப்பற்றற்ற காவல்துறையாகத் தாம் செயற்படத் போவதாக "சிஹலநாவய" அமைப்பு தெரிவித்துள்ளது. தமது நோக்கங்களில் ஒன்றாக அதிகாரப் பிறள்வில் ஈடுபடும் அரச அலுவலரை திருத்தும் நடவடிக்கையும் இருப்பதாக அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

அரச அமைச்சர்கள் மற்றும் பாராளுமன்ற அங்கத்தவர்கள் மேற்கொள்ளும் ரஞ்ச நடவடிக்கைகளை எதிர்த்து கண்டியில் இருந்து கொழும்புவரை பாதயாத்திரை யொன்றை நடாத்தும் முயற்சியிலும் "சிஹலராவய" ஈடுபடப்போவதாக அவ் அமைப்பு தெரிவித்துள்ளது.

## மத்தளவில் மீண்டும் புறப்புத் தடை

துபாயைத் தளமாகக் கொண்டியங்கும் சிக்கனக் கட்டண விமானமொன்று அவசர அவசரமாக மத்தளை இராசபக்ச விமானமொன்றின்று அவசர அவசரமாக மத்தளை இராசபக்ச விமானத்தளத்தில் தரையிறக்கப்பட்டுள்ளது. அவ் விமான நிலையத்திலிருந்து மேலெழும்பிய அவ் விமானத்தை மயில்கள் கூட்டமொன்று வானில் நேரடியாக எதிர்கொண்டதை அடுத்தே இவ்வார தரையிறக்கம் நிகழ்ந்துள்ளது. 188 பயணிகளுடனும் விமானச் சிப்பந்திகளுடன் இவ்விமானம் ஐக்கிய அரபு இராச்சியம் நோக்கிப் பறக்க முற்பட்ட போதே இந் நிகழ்வு நடந்துள்ளது.

## செலவு நாளொன்றுக்கு 72 மில்லியன்

நுரைச்சோலை அனல்மின் நிலையம் பூட்டப்பட்டுள்ளதால் நாளொன்றுக்கு 72 மில்லியன் ரூபாய்களை செலுத்தி எரிமின்வலுவை இலங்கை மின்சாரசபை பெற்றுவருகின்றது. இவ்வருடத்தில் மட்டும் 432 மில்லியன் ரூபாய்களை இலங்கை மின்சாரசபை இழந்துள்ளது.

அத்துடன் மின்நிலையத்தை ஆரம்பிக்கும் ஒவ்வொரு தடவையும் 12 மில்லியன் ரூபாய்கள் மேலதிகச் செலவாக ஏற்படும். அதன்படி 2014ல் 48 மில்லியன் ரூபாய்களை மின்சபை தற்போதுவரை இழந்துள்ளது.

## பரீட்சிப்பில் உள்ள சிறைச்சாலை அறிக்கை

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நடைபெற்ற கலவரம் தொடர்பான அறிக்கை தற்போதும் பரீட்சிப்பில் உள்ளதாக சிறைச்சாலை அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பரீட்சிப்பின் பின்னரே அவ் அறிக்கை சனாதிபதியிடம் கையளிக்கப்படும் எனத் தெரிவித்த அவர் எவரையும் குறிப்பாக அவ் அறிக்கை குற்றஞ்சாட்ட வில்லை எனத் தெரிவித்துள்ளார்.

## இந்திய உதவியை எதிர்பார்க்கும் மின்சாரசபை

நுரைச்சோலை அனல்மின்நிலையப் பணி முடக்கப்பட்டுள்ளதை அடுத்து எழுந்துள்ள மின் மட்டுப்பாட்டு நிலையைச் சீராக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ள மின்சாரபை இந்திய உதவியை எதிர்பார்க்கும். வாய்ப்பொன்றையும் கொண்டுள்ளதாக தெரிகின்றது. கடலில் இருந்து நீர்வழங்கும் குழாய்கள் 16000 பணிகள் முடக்கப்பட்டுள்ளன.

மிகவும் மெல்லிய குழாய்களாக அவை இருப்பதாலேயே இவ்வாறு நிகழ்வதாக தெரிவித்துள்ளார். மின்சபையின் பிரதிப் பொது முகாமையாளர் தவறைக் கண்டுபிடித்துத் நிருத்துவதற்கு இந்திய உதவியை நாடுவதும் ஒரு வாய்ப்பாக இருப்பதாக அவர் தெரிவித்தார்.

## கடவுச்சீட்டில் விரலடையாளம்

இவ்வருடம் முதல் வழங்கப்படவுள்ள கடவுச்சீட்டில் விரலடையாளமும் உட்படுத்தப்படும் என குடிவரவு குடியகழ்வுக் கட்டுப்பாட்டாளர் நாயகம் தெரிவித்துள்ளார். எதிர்வரும் ஏப்ரல் மாதம் தொடக்கம் இந் நடவடிக்கை ஆரம்பமாகும் என்றார் அவர்.

## 2016ல் இலத்திரனியல் அடையாள அட்டை

15 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் 2016ம் முதல் வழங்கப்படும். எனவும் அதற்காக கைவிரல் அடையாள மற்றும் இரத்த மாதிரி ஒப்புமைகள் (ஸ்கான்) பெறப்படும் அடையாள அட்டையில் உட்புகுத்தப்படும் என்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# உள்ளத்தில் உள்ள அமைதி

ஒவ்வொரு மனிதனின் உள்ளத்தின் உள்ளேயும் அற்புதமான ஆவல் ஒன்று உள்ளது. நம் ஒவ்வொருவரின் உள்ளேயும், பாலைவனத்தில் உள்ளவித் தொன்று போல அமைதி மலர்வதற்காக காத்திருக்கிறது.

அது ஒரு வேறு பாட்டையும் காணப்பிக்கில்லை. நாம் செல்வந்தரோ ஏழையோ என்பதைப் பற்றியோ, நாம் எம் மதத்தைச் சார்ந்தவர்கள் என்றோ, நாம் எந்த நாட்டில் வசிக்கிறோம் என்றோ அது பொருட்படுத்து வதில்லை.

அது அக்கறை கொள்வதெல்லாம் தண்ணீரைப் பற்றித்தான். வித்துப் போல, தண்ணீர் வரும் நேரம் வரை அது காத்துக் கொண்டே இருக்கிறது. எம் உள்ளத்தில், அதுகாத்துக் கொண்டிருக்கிறது. அது விரும்புவது நிறைவைத் தவிர வேறு ஒன்றுமல்ல.

நமதுவாழ்வில் ஊடுருவும் பிரச்சனைகளால் குழம்பமடை யாமல், மீண்டும் ஒரு முறை முழுமையாக இருப்பதை உணரவிரும்புகிறது. அமைதி ஒவ்வொரு மனிதனிலிருந்தும் ஆரம்பிக்கிறது. அமைதி என்பது ஒவ்வொரு உள்ளத்திலும் அனுபவிக்கப்பட வேண்டிய ஒன்று.

அமைதி என்பது போரில்லாத ஒரு நிலையல்ல. அமைதி ஸ்தாபனங்களுடன் தொடர் புடையதல்ல. போரை ஆரம்பிப்பது மக்கள் தான். அமைதிக்கு மக்கள் மதிப்பு அளித்தால், அப்போது அமைதி நிலவும்.

நாம் தேடும் அமைதி எமக்குள்ளேயே இருக்கின்றது. அங்குதான் அதைநாம் கண்டுகொள்வோம்.

அமைதி ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் இருக்கிறது. நமது வாழ்வில் நமக்கு அமைதி தேவையாயின் அது நிச்சயமாக சாத்தியமான தேயாகும்.நாம் அமைதியைஉருவாக்கத் தேவையில்லை.

நாம் அதுஉள்ளேவர அனுமதிக்க வேண்டும். நிறையமக்கள் அமைதியை கொண்டுவர முயற்சிசெய்து கொண்டிருக்கிறார்கள். அமைதி ஏற்கெனவே உள்ளது. அது எல்லா மனிதர்களின் உள்ளத்திலேயும் குடிகொண்டுள்ளது.

அது எப்போதும் இருந்தது. எப்போதும் இருக்கும். நம் உள்ளே அளவிடமுடியாத அமைதி இருக்கிறது. அளவிடமுடியாத ஆனந்தம் இருக்கிறது. இந்த உண்மை பழமையிலும் இல்லை. புதுமையிலும் இல்லை.

அதுமேலே உள்ள சொர்க்கத்திலும் இல்லை. ஆனால் அது நம் உள்ளே உள்ள சொர்க்கத்தில் இருக்கிறது. நல்லது, கெட்டது, நடைபெறப்போகும், நடைபெறமாட்டாத எல்லாமே,நிகழ் இருக்கும் போர்கள், உருவாக இருக்கும் அமைதி, இவை எல்லா வற்றையும் ஒன்று சேர்த்தாலும் கூட, அது ஒரு மனிதனின் உயிர் வாழ்வை விடமுக்கியத்துவத்தில் குறைந்ததே ஆகும்.

இது நமது நேரம். இது உயிரோடு இருப்பதற்கான நமது வாய்ப்பு. இந்த மூச்சு எல்லோருக்குள்ளேயும் வருகிறது. மிக மெது வாகவும், மிக அமைதியாகவும், ஒருசெய்தியை அறை கூவுகிறது. மிகபலமாகவும் தெளிவாகவும் கூறுகிறது.

அந்த செய்திஎன்ன? இத்தருணத்திலேயே, இப்போதே உங்கள் வாழ்வில் நிறைவடையுங்கள், இப்போதே உங்கள் வாழ்வில் ஆனந்தத்தைகண்டு கொள்ளுங்கள், அமைதியை கண்டு கொள்ளுங்கள் என்பதுதான் அந்தச் செய்தியாகும்.

நான் என்ன செய்ய வேண்டும்? எனப் பலர் கேட்கின்றனர். நான் ஏதாவது ஒன்றைச் செய்ய வேண்டுமென்பதல்ல செய்தவற்றை அகற்றும் செயல் முறை ஆகும். ஏற்கனவேநாம் கற்றுக் கொண்ட கருத்துகளை அகற்றும் செயல் முறை ஆகும்.

நாம் என்ன செய்ய வேண்டும் என்பதல்ல கேள்வி. விஷயங்களை அகற்றுவது தான் நடைபெற வேண்டும். அது எவ்வாறான செயல்முறை? ஒரு உதாரணத்தைப் பார்ப்போம்.

மிகவும் அழகான ஒரு ஓவியம் தீட்டப்பட்டிருக்கின்றது, ஆனால் ஒருவரும் அதனைப் புரிந்து கொள்ளவில்லை என்பதைப் போன்றதாகும்.

மக்கள் வந்து அந்த ஓவியத்தின் மேல் பலவர்ணங்களைப் பூசினார்கள். அதன் மேல் மேலும் வர்ணங்களைப் பூசியபின், தமது சொந்த ஓவியங்களை வரைந்தார்கள்.

அதில் மென்மேலும் பல ஓவியங்களை வரைந்தார்கள். இப்பொழுது அந்தப் படத்தில் உள்ளவர்ணங்களை, நாம் மெதுவாக அகற்றத் தொடங்கும் போது, அங்கு நாம் காண்பது,நமக்கு இன்ப அதிர்ச்சியாக இருக்கும்.

ஏனெனில் அது போன்ற ஒரு அற்புதமான ஓவியம் ஒரு போது மேதீட்டப்படவில்லை. அது தான் நாம். நாம் தான் அந்த பொக்கிஷப் பெட்டகம். இது ஏறத்தாழ ஒரு சிற்பியின் வேலையைப் போன்றது.

கற்பாறையின் உள்ளே ஒரு சிலைவடிவம் உள்ளது. ஒருசிற்பிக்கு அது தெரியும். அவன் தேவையற்ற பகுதிகளை அகற்றுவதன் மூலம் அந்தசிற்பத்தைவெளிக் கொணர்கின்றான்.

தேவையற்ற பகுதிகள் அகற்றப்படும் பொழுது ஒரு அழகான, அற்புதமான சிலை தோன்றுகின்றது. முன்பு வெறும் ஒரு கற்பாறை கடினமான தோற்றம் உடையது. ஆனால் இந்தச் சிலையோ அழகாகவும், மென்மையாகவும் இருக்க முடியும். என் வாழ்விலும் இதற்கு இணையான ஒரு தன்மையை நான் காண்கின்றேன்.

இது புதிதாக ஒன்றை உருவாக்குவதுபற்றியது அல்ல, மாறாக எனக்கு தேவைப்படாத, மற்றய விஷயங்களை அகற்றுவதைப் பற்றியது. இந்த வாழ்க்கை எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்குத் தடையாக உள்ள விஷயங்களை அகற்றுவதைப் பற்றியது.

இது அந்த விஷயங்களுடன் போராடுவதைப் பற்றியது அல்ல. வெற்றி தோல்வி என்பதைப் பற்றியது அல்ல. இது அந்தச் சிற்பத்தை வெளிப்படுத்துவது பற்றியது. என் உள்ளே உள்ள சாந்தம், ஆழ்ந்த அமைதி என்பவற்றை வெளிக் கொணர்வதைப் பற்றியது.

எனக்கு அது வேண்டும், இது தேவை, எனக்கு இது நிச்சயமாக தேவையெனப் பல விஷயங்களை நான் ஆசைப்படலாம். ஆயினும் எனக்கு எது தரப்பட்டுள்ளதோ அது தான் தரப்பட்டிருக்கிறது. இது கண்டு கொள்வதைப் பற்றிய பயணம்.

உருவாக்கு வதைப் பற்றியது அல்ல. நம்மிடமுள்ள வெறுமை அகலும் பொழுது, நம்மிடம் எல்லாமே இருக்கிறது. குறைஒன்றுமே இருக்காது. இன்னொருவிதமான நிரம்புதல் ஏற்படத் தொடங்குகின்றது. இது சாந்தத்தை உணரும் நிலையாகும். இது தான் ஆழ்ந்த அமைதியில் இருக்கும் உணர்வு. அங்கு இரு தன்மை இல்லை. ஒரேநிலைதான் உள்ளது. இந்தத்தருணம்தான்எல்லாமாக உள்ளது. எடை போடுவதற்கு அங்கு எதுவுமே இல்லை. அங்கே கோபம் இல்லை. சந்தேகங்களும் இல்லை. உள்ளம் நிரம்பி இருக்கின்றது.

பிரேம் ராவாட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் சிந்திக்கும் வரை அரசியல்வாதிகள் மாற மாட்டார்கள்

இரண்டு மாகாண சபைகளுக்கன தேர்தல்கள் விரைவில் நடைபெறவிருக்கின்றன. இவற்றின் போது மக்கள் நாட்டில் இது வரை நடைபெற்ற வற்றையும் அரசியல் கட்சிகளின் கொள்கைகளையும் கருத்திற் கொண்டு வாக்களிப்பார்களா அல்லது சொந்தக் கோபதாபங்கள், குறுகிய லாப நோக்கங்கள் போன்றவற்றை கருத்திற் கொண்டு வாக்களிப்பார்களா என்பது கேள்விக்குறியாக இருக்கிறது.

மேல் மாகாண சபையும் தென் மாகாண சபையுமே அனேகமாக இம் மாதம் 12ஆம் திகதி கலைக்கப்படவிருப்பதாக செய்திகள் கூறுகின்றன. இது தாம் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை அங்கீகரிக்கின்றோமா இல்லையா என்பதை அரசாங்கத்திற்கு அறிவிக்க மக்களுக்கு கிடைக்கும் அரிய சந்தர்ப்பமாகும்.

ஏனெனில் எந்தக் கட்சிக்கு வாக்களித்து பதவியில் அமர்த்த வேண்டும் என்று சிந்திப்பது இப்போதைய நிலையில் நடைமுறை சாத்தியம் இல்லை. ஏனெனில் பல முக்கிய கட்சிகள் வெற்றி பெறும் நிலையில் இல்லை. அதன் காரணமாக இந்த மாகாண சபைத் தேர்தல்களின் போது பாரிய மாற்றங்களை எதிர்ப்பார்க்க முடியது.

எனவே தான் பதவியில் இருக்கும் அரசாங்கத்தின் கொள்கைகளையும் நடவடிக்கை களையும் தாம் அங்கீகரிக்கின்றோமா என்பதை சிந்தித்து மக்கள் வாக்களிக்க வேண்டியுள்ளது. நாட்டுக்கு எப்போதும் பலமான எதிர்க்கட்சியொன்று அவசியமாக இருக்கிறது. நிமல் சிறிபால டி சில்வா போன்ற அரசாங்கத்தின் அமைச்சர் களும் அடிக்கடி அதனை கூறுகி றார்கள்.

ஏனெனில் அரசாங்கத்திற்கு நாடாளுமன்றத்தில் இருக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலம் சில வேளைகளில் அவர்களையே பாதிக்கின்றது போலும். அவர்களை பாதிக்கின்றதோ இல்லையோ அது மக்களை பாதிக் கின்றது என்பது உண்மையே. முறையான குற்ற விசாரணை முறையொன்று இல்லாமல் தமக்கி ருக்கும் பெரும்பான்மை பலத்தைக் கொண்டு முன்னாள் பிரதம நீதியரசர் ராணி பண்டாரநாயக்கவை பதவி நீக்கம் செய்தமை அதற்கு உதாரணமாகும்.

அரசாங்கம் தாம் வழங்கிய வாக்குறுதிக்கு அமைய நிறைவேற்று ஜனாதிபதி முறையை ரத்துச் செய்யாது ஒருவருக்கு அப்பதவியில் இரண்டு முறைகளுக்கு மேல் இருக்கக் கூடிய வகையில் 18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தை நிறைவேற்றியமை மற்றொரு உதாரணமாகும். அதிகார பரவலாக்கலைப் பற்றி இந்தியாவுக்கும் வெளி உலகுக்கும் பல்வேறு வாக்குறுதிகளை அளித்து வரும் அரசாங்கம் மாகாண சபைகள் பெறக்கூடிய மிகக் கூடுதலான வருமானமாக இருந்த மொத்த விற்பனை வரியையும் அந்த அரசியலமைப்புத் திருத்தத்தின் மூலம் மத்திய அரசாங்கத்திட்ம் பெற்றுக் கொண்டது.

அண்மையில் அரசாங்கம் இந்த மூன்றில் இரண்டு பெரும்பான்மை பலத்தை பாவித்து மாகாண சபை முறையையே ரத்துச் செய்ய முற்பட்டது.இந்திய அரசாங்கமே அதனை தடுத்து நிறுத்தியது.எனவே பலமான எதிர்க் கட்சியொன்று அவசியம் எனபது ஏற்றுக் கொள்ளக் கூடியதே.ஆனால் அவ்வாறானதோர் எதிர்க்கட்சி உருவாகும் நிலைமை நாட்டில் இல்லை.

பிரதான எதிர்க்கட்சியாக கருதப்படும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர்கள் கட்சித் தலைமைக்காக சண்டையிட்டுக் கொண்டு இருக்கிறார்கள்.

ஆளும் கட்சியில் இரண்டாம் மட்டத்தில் இருப்பதைப் பார்க்கிலும் எதிர்க்கட்சியின் தலைவராக இருப்ப தெமேல் என்று தான் அக் கட்சியின் பல தலைவர்கள் சிந்திக்கிறார்கள் போலும். எனவே மக்களும் ஊடகங்களும் தான் இன்று எதிர்க்கட்சியின் வகிபங்கினை ஆற்ற வேண்டியுள்ளது.

மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளை தீர்த்து அவர்களுக்கு சேவை செய்வதற்கான சிறந்தவர்களை தேர்வு செய்வதே தேர்தல்களின் நோக்கமாகக் கொள்ளப்படுகிறது. ஆனால் இப்போது இலங்கையில் அவ்வாறானதோர் நிலைமை இல்லை. நல்ல முறையிலோ அல்லது கெட்ட முறையிலோ எவ்வகையிலாவது பதவிக்கு வந்து பணம் சம்பாதிப்பதே அரசியல்வாதி களினது நோக்கமாக தெரிகிறது. எனவே எவ்வகையிலாவது தேர்தலில் வெற்றி பெறுவதற்கு உதவக்கூடியவர்களையே அரசியல் கட்சிகள் வேட்பாளர்களாக தெரிவு செய்கின்றன.

இதன் காரணமாக போதைப் பொருள் விற்றேனும் பணம் சம்பாதித்துள்ள செல்வந்தர்கள், குண்டர்கள் போன்றவர்களுக்கும் அரசியலில் வாய்ப்பு கிடைக்கின்றது.

இப்போது அரசியல்வாதிகள் ஜனரஞ்சகமான விளையாட்டு வீரர்கள் மற்றும் சினிமா, தொலைக்காட்சி நடிகர்கள் போன்றவர்களையும் நாடாளுமன்ற உறுப்பினர்களின் நெருங்கிய உறவினர்களையும் வேட்பாளர்களாக நிறுத்தி வருகிறார்கள்.

அவர்கள் நாட்டை அபிவிருத்தி செய்ய வேண்டும் என்று நினைப்பவர்களாக இருந்தால் இவ்வாறானவர்களை வேட்பாளர்களாக நிறுத்த மாட்டார்கள். ஏற்கனவே பல சினிமா நட்சத்திரங்கள் ஆளும் கட்சியிலும் எதிர்க்கட்சியிலும் இருக்கிறார்கள். போதாக்குறைக்கு மேலும் பலர் இருகட்சிகளிலும் சேர்கிறார்கள். ராஸ்கல் என்ற தெலுங்கு படத்தில் நடித்து தென்னிந்தியாவிலும் பெயர் பெற்ற பிரபல சிங்கள நடிகை நதீ'ா ஹேமமாலி அன்மையில் ஐக்கிய தேசியகட்சியில் சேர்ந்தார்.

அவர் தென் மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடவிருக்கிறார். தமக்கு ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டணியன் சார்பில் தேர்தலில் போட்டியிட அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என முன்னாள் இலங்கை அழகு ராணியும் சினிமா நட்சத்திரமுமான கயேஷா பெரேரா கூறியிருக்கிறார்.

ஏற்கனவே பிரபல நடிகை கீத்தா குமாரசிங்க ஆளும் கட்சியன் பெந்தர எல்பிட்டிய தொகுதி அமைப்பாளராக இருக்கிறார். அனார்கலி ஆகர்ஷா மற்றும் உபேக்ஷா சுவர்ணமாலி ஆகிய நடிகைகளும் ஏற்கனவே களத்தில் இருக்கிறார்கள். தோல்வியே வாழ்க்கை என்ற நிலையில் செய்வதறியாது இருக்கும் ஐ.தே.க. அவ்வாறானவர்களை தேர்ந்தெடுப்பதில் ஏதாவது நியாயத்தை காணலாம். ஆனால் ஆளும்கட்சி எதற்காக அவ்வாறானவர்களை தேர்ந்தெடுக்க வேண்டும்? வெறும் தேர்தல் வெற்றியை மட்டுமே அக் கட்சி வேட்பாளர்களிடம் எதர்ப்பார்க்கிறது என்பதும் வேட்பாளர்களிடம் பொருளாதார பிரச்சினைகளையோ அல்லது இனப்பிரச்சினையையோ தீர்ப்பதற்கான் அறிவு, ஆற்றல் மற்றும் தேவை இருக்க வேண்டும் என்று அரசியல் கட்சிகள் சிந்திக்காமையையுமே இது எடுத்துக் காட்டுகிறது.

மறுபுறத்தில் [illegible] அரசியல்வாதிகளின், குறிப்பாக நாடாளுமன்ற உறுப்பினர்களினதும் அமைச்சிர்களினதும் நெருங்கிய உறவினர்களை தேர்தலில் நிறுத்து கிறார்கள். சில தமிழ் மற்றும் முஸ்லிம் அரசியல்வாதிகளும் இவ்வாறு செய்கிறார்கள்.

பிரதி அமைச்சர விநாயக மூர்த்தி முரளிதரனின் சகோதரியும் காலஞ்சென்ற ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் டீ. மகேஸ்வரனின் மனைவியும் சகோதரரும் அதற்கு உதாரணமாகும். இவ்வாறானவர்களை போட்டியில் நிறுத்துவதனால் மற்றைய வேட்பாளர்களைப் பார்க்கிலும் அவர்களுக்கு கூடுதலான விளம்பரம் கிடைத்துவிடுகிறது. மறுபுறத்தில் அரசியல் என்பது பணம் சம்பாதிக்கும் கருவியாக இருப்பதனால் உறவினர்களையும் அரசியலில் சேர்த்துக் கொள்ள அரசியல் வாதிகள் முயற்சிக்கிறார்கள்.

ஆனால் இன்று நாட்டில் உள்ள முக்கிய பிரச்சினைகளை அறிந்து அவற்றை திர்ப்பதற்காக குரல் கொடுக்கக்கூடியவர்களே அரசியலுக்குத் தேவையாக இருக்கிறது. பொது மக்கள் இதனை உணர்ததாக தெரியவில்லை. அவர்களும் சினிமா நட்சத்திர ங்களை வேட்பபாளர்களாக கண்டால் கண்ணை மூடிக் கொண்டு அவர்களுக்கு வாக்களிக்கிறார்கள்.

உதாரணமாக, கடந்த பொதுத் தேர்தலின் போது கம்பஹ மாவட்டத்தில் போட்டியிட்ட ஐ.தே.க.வின் அப்போதைய பிரதித் தலைவர் கரு ஜயசூரியவை விட முதன் முறையாக தேர்தல் ஒன்றில் போட்டியிட்ட உபேக்ஷா சுவர்ணமாலி என்ற பிரபல நடியை விருப்பவாக்குகளை பெற்றார்.

நாட்டில் சமயப் பாகுபாடு இடம்பெறுகிறது என்றும் சமயச் சிறுபான்மையினர் தொடர்ந்து இம்சிக்கப்பட்டு வருகிறார்கள் என்றும் ஐ.நா.வே தொடர்ந்து கூறிவரும் நிலையிலும் அவ்வாறானவர்கள் பின்புலமாக இருக்கும் கட்சிகளை சமயச் சிறுபான்மை இனமாக இருக்கும் மக்களும் ஆதரிக்கிறார்கள்.

மக்களிடமுள்ள இந்த நிலைமை மாறும் வரை அரசியல்வாதிகளிடம் நல்ல மாற்றத்தை எதிர்ப்பார்க்க முடியாது.மக்களில் மாற்றம் ஏற்படும் என்ற நிலை ஏற்பட்டால் இந்த இம்சையாளர்களும் மாற வேண்டிய நிலை ஏற்படும்.

**எம்.எஸ்.எம். ஐயூப்**

(நன்றி- தமிழ்மிரர்)

## சவால்மிக்கதாக......

இலங்கை ஆளும் தரப்பினரோ இது ஓர் சிங்கள பௌத்த நாடு என்ற கோட்பாட்டின் அடிப்படையிலேயே தங்கள் அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகின்றனர் என தமிழ் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் , மட்டக்களப்பு மாவட்ட கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களும் கலந்துகொண்ட பத்திரிகையாளர் சந்திப்பின்போது வெளியிடப்பட்ட அறிக்கையிலேயே அவ்வாறு தெரிவித்துள்ளனர்.

இச் சந்திப்பில் பாராளுமன்ற உறுப்பினர்களாகியபொன்.செல்வராசா, பா.அரியநேத்திரன் மற்றும் மாகாண சபை உறுப்பினர்களாகிய கே.துரைராஜசிங்கம், மா.நடராசா, கோ.கருணாகரன், இரா.துரைரெட்ணம், பிரசன்னா இந்திரகுமார், ஞா.கிருஸ்ணப்பிள்ளை ஆகியோர் கலந்துகொண்டனர். இவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டள்ளதாவது,

இலங்கையின் வடகிழக்குவாழ் தமிழ்பேசும் மக்களின் ஜனநாயக உரிமைகள் படிப்படியாக விழுங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன. குறிப்பாக போர் முடிந்ததன் பின்னைய காலங்களில் இந்த மீறல் நடவடிக்கை உச்சநிலை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கின்றது. கடற்கரைப் பகுதிகளில் கட்டப்படும் உல்லாச விடுதிகள் தமிழர்தம் கலாசாரச் சீரழிவுக்குக் காரணமாய் அமைவதோடு , இங்குள்ள வலைப் பாடுகள் வெளிமாவட்டத்தைச் சேர்ந்த பெரும்பான்மை இன மீனவர்களால் அதிகார முனைப்போடு கைப்பற்றப்பட்டுக் கைமாறிப் போவதால் எமது மீனவர்களின் வாழ்வாதாரமும் மிக்ப் பெரும் சவாலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது.

நிலப் பிரதேசத்தைப் பொறுத்த வரையிலே வெளிமாவடத்தைச் சேர்ந்த பெரும்பானமையினத்தினரால் மேற்கொள்ளப்படும் அத்துமீறிய குடியேற்றமும் - மேய்ச்சல்தரை அபகரிப்பும், கரும்புச்செய்கை, சுற்றாடல் அமைச்சின் வர்த்தமானிப் பிரகடனம், புதிதாய் முளைக்கும் பௌத்த விகாரைகள், நீக்கமற நிறைந்துள்ள இராணுவத்தினரதும் , புலனாய்வாளர்களதும் நடவடிக்கைகள் என்பவற்றால் எமது மக்களின் சட்ட மற்றும் ஜனநாயக உரிமைகளைக் காலில் போட்டு மிதிக்கப்படுவதோடு அவர்தம் இருப்பே கேள்விக்குரியதாக்கப்பட்டுள்ளது.

ஆத்துமீறிய குடியேற்றமும் - மேய்ச்சல்தரை அபகரிப்பும்.

எமது மாவட்டத்தின் போரதீவுப்பற்றுப் (வெல்லாவெளி), மண்முனை தென்மேற்கு(பட்டிப்பளை),மண்முனை மேற்கு(வவுணதீவு), ஏறாவூர்ப்பற்று (செங்கலடி), கோரளைப்பற்று தெற்கு (கிரான்),கோரளைப்பற்று வடக்கு (வாகரை) ஆகிய ஆறு பிரதேச செயலகங்களினதும் அம்பாறை மற்றும் பொலனறுவை மாவட்ட எல்லைகளில் வெவ்வேறு பின்னணிகளோடு அத்துமீறிக் குடியேறிப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளும் வெளிமாவட்ட பெரும்பான்மையினரால் ஏழாயிரத் துக்கு மேற்பட்ட ஏக்கர் நிலப்பரப்பு (7,000) காடழிப்பு மற்றும் மேய்ச்சல் தரையைக் கைப்பற்றல் என்னும் நடவடிக்கைகளால் அபகரிக்கப்பட் டுள்ளது.

இதன்காரணமாக இரண்டிலட்சத்து ஐம்பதாயிரத்துக்கு(250,000) மேற்பட்ட கால்நடைகளைப் பரமரித்து வந்த மேய்ச்சல்தரை அபகரிக்கப்பட்டு கால்நடை வளர்ப்பாளர்கள் குறுகிய நிலப்பரப்புக்குள் முடக்கப்பட்டுள்ளதோடு எமது மக்கள் எதிர்காலத்தில் குடியேறவும் பயிர்செய்யவும் நிலமற்றவர்களாகும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

கால்நடை வளர்ப்போரோ கால்நடைகள் அத்துமீறியோரால் சுடப்படுவதால் பொருழிழப்புக்கும் சுருக்கிடப்படுவதால் அவற்றை மீட்பது தொடர்பில் பணஇழப்புக்கும் உள்ளாக்கப்படுகின்றார்கள்.

இயற்கைக் காடுகள் அழிக்கப்படுவதால் யானைகள் ஊரையும் வயல் நிலங்களையும் நோக்கி நகர்ந்து பயிர் , உயிர் , பொருள் அழிவுகளை ஏற்படுத்துகின்றன.அத்துடன் மழை பொய்ப்பதற்கும் வரட்சி ஏற்படுவதற்கும் இது காரணமாயமைகின்றது.

மேற்குறித்த அத்துமீறியோர் தொடர்பில் அர்த்தபுஷ்டியுள்ள சட்டநடவடிக்கை மேற்கொள்ள முடியாதபடி பிரதேச செயலகம், மாவட்டச் செயலகம், வனஇலாகா மற்றும் சுற்றாடல் பாதுகாப்புப் பகுதியினர் செயலற்றிருப்பது இவற்றின் பின்னணியில் மறை முகமான அதிகார பலமேதும் உள்ளதா என்ற சந்தேகத்தை ஏற்படுத்துகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருகோணமலையிற் சோழர்கள்

திருகோணமலையில் சோழராட்சியின் ஆதாரப்படுத்தல்களாக அவர்களது மெய்க்கீர்த்திகளைச் சொல்லும் மூன்று சாசனங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அவற்றுள் ஒன்று சுவாமி மலையினை அடுத்துள்ள கடற்பகுதியில் சிவலிங்கத்துடன் மீட்கப்பட்ட ,ராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தியாகும்.

இச்சாசனம் இயற்கையான கற்பாறைகளும் சைவக்கோயிலொன்றின் இடிபாடுகளும் குவிந்து கிடக்கும் கடற்பரப்பிலிருந்து சுழியோடிகளினால் மீட்கப்பட்டது.

இங்கு மீட்கப்பட்ட சிவலிங்கம் முற்காலக் கோணேசர் கோயிலின் தொல்பொருள்ச் சின்னமாகக் கருதப்படுகிறது. 1961ஆம் ஆண்டு இவையிரண்டும் கண்டுபிடிக்கப்பட்ட போதும் 1972 ஆம் ஆண்டிலேயே இச்சாசனங்களின் முக்கியத்துவம் உணரப்பட்டது.

சாம்பல்தீவு கிராமச்சங்கத் தலைவர்திரு.நா.தம்பிராசா அவர்களின் வேண்டு கோளுக்கிணங்க பேராசிரியர் செ.குணசிங்கம் அவர்களால் படியெடுத்து வாசிக்கப்பட்ட இச்சாசனம் "குடமாலை நாடுங் கொல்லமும்........." என்று ஆரம்பிக்கும் இராஜராஜ சோழனின் மெய்க்கீர்த்தியின் ஆரம்பப் பகுதியைக் கொண்டிருந்தது.

இச்சாசனம் துண்டமானது.



இதனுடைய முதற்பகுதியும் இறுதிப் பகுதியும் உடைந்துவிட நடுப்பகுதியே சுழியோடிகளால் மீட்கப்பட்டிருந்தது. இச்சாசனத்தில் அடங்கியிருப்பது இராஜராஜனின் மெய்க்கீர்த்தியின் சுருங்கிய வடிவமாகும்.

இது கி.பி 993 க்கு முதல் எழுதப்பட்ட மெய்க்கீர்த்தி வடிவங்களை ஒத்தது என்பதனால் இலங்கையில் கிடைத்த காலத்தால் முந்திய சோழசாசனமாகக் கருதப்படுகிறது.

இச்சாசனம் பண்டைய நாட்களில் கோகர்ணத்தில் இருந்த ஒரு சிவாலயம் ஒன்றிற்கு வழங்கப்பட்ட தானமொன்றினைப் பதிவுசெய்யும் ஆவணமாக வரலாற்றாய்வாளர்களால் பார்க்கப்படுகிறது. அத்துடன் இராஜரா ஜனின் ஆட்சியின் ஆரம்பக் கட்டத்தில் அதாவது கி.பி.993க்கு முன்பாகவே ஈழமண்டலத்தைச் சோழர்கள் கைப்பற்றிக் கொண்டனர் என்பதனை உறுதி செய்யும் ஆவணமாகவும் இச்சாசனம் கருதப்படுகிறது.

இராஜராஜனின் மெய்க்கீர்த்தியைப் போன்றே முதலாம் இராஜேந்திர சோழனின் புகழ் பேசும் இரு மெய்க்கீர்த்திகள் திருகோணமலை நகரப் பகுதியில் கிடைக்கப்பெற்றன. இவற்றுள் ஒன்று திருகோணமலை ஸ்ரீ பத்திரகாளியம்மன் ஆலயம் கட்டப்பட்டபோது அவ்வாலயத்தில் வைத்துக் கட்டப்பட்ட தூணாகும்.

இந்தத் தூணின் நான்கு பக்கங்களிலும் முதலாம் இராஜேந்திர சோழனின் புகழ் பொறிக்கப்பட்டிருந்தது. ஆனால் அத்தூணின் ஒரு பகுதி பூச்சினால் மறைந்துவிட ஏனைய மூன்று பக்கங்களிலிருந்த வாசகங்கள் மட்டுமே வாசிக்கக் கூடியதாக இருந்தது. இவ்வாசகங்களிலிருந்து வரலாற்று ரீதியான முக்கிய விடையங்கள் எதனையும் பெற்றுக் கொள்ள முடியாவிட்டாலும் அதனை ஒரு ஆலயத்திற்கான நன்கொடைச் சாசனமாகக் கருதமுடியும்.

மூன்றாவது சாசனம் ஐரோப்பியரின் காலனித்துவ ஆட்சியில் கோணேசர் கோவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட தூண்கள் துறைமுக மேடை அமைப்பதற்காகப் பயன்படுத்தப்பட்போது 1836 ஆம் ஆண்டு பிரித்தானியக் கடற்படையில் பணியாற்றிய பிலண்ட் என்பவரால் கண்டறியப்பட்ட சாசனமாகும்.

இச்சாசனம் திருகோண மலை ஒஸ்றெறன் வேர்க் கோட்டையில் கண்டெடுக்கப்பட்ட மூன்று தமிழ்ச் சாசனங்களில் ஒன்றாகும். துண்டமான இச்சாசனங்கள் கோட்டையிலுள்ள பீரங்கிகளின் அடித்தளமான மேடைகளில் வைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

ஒஸ்றன்பேக் கல்வெட்டு என்று குறிப்பிடப்படும் இச்சாசனம் கங்கை கடாரப் படையெடுப்புகள் பற்றிய தகவல்களைக் கொண்டிராதபடியால் இம் மெய்க் கீர்த்தி முதலாம் இராஜேந்திரனின் ஆரம்ப ஆட்சிக் காலத்தில் பொறிக்கப் பட்டதாகக் கருதப் படுகிறது.

இச்சாசனம் திருகோணமலை வரலாற்றைக் குறித்து முக்கியமான தகவல்கள் எதனையும் வழங்காத போதும் சோழர்களின் நிர்வா கத்தில் திருகோணமலை கொண்டிருந்த முக்கிய இடத்தினைத் தெரிவிப்பதாக உள்ளது.

(தொடரும்)

-வைத்திய கலாநிதி த.ஜீவராஜ்-

## இப்படியுமா....?

இன்றைய ஆட்சியில் என்றுமில்லாதவாறு உள்ளூராட்சி நிறுவனங்கள் மிகவும் சிரழிந்த நிலையில் உள்ளதென்பதை எவரும் ஏகமனதாக ஏற்றுக்கொள்ள வேண்டியுள்ளது. உள்ளூராட்சிக்கு பொறுப்பானவர்களான மக்கள் பிரதிநிதிகளின் அளவற்ற அட்டகாசங்கள் கட்டவிழ்த்து விடப்பட்ட நிலையில் காணக்கூடியதாக இருப்பதையிட்டு சகலரும் கவலை கொள்ள வேண்டியுள்ளது.

மக்களுக்காக சேவையாற்ற முன் வந்தவர்கள் மக்களுக்கே அநீதி விளைவித்து வருவதும், நிர்வாகத்தைக் கொச்சைப்படுத்துவதும், இன்று வழமையான செயற்பாடாக மாறிவிட்டது. கொலை, கொள்ளை, மிரட்டல், வன்புணர்வு, ஆட்கடத்தல், அடிதடி, என்றெல்லாம் நாளாந்தம் நாடளாவிய ரீதியில் இடம் பெற்று வருகின்றன.

இதுவரை காலமும் நாடாலு மன்ற உறுப்பினர்கள்கூட செய்யாதவற்றை புரிந்து உள்ளூராட்சியை கேவலப்படுத்தி விட்டார்கள் அந்த உறுப்பினர்கள். மேலும் அவர்களுக்கு எதிராக அதிரடி நடவடிக்கைகளை அரசு மேற்கொண்டாலும் அவர்களின் அடாவடித்தனம் இன்னமும் குறைந்த பாடாக இல்லை.

அதுமாத்திரமல்ல ஆளும் கட்சியைச் சார்ந்த எத்தனையோ உள்ளூராட்சி நிறுவனங்களில் வரவு செலவுத் திட்ட வாக்கெடுப்புகள்கூட படுதோல்வியைத் தழுவியுள்ளன. எங்கும் ஊழல், மோசடி போன்றவைகள் தலைவிரித்தாடுகின்றன. பல இலட்சக் கணக்கான ரூபாய்களை செலவழித்து தேர்தலில் போட்டி போடுவது மக்கள் சேவைக்காக அல்ல என்பது இன்று தெட்டத் தெளிவாகியுள்ளது. மக்களை துன்புறுத்தி, மக்களின் பணத்தில் சுகபோக வாழ்க்கையை அனுபவிக்கவே அவர்கள் பதவிக்கும் வந்துள்ளார்கள் என்பது இன்று மிக விரிவாக நிரூபணமாகியுள்ளது.

"மக்களுக்கு சேவையாற்றுகிறோம்" என்று கூறி எங்கும் பணச் சுரண்டலே பரவலாக இடம் பெற்று வருகின்றது. அப்பாவி மக்கள் ஒரு மந்தைக் கூட்டம் என அவர்கள் நினைத்து வருகின்றனர். கல்வி அறிவு இல்லாவிட்டாலும் அவர்களிடம் பொதுஅறிவாவது இருக்குமா? என்று பார்த்தால் அது கூட பூச்சியமாக உள்ளது.

பிரதேசமொன்றில் அங்குள்ள மத்திய வீதியை அகலிப்பதற்கு ஒரு தனியார் நிறுவனம் முன்வந்து உள்ளூராட்சி உதவி ஆணையாளர் ஊடாக குறித்த நகராட்சிமன்றத்திடம் முன்மொழிவொன்றைக் கோரி இருந்தது. உதவி ஆணையாளர் முன் மொழிவு தொடர்பாக பூரண விளக்கத்தை அந்த நகராட்சி மன்றத்திற்கு வழங்கி இருந்தார். அது மாத்திரமல்ல நகராட்சி மன்றத் தலைவரை நேரில் அழைத்து வீதி அகலிப்புக்குரிய விதி முறைகளையும் தெளிவுபடுத்தினார்.

குறித்த வேலைக்கு பாரிய தொகையை அந்த தனியார் நிறுவனம் செலவு செய்ய முன்வந்துள்ளதால் சுற்றுநிருபல்கள், கட்டளைச்சட்டங்கள், விதிமுறைகள் ஆகியவற்றின் ஏற்பாடுகள் ஒழுங்காக கடைப்பிடிக்க வேண்டுமெனவும் தலைவருக்கு வலியுறுத்திக் கூறி இருந்தார்.

உதவி ஆணையாளர் அந்த வேலைத்திட்டத்தில் அதிக அக்கறை காட்டியதற்கு காரணம் மத்திவீதி அகலிப்பதால் மக்களின் போக்குவரத்து சனநெரிசலின்றி வசதியாக அமையும் என்பதே அவரிடம் அந்த நல்ல நோக்கம் இருந்தாலும் நகராட்சி மன்ற தலைவரிடம் அந்த நல்ல நோக்கம் இருந்ததாக தெரியவில்லை.

மக்களை அனுசரித்துப் போக வேண்டிய அவர் எதெச்சதிகாரமாக நடந்து கொள்ள முற்பட்டார். மேலும் அங்குள்ள மக்களை மிரட்டி அபிவிருத்திக்குத் தடையாக இருந்த கட்டடங்களை மக்களைக் கொண்டே அகற்றினார். இன்றைய பொருளாதார நிலையில் கட்டடம் ஒன்றை தகர்ப்பதோ புதிய கட்டடம் ஒன்றை நிர்மாணிப்பதோ இலகுவான காரியமல்ல என்பதை சகலரும் அறிந்திருந்தும் அவரும் அவரின் சகாக்களும் அறியாதிருப்பது கவலைக்குரியதே.

அது மாத்திரமல்ல குறித்த வீதியின் இருமருங்களிலும் வாழும் மக்கள் வீதி அகலிப்பு நடவடிக்கைக்காக அவர்களது பாரம்பரிய பூமியிலிருந்து ஏழு அடி நிலத்தை வழங்க வேண்டுமெனவும் தலைவர் கட்டளையை பிறப்பித்தது மல்லாமல் அகற்றப்பட்ட கட்டடங்களுக்கோ, இழக்கவிருக்கும் நிலத்திற்கோ எந்தவித இழப்பீடும் வழங்கப்பட மாட்டாதெனவும் எழுத்துமூலம் அறுதியாக தெரிவித்து விட்டார்.

தலைவரின் அந்த நடவடிக்கை மனித நேயமற்றது என்று எடுத்துக் கூற அங்கு எந்தவொரு உறுப்பினரும் முன்வராததையிட்டு மக்கள் விசனம் அடைந்தனர். அறிவிலித்தனமாக ஒருவர் நடந்து கொள்ளும் போது ஏனைய உறுப்பினர் கண்டும் காணாதமாதிரியும் இருப்பது நாகரீகமல்ல.

குறித்த வீதி அகலிப்புக்கு அங்குள்ள மக்கள் என்றுமே எதிரானவர்களால் அவர்கள் நகரத்தை நேசிப்பவர்கள் அதன் வளர்ச்சியை ஆதரிப்பவர்கள். தங்களது பிரதேசம் அழகாக விளங்க வேண்டும். என்று விரும்புகிறார்கள். ஆனால் அவர்கள் கோரி நிற்பது தாம் இழந்தவற்றுக்கு நீதியான இழப்பீட்டை மாத்திரமே.

பலர் பீதியின் காரணமாக தலைவரின் கட்டளைக்கு இசைத்தாலும் சிலர் இசைய மறுத்து மேல் நீதிமன்றம் சென்றார்கள். அங்கு நகராட்சி மன்றத்தின் தவறுகள் சுட்டிக்காட்டப்பட்டன. அது ஒரு பொது நலன் கருதி மேற்கொள்ளப்படும் திட்டம் என்பதால் இரு சாராரும் ஒரு இணக்கப்பாட்டுடன் மேற்கொண்டு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டுமென தீர்ப்பளிக்கப்பட்டது.

ஆனால் இதுவரை எந்தவொரு இணக்கப்பாட்டிற்கான நடவடிக்கையையும் தலைவர் மேற்கொள்ளாது இருப்பதுடன் குறித்த வீதியை புனரமைக்காது மேலும் அலங்கோலப்படுத்தி விட்டார், என ஊடகங்கள் சுட்டிக்காட்டத் தொடங்கின.

தலைவரின் அறிவிலித்தனமான நடவடிக்கைகள் அங்குள்ள மக்களை மேலும் மேலும் அசௌகரியத்திற்குள்ளாக்கின. தலைவர் பழிவாங்கும் நடவடிக்கையை மட்டும் செயல்படுத்தினார். தனக்கு எதிராக மேல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்தவர்களுக்கு எதிராக அவர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். அந்த விடயத்திலும் தலைவருக்கும் அவரின் சகாக்களுக்கும் நல்ல வசதி வாய்ப்பு கிட்டியதை இங்கு கோடிட்டுக் கூறித்தான் ஆக வேண்டும்.

தற்காலத்தில் நீதிமன்றம் சென்றால் இனிமேல் சொல்லவா வேண்டும்? இலட்சக்கணக்கில் பணம் மாத்திரமல்ல பெறுமதியான காலமும் வீண்விரயமாவதைத் தடுக்க முடியாது. தலைவரைப் பொறுத்த வரையில் அவர் கையை விரித்துச் செலவு செய்யலாம் காரணம் அப்பணம் அவரின் சொந்தப்பணம் அல்ல அது மக்களின் பணம்.

அவரால் தொடரப்பட்ட வழக்கு நீண்டு கொண்டே சென்றது. அதனால் வீதி அகலிப்பு வேலைகள் முற்றாக அஸ்த்தரித்து விட்டது! " முன்னர் இருந்த வீதி வசதியையும் கெடுத்துவிட்டார் தலைவர்" என முணுமுணுக்காதவர்கள் அங்கு ஒருவருமே இல்லை.

இவ்விடத்தில் உள்ளூராட்சி அரச அதிகாரிகள் கூட கைகளை இறுக்கக் கட்டிக்கொண்டு ஒன்றும் தெரியாதவர்கள் போன்று இருந்து வருகிறார்கள். உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு தெரிவாகின்றவர்களில் அனேகப்பேர் கல்வி அறிவு இல்லாதவர்கள். அவர்களுக்கு நிர்வாகத்தைப் பற்றிய தெளிவு இல்லை என்பது சகலருக்கும் தெரிந்த விடயமாகும்.

மேலும் அங்குள்ள ஏனைய உறுப்பினர்கள் கூட தலையாட்டி பொம்மைகள் போன்று செயல்படுபவர்கள். காரணம் "நாக்குண்டார் நாவிழந்தார்." என்பதற்கு ஒப்பானவர்கள்: தலைவரின் அறிவிலித்தனமான செயற்பாடுகளுக்கு சரியான தீர்ப்பு வழங்கினால் மாதத்தில் பலாச்சுளைபோல் கிடைக்க விருப்பவைகளும் கிடைக்காமல் போய்விடும் அல்லவா?

தலைவர் தனது பழிவாங்கும் நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைக்காது தனது எதெச்சதிகாரமான திட்டங்களை தங்கு தடையின்றி முன்னெடுத்துச் சென்றார். தனக்கு ஆதரவு வழங்காத நீதிமன்றம் சென்ற பொது மகனொருவரின் வீட்டுக்குள் மழைநீர், கழிவுநீர் ஆகியன பாய்ந்து செல்லும் வகையில் தம்மால் நிர்மாணித்துக் கொண்டுச் சென்ற வடிகாலை குறித்த நபரின் வீட்டுக்கு முன் இடைநிறுத்த அவருக்கு பல அசௌகரியங்களைக் கொடுத்தார். அது தொடர்பாக மனித உரிமை ஆணைக்குழு உள்ளிட்ட அரச அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டும் இன்னமும் அது சீர் செய்யப்படவில்லை.

தலைவர் அந்த குற்றச்சாட்டை மறுத்தவிதம் இலங்கை நிர்வாக சேவை தரத்திலுள்ள அனைத்து அதிகாரிகளையும் அதிரவைத்தது. அதாவது "நீங்கள் எனக்கு ஒத்துழைப்பு வழங்கினால் மாத்திரமே குறித்த சீர்கேடு சீர் செய்யப்படும்" என புகார் செய்தவருக்கு எழுத்து மூலம் தலைவர் பதிலளித்திருந்தார்.

எப்படி இருக்கிறது. தலைவரின் பழிவாங்கும் படலம். அவர் வேண்டுமென்றே குறித்த தவறைப் புரிந்ததாக பகிரங்கமாக ஒப்புக் கொண்டிருந்தார்.

இவைதான் இன்றை உள்ளூராட்சி நிறுவனங்களின் செயற்பாடுகள். தமது பக்கட்டுக்களை நிரப்புவதற்காகவே

## ...நாட்டு நடப்பு...

அப்பாவி பொது மக்களை அவர்கள் பலிகடாக்களாக ஆக்குகின்றனர். எதிர் வரும் உள்ளூராட்சி தேர்தல்களில் மக்கள்தான் நல்லதொரு பாடம் புகட்ட வேண்டும். அடாவடித்தனமான, அறிவிலித்த னமான செயற்பாடுகளை மக்கள் ஆதரித்தால் தொடர்ந்தும் துன்பப்படுவது மக்களே ஜனநாயகரீதியில் தேர்ந்தெடுக் கப்பட்டவர்கள் ஏகாதிபதிகளாக மாற எவரும் இடமளிக்கலாகாது. இலஞ்சம், ஊழல், முறைகேடு, என்பவற்றை அடியோடு ஒழிக்கக் கூடியவர்கள் மக்களே. எனவே நியாயத்திற்கு தலைவணங்கி அநியாயத்திற்கு எட்டி உதைக்க மக்கள் முன்வர வேண்டும்.

-பாலையூற்றான்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# சேற்றில் விளைந்தது...

பாயை விரித்துப் படுத்துக் கொண்டேன். நள்ளிரவாகியும் நித்திரை வரவில்லை. தூரத்தில் நாயொன்று எதற்கோ ஊளையிட்டுக் கொண்டிருந்தது. தலைமாட்டுக்குள் கையைவிட்டு தீப்பெட்டியைத் தேடினேன். என் மனைவியும் எழுந்துவிட்டாள்.

"என்னங்க இன்னம் தூங்கல்லயா..."

நான் எதுவும் பேசவில்லை, பாயில் கிடந்த துண்டைத் தோளில் போட்டுக் கொண்டு, தீப்பெட்டியை கையில் எடுத்தவாறு திண்ணைக்கு நடந்தேன்.

மறுபுறத்தில் என் மகன் தூங்கிக் கொண்டிருக்கிறான். காலையில் தான் பல்கலைக்கழகத்திலிருந்து வந்தான். அவன் ஒரு பட்டதாரி. கிழிந்த பாயில் நுளம்புக்கடிக்குள் அவன் தூங்கும் பரிதாபத்தை சில வினாடிகள் பார்த்துக் கொண்டே திண்ணைக்குச் சென்று குத்தியில் அமர்ந்துகொண்டேன்.

முற்றத்துத் தென்னந்தோப்பிலிருந்து விளையாடிய "குளு குளு" காற்று என்னையும் தழுவி எனக்கு ஆறுதல் சொல்லிக்கொண்டு போகிறது. உலகமே உறங்குகிறது. என் கண்கள் மாத்திரம் அந்தப் பாக்கியத்தை இழந்து விட்டன. நான் கண்ட கனவு நனவாகிவிட்டது. ஆம் என் மகன் ஒரு பட்டதாரி.

"வாப்பா... இனி ஒண்டுக்கும் கவலப்படாதங்க வாப்பா... எனக்கி பேங்குல வேல கெடக்கப் போகுது... நம்மட கஸ்டமெல்லாம் இனி வெலகப்போகுது..."

காலையில் அவன் வந்தவுடன் சொன்ன வார்த்தைகள் எரியும் என் காதுகளுக்குள் இன்னும் தேன் வார்க்கிறது. காலையில் அவனைப் பார்க்க எத்தனை பேர் வந்தார்கள். அத்தனைபேரும் படித்தவர்கள். வந்தவர்களை உக்கார வைப்பதற்கு என் மகன் பட்டபாடு கொஞ்சமா! வீட்டில் நல்ல பாயில்லை. நாங்கள் படுக்கும் கிழிந்தபாய்களைக் கொண்டு பொருத்தி ஒருவாறு சமாளித்துவிட்டான்.

வந்தவர்களுக்கு தேனீர் கொடுக்க அவன் பட்ட சங்கடத்தைப் பார்த்துவிட்டு நான்தான் பக்கத்துக் கடைக்குச் சென்று வழமைபோல பல்லிழித்து,

"வாறமாசம் வெள்ளாம வெட்டினா மொதல்ல ஒண்ட கடனத்தான் அடக்கிற..."

என்று கடைக்காரனுக்கு நம்பிக்கை கொடுத்து கொஞ்சம் சீனி வாங்கி வந்து கொடுப்பது பெரும் பாடாகிவிட்டது. எப்படியோ வந்தவர்களை சமாளித்து அனுப்பிய என் மகன் பட்டதாரிக்கு இன்றிரவுச் சாப்பாடு பகல் ஆக்கிய பழஞ்சோறும் பொட்டியான் சுண்டலும்தான்.

என்னால் என்ன செய்யமுடியும்! முடிந்தவரை உழைத்து இவனைப் படிப்பித்திருக்கிறேன். இனி இவன்தான் குடும்பத்தைக் காப்பாற்றவேண்டும்.

இவனைப் படிப்பிக்க நான் பட்ட கஷ்டங்கள் கொஞ்சமா! காலையில் கண் கழுவிக் கொண்டு என் மகன் காலை உணவுமில்லாமல் பாடசாலை செல்லும் போது என் வயிறு பற்றி எரியும். இவன் அடிக்கடி வந்து கொப்பி, புத்தகமென்று கேட்கும்போது கையில் இருந்தால் வாங்கிக் கொடுப்பேன், இல்லையென்றால் எப்படிச் சமாளித்தானோ எனக்குத் தெரியாது.

இவன் பள்ளிக்கூடத்தில் படிக்கும் காலத்தில் இப்படித்தான் ஒருநாள் திடீரென்றுவந்து,

"வாப்பா... ஸ்கூலால ட்றிப் போபறாங்க வாப்பா... நானும் போப்றன்... எனக்கும் நாலாயிரம் 'ரூவா தாங்க... கட்டாயம் தரணும்..."



என்று வற்புறுத்திவிட்டு என் தலைமீதும் மனம் மீதும் பெரும் பாறாங்கல்லை ஏற்றிவிட்டு அவன் சென்றுவிட்டான்.

"என்னங்க... ஓரமா யோசிக் காதங்க... மகன் அப்பிடி என்னத்த கேட்டுட்டாரு... காசி நாலாயிரம்தானே.. நீங்க கவலப்படாதங்க எல்லாப் புள்ளைகளும் போக்கொள்ள நம்மட புள்ளயும் போகத்தானே வேணும்...

காசப்பத்தி நீங்க யோசிக் காதிங்க... நான் என்ர காக்கா அனி வாட்ட போப்றன்... நான் கேட்டா என்ர அக்கா இல்லண்டு செல்லமாட்டா... அண்டக்கி வீட்ட வந்த காக்கா சென்ன... தங்கச்சி நீ என்ன வேணுமெண்டாலும் எனக்கிட்டகேளு...

நீ எண்ட ஒரே ஒரு தங்கச்சி, ஒனக்கு தராம வேற ஆருக்கு எண்டு... நான் அக்காட்டபோய் பின்னேரம் கேக்கப்போறன்... அவரு எனக்கி இல்லண்டு செல்லமாட்டாரு..."

என்று என் மனைவி என் தலைப்பாரம் இறங்கப் பேசிக் கொண்டிருந்தாள்.

அவள் பேச்சு எனக்கு நம்பிக்கை கொடுத்தது. சொன்னது போலவே சென்றுவிட்டாள். ஹனிபா வீட்டுவாசல் திறந்தே கிடந்திருக்கிறது. எந்தச் சலனமுமில்லாத முகத்துடன் என் மனைவி கூப்பிட்டுக்கொண்டே உள்ளே சென்றிருக்கிறாள்.

"காக்கா... இரிக்கங்களா..!"

"ஓமோம்... வாங்க தங்கச்சி... எங்க மச்சான் வரல்லயா..?" ஹனிபா நல்ல கனிவுடன் தான் வரவேற்றிருக்கிறான். சத்தமில்லாமல் சமயலறைக்குள் வேலை செய்துகொண்டிருந்த ஹனிபாவின் மனைவி கொஞ்சம் சத்தம் போட்டுக் கூப்பிட்டாள்.

"ஞ்சப்பாருங்க... கொஞ்சம் வாங்க..."

மனைவியின் குரல் கேட்டால் மறுகணம் தாமதிக்கமாட்டார் ஹனிபா.

"என்னபுள்ள கூப்பிட்ட..."

"ஞ்சப்பாருங்க... என்னயாம் ஒங்குட அருமத்தங்கச்சி வந்நிருக்கிற... என்னத்தயாலும் கறக்கலாமெண்டு வந்நிருக் காவாக்கும்... என்னத்தயாலும் செல்லி ஆளனுப்புங்க... சரியா..."

மனைவியின் ஆணையை ஹனிபா எப்பொழுதும் தாண்டியதில்லை.

"சரி... சரி... நான் பாத்துக்கிறன்..."

ஹனிபா மீண்டும் வந்து அமர்ந்தார்.

"மறுகா... என்னடா தங்கச்சி மாலபட்டநேரம் வந்திருக்காய்... என்ன வெளக்கம்..."

முகத்தில் ஒரு விருப்பம் இல்லாமல் ஹனிபா கேட்கும் வார்த்தைகளுக்கு என்ன சொல்வதென்று புரியாமல் மௌனமாக என் மனைவி யோசித்துக் கொண்டிருந்திருக்கிறாள். "என்னடா தங்கச்சி யோசக்கிற..."

"இல்ல காக்கா... எண்ட மகன் ஸ்கூலால ட்றிப் போகப் போறானாம்... நாலாயிரம் 'ரூவா கேக்கான்... எனக்கிட்டயும் கைல இல்ல... நீங்கதான் பாத்து கொஞ்சம் கடனா உதவி செய்யணும்..."

ஹனிபாவின் முகம் மாறுபட்டதிலிருந்து என் மனைவிக்கிக் கொஞ்சும் சந்தேகம். அதனால்தான் தயங்கித் தயங்கிக் கேட்டிருக்கிறாள்.

"ஐசே... கொஞ்சம் லேட்டா கிட்டயே தங்கச்சி... இப்பதான் இருந்த காசையெல்லாம் குடுத்து எண்ட மூத்தவளுக்கு உடுப்பு எடுத்து வந்த... அவளுக்கு நாளக்கி "பேத் டே". இனி அவவும் ஒரு சங்கிலி வாங்கணுமாம் நேத்தேல்லாம் புறுபுறுக்காள்... இப்ப கைல அறவே காசில்ல..."

ஹனிபாவின் வார்த்தைகள் என் மனைவிக்கு ஏமாற்றத்தைக் கொடுத்திருக்கிறது. என் மனைவியின் கொதிக்கும் மனசைப்போல ஒரு தேனீரைக் கொண்டுவந்து விருப்பமில்லாமல் வரண்ட புன்னகையோடு ஹனிபாவின் மனைவி வைத்துவிட்டுப்போவது என் மனைவிக்கிப் புரியாமலில்லை.

தேனீரை எடுத்துப் பருகமனமின்றி அவமானம் தாங்க முடியாமல் ஏமாற்றத்தோடு வீடுவந்த என் மனைவி ஒரு மாதமாக அதைச் சொல்லிச் சொல்லி வெப்பிசாரப்பட்டிருக்கிறாள்.

என் நண்பன் ஒருவனிடம் என் நிலைமையைச் சொல்லி, அவன் மனைவியின் தங்கச் சங்கிலியைக் கொடுக்க அதை ஈடு வைத்து என் மகனுக்கு நாலாயிரம் கொடுத்தேன்.

என் மகன் சந்தோஷத்தால் இறக்கை கட்டிப் பறந்தான். அவனுக்கென்ன தெரியும் இளங்கன்று. ஆக்கின சோற்றுக்கு கறியில்லாமல் நாங்கள் படுகின்ற துன்பம் அவன் தெரிந்திருக்க நியாயமில்லை.

சுற்றுலாச் செல்வதற்கான சகல ஏற்பாடுகளையும் செய்துமுடித்தான். அவனிடத்தில் இருக்கின்ற ஓரிரு ஆடைகளைக் கழுவி அதனை அயன் பண்ணவேண்டும் என்று இவன் தன்னுடைய மாமா வீட்டுக்கு அதான் ஹனிபா வீட்டுக்குச் சென்றிருக்கிறான். அவனுக்கென்ன தெரியும் கள்ளங்கபடம் தெரியாதபிள்ளை.

"மாமா... இந்த உடுப்பக் கொஞ்சம் அயன் பண்ணட்டா மாமா..."

"உடுப்பு அயன் பண்றத்துக்கு இதன்ன வண்ணாண்ட ஊடா... நீங்க அயன் பண்ணாமப் போட மாட்டிங்களோ. போங்கபோங்க அதல்லாம் இஞ்ச பண்ணேலா..."

என் மகன் முகஞ்செத்து வந்து என்னிடம் சொல்லிச்சொல்லி அழுததை நினைத்தால் இப்பொழுதும் என் நெஞ்சு கொதிக்கிறது. இப்பொழுது என் மகன் ஒரு பட்டதாரி.

இந்த ஊரில் இவனை எத்தனையோ பேர் மாப்பிள்ளை கேட்கிறார்கள். ஊரிலுள்ள போடிமாரெல்லாம் என் மகனுக்காக போட்டிபோடுகின்ற காலம் வந்துவிட்டது.

இப்போதுநான் இல்லாதவன் ஏழை என்று யார் பார்க்கிறார்! ஏனென்றால் என் மகன் சேற்றில் விளைந்த செந்தாமரையாகிவிட்டானே.

போதாக்குறைக்கு பகல் அவரும் வந்தார். யார்! அவன்தான் என் மச்சினன் ஹனிபா. அவன் வசதிக்காரன் என்று காட்டுவதற்கு தன்னுடைய காறில் மனைவியோடு வந்து இறங்கினான்.

மச்சான் மச்சினன் என்று புதிதாக உறவுமுறை பேசினான். அவன் சுற்றிவளைக்காமலே என் மகனை தன் மகளுக்கு மாப்பிள்ளை கேட்டான். மறுகணமே என் மனம் எரிமலையாய் வெடித்தது. கோபத்தை என் மனசு கொப்பளித்தது.

"டேய் அனிவா... நீயும் ஒரு மனிசனா... ஒனக்கா எண்ட மகன் மாப்புள... நீ எல்லாத்தையும் மறக்கலாம் நான் ஒண்டையும் மறகல்ல... ஒன்னப்போல மனிசத்தன்ம இல்லாத மனச்சாட்சியில்லாத பணத்தாச புடிச்ச மிருகத்துக்கு எண்ட மகனக் குடுக்கிறத அவனச் சும்மாதிரியச் செல்லுவன்..."

என்று கதைத்த கதைகள் அவனை முள்ளாகத் தைத்திருக்கவேண்டும். உடனே ஹனிபா எழுந்து சென்றுவிட்டான்.

இருந்தாலும் நான் அவனுக்குப் பகல் அப்படிப் பேசியிருக்கக்கூடாது. அவன்தான் அப்படியென்றால்... நாமும் அப்படியா... என்னால் தாங்கமுடியவில்லை... என்னால் தூங்கவும் முடியவில்லை.

வீட்டுக்கு வந்த அவனை நான் அப்படிப் பேசியிருக்கக்கூடாது. திரும்பிப் பார்க்கிறேன். என் மனைவி என் பின்னே நின்று கொண்டிருக்கிறாள்.

"என்னங்க... தூங்கல்லயா... பகல் நடந்தத நெனச்சிக்கி மனசப்பொட்டு கொழப்பாம வந்து படுங்க"

"இல்ல ஆயிஷா... நான் அப்பிடி அனிவாக்கு கதச்சிருக்கப்படா... நீ காலத்தால் அவண்ட ஊட்டபோய் மாப்புள ஒனக்குத்தான் என்டுசெல்லு.."

என்று சொன்னதும் என் மனைவி சந்தோஷத்தால் பூத்துப்போனாள்.

கரியமேகங்கள் விலகியதால் முழு நிலா பிரகாசிக்க ஒளி மழையில் இரவுக் காடாய்க் கிடந்த உலகம் குளித்துச் சிரித்தது. இப்போது என் மனதைப் போல...

**ஜே.வஹாப்தீன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவி முரசு

## மீண்டும் மடியும் இருட்டு

புதிய உடை உடுத்தாள்
புத்தாண்டு நங்கையென்பாள்
மட்டில்லா மகிழ்ச்சி தேங்கி
இக்கட்டில்லா வாழ்வு ஓங்கி
இடர்படும் மாந்தரெல்லாம்
சுடர்விடும் ஒளிபோல்
ஓங்கி
என்றென்றும் மகிழ்ந்திடும்
வருடமாக
உதித்திடாதோ!

உடையுமின்றி
உணவுமின்றி
வீடு மின்றி
வாழ்வுமின்றி
வாழ்ந்திருக்கும்
மாந்தரெல்லாம்
மன்னராகும்
வருடமாக
இவ்வருடம்
உதித்திடாதோ!

பள்ளி செல்லும்
வயதினிலே
கூழியாக
பாடுபடும்
எம் நாட்டு
சிறுவரெல்லாம்
பள்ளிசெல்லும்
வருடமாக
இவ்வருடம்
உதித்திடாதோ!

தற்காலிக
முகாமிலே
தடைகளோடு
வாழ்ந்து வரும்
எம் நாட்டு
சனங்களெல்லாம்
ஜனநாயக
உரிமையோடு
வாழும் நாள்
என்றென்றும்
இவ்வருடத்தில்
உதித்திடாதோ!

மாவு வீடு கட்டியுமே
பிள்ளைகளை
வெள்ளை வேனில்
தொலைத்து விட்டு
காணாமல்
காத்திருக்கும்
பெற்றோரெல்லாம்
தம் பிள்ளையுடன்
இருக்கும்
வருடமாக
இவ்வருடம்
உதித்திடாதோ!

நாற்பத்தாறை
போலவேதான்
இருந்திடும்
இவ்வருடம்
தமிழ்ச்
சனங்களுக்கு
சாதகமாய்
இருந்திடாதோ!

**அன்புவழிபுரம்**
**ச. திருச்செந்தூரன்**
**திருகோணமலை**

## நகரும் என் நாட்கள்....

என் அறையெங்கும்
விரவிக் கிடக்கிறது
விரகம் அவ் இரவில்

மதர்ப்புக்களின்
நிமிர்வில்
மனம் பதகளிக்க
கண்களை
நிமிர்த்த முடியாது
பனித்துக் கிடக்கிறேன்
நான்.........

இடையின்
வளைவுகளை - வளைந்த
குயவனின் கைகள்
முறிந்து விட்டன - பின்னோர்
பெண்ணின் இடையம்
அப்படி வளையவில்லை

நீ என்
நினைவில் ஆடும்
நர்த்தனங்களின்
அதிர்வில் - அவ்விரவும்
சிதலஞ் சிதிலமாய்
உதிர்ந்து விழுகின்றது.

தூக்கத்தின் அரசன் - அன்றும்
தோல்வியுற்று...... உன்
அதரங்கள் பிழந்து உதிர்ந்த
வார்த்தைகள்

இன்று போய் - போருக்கு
நாளை வரச் சொல்கின்றன.

சிவந்த வழிகளுடன்
நிமிர்ந்து பார்க்க
வந்து விட்டது.... இன்றும்.....

இனி என் செய்வது?

இரவுக்காய் ஏங்கும்
எண்ணங்களுடன்
இன்றைய நாளும்
நகரும்......

இரவுகள் பகல்களாக

......பகல்களோ
இரவுகளாக..........

**மாயன்**

## சலனமற்ற புரட்சி

சிதறித் தெறித்த பனித் துளிகள்
புல்லின் நுனியிலும்
பூவினுள்ளேயும்
தரித்துவிடுகின்றன

மூர்க்கத்தனமான இரவுகளில்
புல்லோடும் பூவோடும்
உறவாடி
பனித்துளிகளின் வாழ்க்கை
இருள் மரங்களோடும்
கழிகிறது

இருப்பிழந்த அவை
உள்ளாடை களவுகளுக்கும்
சில நிமிடங்கள்
வலிமை அளிக்கின்றன

குறி கனத்து
மயிர் கூச்செறியும்
அவ் இரவுகளில்
எவரும் பனித்துளிகள்
பற்றி சிந்திப்பதில்லை
அதன் படர்தல் பற்றி
பேசுவதுமில்லை

விடியல் இல்லாமையால்
பனித்துளிகள்
செய்தித் தாள்களில் கூட
தலைப்பிடப்படுவதில்லை

குளிர்தலும்
குளிமூட்டப்படலுமான
அவற்றின் புரட்சி தொடர்பாக
அறிந்திருக்கவில்லை

உண்மை எதுவெனில்
உறங்கிக் கிடப்பவர்கள்
எப்போதுமே
கருத்திற் கொள்வதில்லை
என்பதுதான்
வெடித்துப் பிளக்கும்
நிலம் கூட
அவற்றின் இருப்புப்பற்றி
மௌனித்து விடுகிறது

பச்சையத்தை தவறவிட்ட
மரங்களோடு ஒன்றித்தவாறே
மீண்டும் படர்கின்றன
பனித்துளிகள்

எங்கே

ஆகாயத்தில்
மலைகளில்
மயானப் பூக்களின்
வெம்மை வெடிப்பில்

இன்னும்
ஒரு துளி உதிரத்தில்
வியர்வையில்
ஒரு விந்தில்
இது போன்ற வரிகளில்
உயிர்க்கத்தான் செய்கின்றன

பனித்துளிகளின்
உயிர்ப்பின் இரகசியம்
சாவினுள் வாழ்தலின் தத்துவம்
அதன் சுயதரிசனம் பற்றி
எவருமே சிந்திக்கவில்லை

நேற்றும் இன்றும் நாளையும்
பனித்துளிகளைப் போல்
சலனமில்லா புரட்சியினூடாக
உயிர்த்தலை இங்கு எவரும்
இன்னும் சிந்திக்கவில்லை.

**தில்லைநாதன் பவித்ரன்**
**"குறி இடல்"**

## சிலிரிப்பு

சிலிர்க்கின்றது
வானம்
சாரலாய்
காற்று சிலிக்கின்றது
தென்றலாய்
மரங்கள் சிலிக்கின்றன
பூக்களாய்
கடல் சிலிக்கின்றது
அலைகளாய்
என் உணர்வுகள் சிலிர்க்கின்றன
உன் நினைவுகளாய்

**J. மதிவதனி**

# அரங்க விளையாட்டுக்களும் நாடக செயற்பாட்டில் அதன் பங்களிப்பும், முக்கியத்துவமும். கடந்த வார தொடர்ச்சி

இதற்காக வேண்டி பல பயிற்சிகள் நாடக பாடத்தோடு தொடர்புடையதாக வழங்கப்பட்டாலும் அதற்கென அரங்க விளையாட்டுக்களும் காணப்படுகின்றன.

"புரியாத மொழியில் கதைத்தல்" எனும் விளையாட்டினை இதற்கு உதாரணமாகக் கூறலாம். அதாவது மாணவர்கள் இரண்டு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு புரியாத மொழியில் மாறி மாறிக் கதைப்பார்கள்.

அதனோடு இணைந்தவாறே ஒவ்வொரு உணர்வுகளும் அவளிப்படுமாறும் கதைப்பார்கள். எனவே இவ்வரங்க விளையாட்டினூடாக நாடகத்துறை மாணவர்களுக்கான குரல் பயிற்சியின் ஒரு கட்டமான சரளமாகப் பேசுதல், உரையாடுதல் எனும் திறன் வளர்க்கபடுவதோடு, எவ்வாறு உணர்வுகள் வெளிப்படுமாறு உரையாடலாம் எனும் திறனும் வளர்த்தெடுக்கப்படுகிறது.

உதாரணமாக " ஒரு அரங்க விளையாட்டை இங்கு குறிப்பிடுதல் அதனுடைய முக்கியத்துவத்தை தெளிவு படுத்தும். நண்டு, இறால், மீன் எனும் அரங்க விளையாட்டை நோக்கினால், எல்லோரையும் வட்டமாக இருத்தி 1, 2, 3 என இலக்கமிடுதல் முதலில் நடைபெறும்.

அவ்வாறு இலக்கம் இட்டவர் களில் முதலாம் இலக்கம் உடையவர்கள் நண்டு எனவும் இரண்டாம் இலக்கம் உடையவர்கள் இறால் எனவும் மூன்றாம் இலக்கம் உடையவர்கள் மீன் எனவும் பெயரிடப்படுவார்கள். சிறார்கள் இருக்கும் வட்டத்திற்கு வெளியே கடல் இருப்பதாக கருதிக்கொள்ளப்படும்.



விளையாட்டை நடத்துவதற்கு ஒருவர் வட்டத்தின் நடுவில் நிற்பார். அவர்மீன், நண்டு, இறால் என்பவற்றால் ஏதாவது ஒன்றை கடலுக்குப் போகுமாறு கூறினால்.

அவை வட்டத்தில் இருந்து எழுந்து கடலுக்குள் செல்ல வேண்டும். கடல் கொந்தளிக்கிறது என்று சொன்னால் கடலுக்குள் நிற்பவர்கள் ஆடிப்ஆடி போகவேண்டும்.

கடலை திரும்பி அடிக்குது என்று நடுவில் நிற்பவர் சொன்னால் கடலுக்குள் நிற்பவர்கள் திரும்பி அசைய வேண்டும்.

இறுதியாக நடுவில் நிற்பவர் எல்லாம் வீட்டுக்கு வருகுவது என்று கூறுவார். அவ்வேளை தாங்கள் தாங்கள் சுற்றிக்கொண்டிருக்கும் திசையால் ஓடி வந்து தங்கள் இடங்களில் இருக்க வேண்டும். இதில் கடைசியாக இருப்பவர் அவுட்.

இவ்வரங்க விளையாட்டின் மூலமாக மாணவர்கள் நண்டு, இறால், மீன் போன்ற தங்களை அபிநயிப்பதும், கடலலைகள் போன்று தங்கள் உடலால் அதனைச் செய்து காட்டுவதும் அவர்களுக்குரிய நடிப்புப் பயிற்சியாக அமைகின்றது.....

**அடுத்தவாரம் அரங்கு அசையும்...**

**திருமதி. உமா சிறிசங்கர்**
விரிவுரையாளர்
கிழக்குப் பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலியானாவின் ரகசியம்



இலியானாவின் காதல் ரகசியம் பாலிவுட் உலகில் கசிய ஆரம்பித்துள்ளது. தமிழில் கேடி, நண்பன் படங்களில் நடித்திருப்பவர் இலியானா.

இவர் தெலுங்கில் அதிக படங்களில் நடித்திருந்தாலும் தற்போது இந்திக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார். இதனால் மும்பையில் செட்டிலாகி இந்திப்படங்களில் நடித்துவருகிறார், இந்நிலையில் இவரது காதல் விவகாரம் பாலிவுட்டில் உலா வர ஆரம்பித்துள்ளது.

அதாவது அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த ஆண்ட்ரூ நீபோன் என்பவரை காதலிப்பதாகவும், அவருடன் ரகசியமாக ஊர்சுற்றிக் கொண்டிருப்பதாகவும் கூறப்படுகிறது.

ஆனால் இதற்கு பதிலாக, வழக்கம்போல் எங்களது உறவு நட்பானது என்று பதில் கூறியுள்ளார் இலியானா.

## தாதாவை சந்தித்த சந்தானம்



படப்பிடிப்புக்காக தாதாவை சந்தித்து அனுமதி வாங்கியுள்ளாராம் சந்தானம். வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற படத்தில் கொடி ஹீரோவாக நடிக்கிறார் சந்தானம். ஸ்ரீநாத் இயக்கும் இப்படத்தின் படப்பிடிப்பிற்காக கடப்பாவுக்கு படக் குழு சென்றது. அப்பகுதியில் படப்பிடிப்பு நடத்த வேண்டுமென்றால் உள்ளூர் தாதாவின் அனுமதி பெற்றால்தான் முடியும் என்று கூறியுள்ளனர்.

பிறகு சந்தானம் தானே அந்த ரிஸ்க்கை எடுப்பதாகக் கூறி தாதாவை அவரது வீட்டில் சந்தித்து அனுமதிகேட்டுள்ளார். அவரிடம் தாதா, அனுமதி தரணும்னா ஒரு கண்டிஷன் என்றாராம். என்னன்னு சொல்லுங்க என சந்தானமும் பயத்துடன் கேட்க, படப்பிடிப்பு முடிந்து பட குழுவினர் ஊர் திரும்புவதற்கு முன் என் வீட்டிற்கு எல்லோரும் வந்து என்னுடன் அமர்ந்து சாப்பிட்ட பிறகுதான் செல்ல வேண்டும் என்று கூறியுள்ளார். தாதாவோட கண்டிஷனை கேட்ட சந்தானம் எங்களுக்கு நேரம் இருக்காது. ஆனால் உங்களுக்காக வருகிறோம் என்று பிகுகாட்டிக்கொண்டு புறப்பட்டுவிட்டாராம்.

## ஸ்ரீதிவ்யா எடுத்த முடிவு



கட்டுக்காவலை தளர்த்தெறிந்து விட்டாராம் ஊதா கலரு ரிப்பன். வருத்தப்படாத வாலிபர் சங்கத்தில் அறிமுகமான ஸ்ரீதிவ்யா தனது குழந்தை முகத்துடன் கூடிய நடிப்பால் அனைவரையும் கவர்ந்து விட்டார்.

அறிமுக படத்தில் கிடைத்த வெற்றியால் பல படங்களின் வாய்ப்புகளையும் பெற்று கோடம்பாக்கத்தில் நம்பர் ஒன் நடிகையாக வலம் வரும் இவர் படப்பிடிப்பு தளத்தில் மௌனதேவதையாம்.

யாருடனும் அதிகமாக பேசாமல், தான் உண்டு, தன் வேலை உண்டு இருப்பவர் இனிமேல் அப்படி இருக்கக்கூடாது என்ற முடிவினை எடுத்துள்ளாராம். இந்த மௌனமானது வளர்ச்சிக்கு உகந்ததல்ல என்பதை புரிந்து கொண்ட அவர் படப்பிடிப்பு தளத்தில் ஹீரோக்களுடன் ஜாலியாக சிரித்துப் பேசி நேரத்தை செலவிடுகிறாராம்.

## 'அஞ்சான்' சூர்யா



சூர்யாவின் படத்திற்கு 'அஞ்சான்' என்று தலைப்பு வைக்கப்பட்டுள்ளது. லிங்குசாமி இயக்கத்தில் சூர்யா நடிக்கும் படத்தின் முதல்கட்ட படப்பிடிப்பு மும்பையில் 35 நாட்கள் விறுவிறுப்பாக நடந்து முடிந்திருக்கிறது.

லிங்குசாமியின் திருப்பதி பிரதர்ஸ் தயாரித்து வரும் இந்தப்படத்தில் இப்போது யுடிவி நிறுவனமும் இணைத்தயாரிப்பாளராக இணைந்திருக்கிறது. படத்திற்கு "அஞ்சான்" என அதிரடியான பெயரையும் சூட்டியுள்ளார்கள். படத்தின் பெயரே இது ஒரு பக்கா ஆக்ஷன் படம் என்பதை சுட்டிக்காட்டுகிறது. படத்திற்கு லிங்குசாமியின் ஆஸ்தான இசையமைப்பாளர் யுவன் ஷங்கர் ராஜா இசையமைக்கிறார். "அஞ்சான்" இரண்டாம் கட்ட படப்பிடிப்பை ஜனவரி இறுதியில் கோவா அதன் பின் மகாராஷ்டிராவின் பல பகுதிகளிலும் நடத்த இருக்கிறார்கள்.

## ஆசையை மூட்டை கட்டிய லக்சுமி ராய்



கதாநாயக ஆசையை மூட்டை கட்டி வைத்து விட்டாராம் லட்சுமி ராய். ஒன்பது குரு படத்தை ரொம்பவே எதிர்பார்த்திருந்தார் லட்சுமிராய். ஆனால் அப்படம் அவருக்கு பலத்த ஏமாற்றத்தைக் கொடுத்து விட்டது. அதனால் பாலிவுட்டுக்குச் சென்ற அவர் அங்கு முகாமிட்டபடி தீவிரமான படவேட்டையினையும் முடுக்கி விட்டார்.

ஆனால், லட்சுமிராயின் முயற்சிகள் பெரிதாக ஒன்றும் பலனளிக்கவில்லை. அதனால், தாய்மொழியான கன்னட படங்களில் நடித்துக் கொண்டிருந்தவருக்கு இப்போது தான் இயக்கும் அரண்மனை படத்தில் ஒரு வித்தியாசமான கதாபாத்திரத்தைக் கொடுத்திருக்கிறார் சுந்தர்.சி.

அதனால் இதுவரை ஹீரோயினாக நடிப்பேன் என்று பேசி வந்த அவர், இப்போது அரண்மனை படத்தில் நடிப்பது போன்று வித்தியாசமான [illegible] பாடல்களுக்கு [illegible] முடிவை மாற்றிக்கொண்டுள்ளாராம் லட்சுமிராய்.

# சினி முரசு

## ஐரோப்பிய திரைப்பட விழா - 2013

### கடந்த வார தொடர்ச்சி

அ. யேசுராசா

**அமைதியான சிறுவர் அழுவதில்லை**

(Cool Kids Don't Cry), நெதர்லாந்து. 'அக்கி' என்னும் எட்டாம் வகுப்பு மாணவியின் பால் சமத்துவ உணர்வும், புற்றுநோய் எனத் தெரிந்தபின்பும் பேணும் தன்னம்பிக்கையும், அவள்மீதான ஏனையோரின் பரிவும், முரட்டுத்தனமும் வெறுப்பும் கொண்ட சக மாணவன் 'ஜோஎப்'பின் மனநிலை மாற்றமும், பெரியவர்களின் உணர்வுநிலையும் படத்தில் நன்கு சித்திரிக்கப்படுகின்றன. ஜாக் விரியென் எழுதிப் பிரபலமான நாவலைத் தழுவியே, இப்படம் உருவாக்கப்பட்டுள்ளது.

எட்டாம் வகுப்பில் படிக்கும் அக்கி துடிப்பானவள் காற்பந்தாட்டத் தில் ஆர்வமும் திறமையும் கொண்டவள் பெண்களும் காற்பந்தாட்டத்தில் விளையாடவேண்டும் என்று விரும்புபவள்.

ஆனால், சகமாணவனான ஜோஎப், காற்பந்தாட்ட அணிக்குப் பெண்கள் தேவை யில்லை எனச் சொல்பவன். வாக்குவாதத்தின்போது ஏற்பட்ட சண்டையில் அக்கியின் முகத்தில் குத்துகிறான் அக்கியின் மூக்கிலிருந்து இரத்தம் வடிகிறது.

மருத்துவப் பரிசோதனையில் அவளுக்குப் புற்றுநோய் அறிகுறி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டு, மருத்துவமனையில் அனுமதிக்கப் படுகிறாள்.

நோயின் தன்மை பற்றி மருத்து வரிடம் பல கேள்விகளைக் கேட்கிறாள் அவர் சாதுரியமாக விளக்குகிறார். அவள் உறுதியுடனே இருக்கிறாள். தான் அவளது நோயுடன் போராடி வெற்றி அடையப்போவதாகவும், தோல்விய டைந்தால் தனது மீசையை எடுத்துவிடப் போவதாகவும் (தனது பெயர் 'மீசை மருத்துவர்' என்று முன்னரே கேலியாக அவளிடம் சொல்லியுள்ளார்!) அவர் கூறுகிறார். வகுப்பின் மாணவர்களும் ஆசிரியை 'இனா'வும் அக்கியின்மீது கூடிய அக்கறை காட்டுகின்றனர். ஜோஎப் மட்டும் ஒதுங்கிநிற்கிறான்.அக்கி தொடர்ந்து வகுப்பின் காற்பந்தாட்ட அணி மீது கவனம்காட்டுகிறாள்.

தனது நெருங்கிய தோழியான 'எலிசே'யை முன்னணியில் தாக்கும் வீராங்கனையாக விளையாட ஊக்குவிக்கிறாள். ஒருநாள் மருத்துவர் மீசையின்றித் தோன்றுகிறார் நிலைமை குறியீடாகச் சொல்லப்படுகிறது.

மெல்ல மெல்ல மாற்றங் கொள்ளும் ஜோஎப் ஆச்சரியமான முடிவொன்றைச் சக மாணவர்களிடம் சொல்கிறான். அக்கியின் படுக்கை அருகே - வெளியிலுள்ள சிறு மைதானத்தில், பாடசாலை அணியுடன் மருத்துவமனை அணி காற்பந்தாட்டம் விளையாட ஒழுங்குசெய்கிறான். ஆட்டத்தை மகிழ்வுடன் அக்கி பார்த்து இரசிக்கிறாள் பின்னர் இறந்து விடுகிறாள்.

அக்கியின் பெயரிலான அணி காற்பந்தாட்டப் போட்டியில் பங்கேற்கிறது அவளது விருப்பப்படியே எலிசே முன்னணியில் சாதிக்கிறாள்! மனதை வருடும் துயரமும் சக மனிதரின் பரிவும் இணைந்து வெளிப்படும் நல்லதொரு திரைப்படம்.

ரொறொன்ரோவிலும் வியன்னாவிலும் நடைபெற்ற சிறுவர் திரைப்பட விழாக்களில் இப்படம் விருதுகளை வென்றுள்ளது. இதன்நெறியாளர் டென்னிஸ் ஃபொட்ஸ் ஆவார். **(தொடரும்...)**

ஜீவநதி

## 'மகாபலி'யை எதிர் நோக்கும் தமன்னா



"வீரம்" வெற்றியைத் தொடர்ந்து "மகாபலி" படத்தினை எதிர் நோக்கியுள்ளார் தமன்னா. பொங்கல் ஜல்லிக்கட்டாக தமன்னாவின் நடிப்பில் வெளியான வீரம் ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.

இந்தப் படத்தின் வெற்றி மகிழ்ச்சியுடன் தனது அடுத்த இருமொழித் திரைப்படமான "மகா பலி"யின் தயாரிப்பை தமன்னா ஆவலுடன் எதிர் நோக்கி உள்ளார்."நான் ஈ" படப்புகழ் இயக்குநரான ராஜமௌலி இயக்கவுள்ள "மகாபலி" தெலுங்கு, தமிழ் ஆகிய இரு மொழிகளிலும் தயாராக உள்ளது. இதில் தெலுங்கு நடிகர் பிரபாசும், நடிகை அனுஷ்காவும் முக்கிய கதாபாத்திரங்களில் தோன்றுகின்றனர், வரலாற்றுப் [illegible] தனக் [illegible] குறிப்பிட்ட தமன்னா படப்பிடிப்பு தொடங்கும் காலத்தை ஆவலுடன் எதிர்நோக்குவதாகவும் கூறியுள்ளார்.

## திருமணம் எப்போது? பாவனா




ரகசிய திருமணம் செய்து கொள்ள மாட்டேன் என்று கூறியுள்ளார் பாவனா. கேரளத்து பைங்கிளியான பாவனா தமிழில் சித்திரம் பேசுதடி, வெயில், தீபாவளி, அசல் உள்ளிட்ட படங்களில் நடித்துள்ளார். தற்போது கோடம்பாக்க வாய்ப்புக்காக காத்திருக்கும் பாவனா மலையாள த்தில் பிசியாக நடித்துக்கொண்டிருக்கிறார்.

இந்நிலையில் மல்லுவுட் உலகில் இவருக்கு திருமணம் என்று செய்திகள் வந்த வண்ணம் உள்ளன. இதுகுறித்து அவர் கூறுகையில், திருமணத்திற்கு அவசரம் காட்ட விரும்பவில்லை. திருமணம் என்பது எனது வாழ்க்கையில் மாற்றத்தை உண்டு பண்ணி விடாது, அதற்கு தயாராகும்போது, ரகசியமாக இல்லாமல் அனைவரிடமும் அது குறித்த தகவலை தெரிவிப்பேன் என்று கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பூமிக்கு அருகே மிக அபாயகரமான விண்பாறை: நாசா கண்டுபிடிப்பு



பூமிக்கு அருகே சுற்றி மிகவும் அபாயகரமான விண்பாறை ஒன்று சுற்றி வருவதாக அமெரிக்காவின் நாசா அனுப்பிய நியோவைஸ் என்ற செயற்கைகோள் கண்டுபிடித்துள்ளது. அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான நாசா, விண்வெளி குறித்து ஆராய்வதற்காக நியோவைஸ் என்ற செயற்கைகோளை விண்ணுக்கு அனுப்பியது. அந்த செயற்கைகோள் பூமியை சுற்றிவந்து விண்வெளியை பற்றிய அறிய புகைப்படங்களை அனுப்பி வருகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் நியோவைஸ் அனுப்பிய புகைப்படம் ஒன்றில், பூமியில் இருந்து 43 மில்லியன் மைல் தூரத்தில் அபாயகரமான விண்பாறை ஒன்று சுற்றிவருவது தெரியவந்துள்ளது. 2013 ஒய்.பி. 139 என்றழைக்கப்படும் இந்த விண்பாறையானது நிலையான நட்சத்திரங்களின் பின்னணியில் நகர்ந்துசெல்வதை இந்த விண்கலம் படம்பிடித்துள்ளது. அரிசோனா பல்கலைக்கழகம் பயன்படுத்தும் விண்வெளியை படம் பிடிக்கும் டெலெஸ்கோப்பும் இந்த விண்பாறை சுற்றுவதை உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது

# திமிங்கலங்கள் மூச்சடக்குவது எப்படி? விடை கண்டனர் விஞ்ஞானிகள்

சுற்றாடலுக்கு ஏற்ப பிராணிகளில் உடலில் மாற்றங்களை ஏற்படுத்தும் பரிணாம வளர்ச்சியின் சிறப்பான உதாரணமாக கடல்வாழ் பாலூட்டி விலங்குகள் சுவாசிக்காமல் ஒரு மணி நேரம் வரையில் நீருக்கடியில் இருப்பது கருதப்படுகிறது.

இவ்வகையான பிராணிகளின் உடலில் உள்ள மயோகுளோபின் என்ற புரதத்தை விஞ்ஞானிகள் ஆராய்ந்தனர்.

இவ்விலங்குகளின் தசைகளில் காணப்படும் இந்த புரதம், பிராணவாயுவை சேமித்துவைக்கவல்லது. திமிங்கலங்கள், சீல்கள் போன்ற பிராணிகளில் உள்ள மயோகுளோபின்கள் "ஒட்டாமல் விலகிற்கும்" விசேடத் தன்மையைக் கொண்டிருப்பதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.

இதன் காரணமாக இந்தப் புரதம் பெருமளவான ஆக்ஸிஜனை தம்முள் சேமித்துவைக்கின்ற போதிலும் "அளவுக்கதிகமான காற்றடைத்த பந்துகளாக" அந்த விலங்குகள் திணறாமல் இருக்க இத்தன்மை உதவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. இந்தக் கண்டுபிடிப்பின் விவரங்கள் சயின்ஸ் என்ற சஞ்சிகையில் பிரசுரமாகியுள்ளன.

சாதாரணமாக மயோகு ளோபின் புரதம் அதிகமாக ஒன்று சேரும்போது அவை ஒன்றோடு ஒன்று ஒட்டிக்கொள்ளும்.

ஆனால் குறிப்பிட்ட இந்த கடல்வாழ் பாலூட்டி விலங்குகளிடம் இப்புரதம் அவ்வாறு ஒட்டிக்கொள்வதில்லை.

"அதனால்தான் அதிகமான காற்றை உடல் திசுக்களில் சுமந்துகொண்டிருந்தாலும், இந்த விலங்குகளால் இயங்க முடிகின்றன" என்று இந்த ஆய்வில் பங்கேற்ற லிவர்பூல் பல்கலைக்கழகத்தின் விஞ்ஞானி டாக்டர் மைக்கேல் மெரென் பிரிங்க் பிபிசியிடம் கூறினார்.

# விளையாட்டுப் பையன்

## கம்பியில்லா முறையில் மின்சார இணைப்பை பெறும் வழிமுறை : அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு



கம்பியில்லா முறையில் மின்சாதனங்களுக்கு மின்இணைப்பைப் பெறும் முறையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

செல்போன் உள்ளிட்ட மின் சாதனப் பொருள்களை ஒயர் இணைப்பு இல்லாமல் சார்ஜ் செய்து கொள்ளக்கூடிய முறையை அமெரிக்காவின் டியூக் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர்.

இது தொடர்பாக அந்த பல்கலைக் கழகத்தின் மின்னணு மற்றும் கணினி பொறியியல் துறை உதவி பேராசிரியர் யாரோஸ்லாவ் உர்ஸு"மோவ் கூறுகையில், மிகவும் நுண்ணிய மின் காந்த அலைகள் மூலம் மின்சாரத்தை கொண்டு செல்ல முடியும்....

## மாரடைப்பு வரப்போவதை எச்சரிக்கும் கார் தயாரிப்பு



கார் ஓட்டுபவருக்கு மாரடைப்பு வரப்போவதை எச்சரிக்கும் கார் ஜப்பானில் தயாரிக்கப்பட்டுள்ளது. மாரடைப்பு காரணமாக ஏற்படும் சாலை விபத்துகளை குறைப்பதற்காக ஜப்பானின் நிபோ மருத்துவ நிறுவன நிபுணர், தகாவோ காதோ இப் புதிய காரை வடிவமைத்து உள்ளார்.

இந்தக் காரில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மின்கம்பங்கள் (எலக்டரிக் போல்கள்) இதயத் துடிப்பை கண்காணிக்கும் பணியை செய்யும். ஸ்டியரிங்கில் உள்ள சென்சார் கருவி ஓட்டுபவரின் நாடித்துடிப்பை கண்காணிக்கும். நாடித்துடிப்பின் வேகத்தைப் பொறுத்து இதயத்திற்கு செல்லும் தமனிகளின் ரத்த ஓட்டத்தை அளவிடும்.

கார் ஓட்டுபவரின் நாடித் துடிப்பு மற்றும் ரத்த ஓட்டத்தில் ஏதேனும் மாற்றம் இருந்தால், அதனுடன் இணைக்கப்பட்டிருக்கும் கம்பியூட்டரில் தகவல் வெளியாகி ஓட்டுபவரை எச்சரிக்கும்.

இந்த எச்சரிக்கை செய்தி கண்டவுடன் உடனடியாக மருத்துவ சிகிச்சை எடுத்துக் கொண்டால் மாரடைப்பை தவிர்க்கலாம் என்று தகாவோ கதோ கூறியுள்ளார்.



# ஒரு கொலையின் கதை

(38) (மாயன்)

**வரவேற்பாளன் மிக நிதானமாக ஒவ்வொருவரையும் ஊடுருவிப் பார்க்கின்றார். அவருக்கு அவர்கள் இருவரையும் மிகத் தெளிவாக அடையாளம் தெரிகின்றது. எனினும் ஏனைய அனைவரையும் கூட ஒரு தடவை.........**

தெளிவாகப் பார்த்துவிட அவர் விரும்புவதாகவே பட்டது....

முதலாவது தடவை அவர் அவ்வரிசையைக் கடந்து சென்ற பின் இரண்டாவது தடவை அவர் திரும்பி வந்தார். வேறு எவருமே அவருக்குத் தெரிந்தவர்கள் அங்கு இல்லை.... திரும்பவரும் போது இரண்டாவதாக நிற்பவரை அவர் தெளிவாக அடையாளம் காட்டுகின்றார். அடுத்து அவ்வரிசையின் இறுதியில் நிற்பவரையும் தெளிவாக அடையாளம் காண்கின்றார். இறுதியாக அவர்கள் அனைவரையும் ஒரு தடவை திரும்பிப் பார்த்த பின் கட்டளைக்காக அவர் நிமிர்ந்து பார்த்தார்.

அவரை வெளிச்செல்லுமாறு கட்டளை விதிக்கப்பட காவல்துறை உத்தியோகத்தர் அவரை கையோடு அழைத்துச் சென்று நீதிமன்றின் வெளியே செல்லப் பணித்தார்.

முதலாவது அடையாள அணிவகுப்பின் பெறுபேறாகச் சந்தேக நபர்கள் இருவரும் தெளிவாக அடையாளம் காணப்பட்டிருப்பதை நீதிமன்று தனது பதிவேடுகளில் ஏற்றிக்கொள்கின்றது.

இப்போது அடுத்த சாட்சி உள்நுழைய ஆயத்தங்கள் நடைபெறத் தொடங்கியது.

சந்தேகநபர்களுக்கு ஆடைகளையோ இடங்களையோ அவர்களது ஏனைய மாற்றக்கூடிய விடயங்களையோ மாற்றிக்கொள்ளலாம் என்ற கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

இக்கட்டளையைச் செவிமடுத்த சந்தேக நபர்கள் இருவரும் தமது மேலாடைகளை மாற்றிக் கொண்டனர். அத்துடன் 13வது இடத்தில் நின்றவர் தனது இடத்தை 6வது இடத்திற்கு மாற்றிக்கொண்டார். மீண்டும் வரிசை குலைந்து கணப்பொழுதில் ஒழுங்குக்கு வந்தது.

காவல்துறை அலுவலர் வரிசையை மேற்பார்வையிட்டு திருப்திப் பட்டுக்கொண்ட சைகை வெளியானது. அதனைத் தொடர்ந்து இரண்டாவது அடையாளம் காண்பவர் உள்நுழைகின்றார்.

அவர் கேதீஸின் மனைவியின் தம்பியின் நண்பன். தொடருந்துத் தரிப்பிடம் வரைக்கும் தனது நண்பனை கொண்டு செல்ல வந்தவன்.

அவன் ஆணைக்காகக் காத்திருக்கின்றான். நிசம்பதம் ....குடி கொண்டுள்ள அந்த இடத்தின் மௌனத்தைக் கிழக்கின்றது அந்த ஆணை....... அடையாளம் காண்க......

அந் நண்பன் மெதுவாக ஆனால் தீர்கமாக ஒவ்வொருவரையும் பார்த்துக் கொண்டு நகர்ந்தான். முதலாவதாக நின்ற அலிக வை அவனால் அடையாளம் காண முடியவில்லை. ஆனால்.... ஆனால்... ஆறாவது இடத்தில் உள்ளவனின் முகம் தெளிவாக அந் நண்பனுக்குத் தெரிகின்றது. கணநேரம் அவ்விடத்தில் தாமதிக்கும் அவன் டொடியை அடையாளம் கண்டதை உறுதிப்படுத்துகின்றான்.

மேற்கொண்டு அவ்வரிசையில் நகரும் அவனது விழிகளில் எவரும் தெரிந்தவர்கள் இல்லை. பதினாறாவது மனிதனைக் கடக்கும் அவன் எவரையும் பார்க்காமல் தலை குனிந்த வண்ணம் அவ்விடத்தை விடுடு வேகமாக வெளியேற முற்பட்டான். காவல்துறை அதிகாரியின் கை அவனது வேகத்தை மட்டுப்படுத்தியது.

அந் நண்பனிடம் சில கேள்விகளைக் கேற்க நீதித்தரப்பு முனைந்ததால் காவல்துறை அதிகாரி அவனை சற்றே இறுக்கமாக பிடித்து நிறுத்தினார்.

"வேறு தெரிந்தவர்கள் எவரும் இல்லையா?"

"இல்லை"

"நீர் காட்டிய நபரைக் கண்ட அன்று அந் நபர் எந்த இடத்தில் நின்றார்?"

"ஜயனார் வீதியின் படலைக்கு அருகில் அவர் நின்றார்"

சிறிது நேர அமைதி அங்கு குடி கொண்டது. தட்டெழுத்தாளரின் இயந்திர ஒலி பட...பட வென நிசப்தங்களைக் குலைத்து ஒய்த போது..... நண்பனைப் போகச் சொல்லும் உத்தரவு வெளியானது.

இறுதி அடைாளம் காண்பவரின் நேரம் அண்மித்தது. அப்போதும் சந்தேக நபர்களுக்கு மாற்றிக்கொள்ளும் எதனையும் மாற்றிக்கொள்ள வாய்ப்பளிக்கப்படுகின்றது.

அவர்கள் தமது பாதணிகளை மாற்றிக் கொண்டார்கள். அத்துடன் டொடி தனது நிற்குமிடத்தை 9வது நிலைக்கு மாற்றிக் கொள்கின்றார்.

குலையும் வரிசை மீண்டும் சரியாகின்றது. முன்னரைப்போலவே காவல்துறை அலுவலர் அவ்வரிசையை மேற்பார்வை செய்தார். அவர் திருப்தியை வெளியிட்ட கணத்தில் மூன்றாவது அடையாளம் காண்பவரை உள் அழைத்துவருமாறு சமிக்ஞை இடப்பட்டது.

அவர் உள்நுழையும் போது அலிக முதலாவது இடத்திலும், டொடி 9வது இடத்திலும் நிற்கின்றனர்.

உள்ளே வந்தவர் வயதான கத்திக் கடைக்காரர். வயதடைந்ததால் லேசான தளர்விருந்தாலும் தனக்கு முற்றுமுழுதும் புதிய இடமொன்றில் அவ்வயதில் வரவேண்டியிருப்பதை எண்ணி அவர் அசூசை அடைந்திருப்பதை அவரது முகம் வெளிக்காட்டியது.

அவரை அணிவரிசைப் பார்க்க அனுமதி வழங்கப்பட்டவுடன் அவர் மெதுவாக அவர்களைப் பார்த்த வண்ணம் நடக்கத் தொடங்குகின்றார். ஏனைய இருவரையும் விட இவ் அடையாளம் காண்பவர் ஒவ்வொருவரையும் நின்று உற்றுப் பார்த்து அடுத்தவரை நோக்கி நடை பயின்றார்.

முதலாவதாக நின்ற அலிக வை அவர் உற்றுப் பார்த்தார்........ சில வினாடிகள் மரணித்த் பின் அவர் அவனைத் தாண்டி எவ்வித சைகைகளும் இன்றிப் பயணித்தார்.

இப்போது இரண்டாவதாக நிற்பவனின் முன் அவர் நின்றார்....... அவனை உற்று நோக்க.... அவனை அவருக்கு மிகவும் தெரிந்தவனாகத் தோன்றியது... அவர் ....... அந்த கத்திக் கடைக்காரர் அவ்விரண்டாமவனை நோக்கி....... (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதும் 3வது போட்டி 16.01.2014 ஆரம்பம்



இலங்கை - பாகிஸ்தான் அணிகள் மோதும் மூன்றாவது டெஸ்ட் போட்டி 16.01.2014 அன்று ஆரம்பமானது. மூன்று டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் முதலாவது போட்டி வெற்றி தோல்வியின்றி நிறைவு பெற்றது. 2வது போட்டியில் இலங்கை அணி 9 விக்கெட்டுகளால் வெற்றியீட்டியது. இது இலங்கை அணி 9 மாதங்களின் பின்னர் பெற்ற வெற்றியாகும். இலங்கை அணியில் எந்தவித மாற்றமும் இடம் பெறமாட்டாது என அணித்தலைவர் அஞ்சலோ மெத்திவ்ஸ் தெரிவித்துள்ளார்.

இலங்கை அணியின் பந்து வீச்சு, துடுப்பாட்டம் நல்ல நிலையில் உள்ளது. இதேவேளை, பாகிஸ்தான் அணியின் சுழற் பந்து வீச்சாளர் சஹிட் அஜ்மல் இரண்டு போட்டிகளிலும் 5 விக்கெட்டுகளை மாத்திரம் கைப்பற்றியிருந்தார். அதனால் இந்தப் போட்டியில் சிறப்பாகப் பந்து வீசுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

முதல் டெஸ்ட் போட்டியில் முதல் இன்னிங்ஸில் எந்தவித விக்கெட்டையும் வீழ்த்தவில்லை. இதனால் நான் அதிகூடிய கவனம் செலுத்த எண்ணியுள்ளேன் என்று தெரிவித்துள்ளார். இதேவேளை பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் டேவ் வட்மோர். பாகிஸ்தான் அணியின் பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து ஓய்வு பெற்று செல்லவுள்ளார். அதனால் பாகிஸ்தான் அணி இந்தப் போட்டியில் வெற்றி பெற்று அவருக்கான பிரியாவிடை சமர்ப்பணமாக செலுத்துமா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

அதேவேளை இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் கிரகம் போர்ட் தனது பயிற்றுவிப்பாளர் பதவியில் இருந்து ஓய்வு பெறவுள்ளார். ஆனால் இலங்கை அணியினர் கடைசி டெஸ்ட் போட்டியில் வென்று அதனை அவருக்கு சமர்ப்பணம் செய்வார்களா என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

இலங்கை அணி தொடர்ந்து நல்லதொரு நிலையில் உள்ளதைக் காண முடிகின்றது. பாகிஸ்தான் அணியின் கோட்டையாக டுபாய், அபுதாபி ஆடுகளங்கள் காணப்படுகின்றன. அதில் இலங்கை அணி வெற்றி பெற்றிருப்பது இலங்கை வீரர்களின் சிறந்த அர்ப்பணிப்பு, விடா முயற்சி என்று கூடச் சொல்லலாம்.

## இந்தியாவில் கிரிக்கெட் தொடரில் பங்குபற்றுகிறது இலங்கைப் பெண்கள் அணி



இலங்கைப் பெண்கள் கிரிக்கெட் அணியானது கிரிக்கெட் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு நேற்றைய தினம் இந்தியாவிற்குப் புறப்பட்டுள்ளது.

இந்தியாவில் 03 ஒருநாள் சர்வதேசப் போட்டிகள், 03 டுவென்டி டுவென்டி சர்வதேசப் போட்டிகள் அடங்கிய தொடரில் இலங்கைப் பெண்கள் அணி பங்குபற்றவுள்ளது.

19ஆம் 21ஆம் 23ஆம் திகதிகளில் ஒருநாள் சர்வதேசப் போட்டிகளும் 25ஆம் 26ஆம் 28ஆம் திகதிகளில் டுவென்டி டுவென்டி சர்வதேசப் போட்டிகளும் இடம்பெறவுள்ளன. இத்தொடருக்கான இலங்கை அணியின் தலைவியாக ஷஷிகலா சிரிவர்தனவும் உபதலைவராக சாமரி அத்தப்பத்துவும் செயற்படவுள்ளனர்.

**இத்தொடருக்கான குழாம்:** ஷஷிகலா சிரிவர்தன, சாமரி அத்தப்பத்து, இஷானி கௌஷல்யா, தீபிகா ரசங்கிக்கா, டிலானி மனோதரா, சாமரி பொல்கம்பொல, யசோதா மென்டிஸ், அனுஷ்கா சஞ்சீவனி, மாதுரி சமுதிக்காக, சந்திமா குணரத்ன, உதேஷிகா பிரபோதினி, ரீபாலி வீரக்கொடி, லசாந்தி மதுஷங்கி, இசாடி ரணசிங்க

## கத்தார் உலகக் கோப்பை கால்பந்து போட்டி தேதிகள் மாற்றம்?

கத்தாரில் 2022 அம் ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் கடும் வெப்பம் காரணமாக கோடை காலத்தில் நடைபெறாது என்று சர்வதேச கால்பந்து சம்மேளனமான பி.பாபின் தலைமைச் செயலர் கூறியுள்ளது அவரது சொந்தக் கருத்து என அந்த அமைப்பு தெளிவுபடுத்தியுள்ளது.

முன்னதாக பிரெஞ்சு வானொலி ஒன்றிடம் அந்தப் போட்டி நவம்பர் மாதம் மத்தியில் ஆரம்பித்து ஜனவரி மாதம் மத்தியப் பகுதி வரை செல்லும் என்றும், அந்தக் காலப் பகுதி கால்பந்து விளையாடுவதற்கு மிகவும் சிறந்த வானிலை உள்ள காலம் என்றும் பி.பாவின் தலைமைச் செயலர் ஜெரோம் வால்க் தெரிவித்திருந்தார். உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் பாரம்பரியமாக ஜூன் மற்றும் ஜூலை மாதங்களிலேயே நடைபெறும்.

ஜூன் மற்றும் ஜூலை மாதங்களில் கத்தார் நாட்டில் கோடை காலம் என்பதால் அப்போது வெப்பநிலை சாதாரணமாக நாற்பது டிகிரிகளுக்கும் மேலாகச் செல்லும் எனும் காரணத்தாலேயே பி.'பா அந்தப் போட்டிக்கான தேதிகளை மாற்றியுள்ளது என்று அவர் கூறியிருந்தார். எனினும் கத்தார் நாட்டில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை போட்டிகளை மாற்றுவது குறித்த ஒரு அதிகாரபூர்வ முடிவு, இந்த ஆண்டு பிரேசிலில் நடைபெறவுள்ள உலகக் கோப்பை கால்பந்து போட்டிகளுக்கு முன்னர் எடுக்கப்படாது என .'பி.'பா அறிவித்துள்ளது. இதுவரை உலகக் கோப்பை கால்பந்து போட்டிகள் அனைத்துமே மே, ஜூன் அல்லது ஜூலை மாதங்களிலேயே நடைபெற்றுள்ளன.

## திருமலை மரதன் ஓட்டம் முதல் பரிசு ரூ 10000/-


திருமலை மாவட்ட UNIVERSITY STUDENTS ASSOCIATION வழங்கும் 14 தொடக்கம் 24 வயதுக்கு உட்பட்டோர்க்கான மரதன் காலை 6.30 மணியளவில் நடைபெற வுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

முதல் பரிசாக ரூ 10000, 2ம் பரிசாக ரூ 7500.00, மூன்றாம் பரிசாக ரூ 5000.00 மேலும் 10 ஆறுதல் பரிசில்களும் வழங்கப்படவுள்ளது.

அனுமதிக்கட்டணம் ரூ 50.00 மட்டுமே.
அனுமதிகள் கிடைக்குமிடம் TDUSA அலுவலகம் (நகராட்சிமன்ற வளாகம்) வாசிக சாலை (அன்புவழிபுரம்)



## ஜெயம் பாலகம் குறுக்கெழுத்து புதிர்- 003



**இடமிருந்து வலமாக**

1. பண்டைய தமிழர் இலங்கை அரசனை இவ்வாறு அழைப்பர்.
2. பாற்கடலை இவ்வாறும் அழைப்பர்.
3. தேவாமிர்தத்தை இவ் மருந்து என்றும் கூறுவர்.
5. பண்டைய காலத்தில் மாணாக்கர் கல்வி கற்கும் இடம்.
6. செகுணாப்புலவர் படைத்த காப்பியங்களில் ஒன்று
10. குற்றம் பாக்கில் இது இல்லை என்பது ஓர் முதுமொழி
11. ஆசாரசீலையை இவ்வாறும் கூறுவர்
14. இரவல் பொருளை இவ்வாறும் கூறுவர் (குழம்பியுள்ளது)
15. சூதாட்டத்தில் வைக்கப்படும் சிறுதனம்
17. சாதனையாளருக்கு வழங்குவது (குழம்பியுள்ளது)
19. அரசியல் வாதிகளின் சங்கம் (திரும்பியுள்ளது)

**மேலிருந்து கீழாக**

1. ....................துன்பமும் மாறிமாறி வருவதுதான் வாழ்க்கை
3. நீர்வீழ்ச்சியை இவ்வாறும் அழைப்பர் (குழம்பியுள்ள)
4. கண்ணதாசனை இவ் அரசர் என்றும் கூறுவர்.
5. குறிஞ்சி நிலப்பெண்.
7. கடலை இவ்வாறும் அழைப்பர் (குழம்பியுள்ளது)
8. திருமலையின் பிரபல பெண்கள் பாடசாலையின் பெருமை கூறும் நூல் (குழம்பியுள்ளது)
9. நாம் வாழும் பூமி (குழம்பியுள்ளது)
12. பாராட்டத்தக்கது இதன் ஒத்த கருத்து
13. மாத சிரார்த்த தினத்தை இவ்வாறும் கூறுவர் (குழம்பியுள்ளது)
16. மலைக்குகை இதன் ஒத்த கருத்து (குழம்பியுள்ளது)
18. சுவர்க்கத்தை இவ்வாறும் அழைப்பர் (குழம்பியுள்ளது)

## குறுக்கெழுத்து புதிர்- 002 ற்கான விடைகள்

**இடமிருந்து வலமாக**

1. கம்பர்
2. ஒட்டாவா
3. தாய்
4. மணிமேகலை
5. மின்சாரம்
6. உரல்
7. மிடி
8. மிசைதல்
9. கிறீன்லாந்து
10. மலைமுரசு
11. குர்பான்

**மேலிருந்து கீழாக**

1. கண்வாய்
2. தாமிரபரணி
3. மின்மினி
4. சாந்தம்
5. உகமகள்
6. மேரு
7. கிண்கிணி
8. கவடு
9. டென்மார்க்

**போட்டி முடிவு திகதி: 23.01.2014**

- விடைகளை இங்கு வெளியாகி உள்ள கூப்பனில் எழுதி கத்தரித்து அனுப்பவும்
- முற்றிலும் சரியான விடை எழுதுபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் மூன்று அதிஷ்டசாலிகளுக்கு முறையே முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக ரூபா 250/=, 150/=, 100/= பெறுமதியான கொள்வனவு கூப்பன் வழங்கப்படும்.
- இப்போட்டியில் ஜெயம் பாலகம், மலைமுரசு ஊழியர்களும் அவர்களின் நெருங்கிய உறவினர்களும் பங்குபற்ற முடியாது.

விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி:-
ஜெயம் குறுக்கெழுத்துப் போட்டி. இல -001
32, இராஜவரோதயம் வீதி, திருகோணமலை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# லஸந்த விக்கிரமதுங்க பற்றிய சில நினைவுத் துளிகள் - சாந்தி சச்சிதானந்தம்

2009ம் ஆண்டு ஜனவரி மாதம் 9ந்திகதி. சண்டே லீடர் பத்திரிகையின் ஆசிரியர் லஸந்த விக்கிரமதுங்க அவர்கள் ஒரு பிரதான வீதியின் நடுவில் அவருடைய வாகனத்தில் வைத்து பகிரங்கமாகக் கொல்லப்பட்டார் என்கின்ற அதிர்ச்சியான செய்தி எம்மைத் தேடி வந்த நாள்.

92 வயதான எனது தாயார் கூட சோகத்தின் மேலீட்டால் அன்று சரிவர உணவு உண்ணவில்லை.

அவர் மரணமுற்றதைக் கேள்விப்பட்டு அவருடைய வீட்டிற்குச் சென்று மரியாதை செலுத்தியவர்களும், அவருடைய மரண ஊர்வலத்தில் கலந்து கொண்டோருமாக ஆயிரக்கணக் கானோர் தமது துயரத்தை அவருடைய குடும்பத்தினருடனும் ஏனையோருடனும் பகிர்ந்து கொண்டனர்.

மரணச்சடங்கு முடிவடைந்ததற்குப் பிறகும் கூட பலர் கூடி கொழும்பு விகாரமாதேவிப் பூங்காவிற்கு முன்பதாக மாதாமாதம் சந்தித்து மெழுகுச்சுடர் கொளுத்தி அவரை நினைவு கூர்ந்தனர்.

இத்தகைய தொரு தாக்கத்தினை மக்கள் மத்தியில் ஏற்படுத்திய இதழியலாளர்தான் லஸந்த. இந்த மாதம் 9ந்திகதி அவரது ஐந்தாவது வருட நினைவு நாளாகும்.

லஸந்த இறந்த மூன்றாம் நாள், சண்டே லீடர் அவர் இறக்க முன்னர் எழுதி, தான் இறந்த பின்னர் பிரசுரிக்கும்படி கூறிச்சென்ற ஆசிரியர் தலையங்கத்தினைப் பிரசுரித்தது.

"பின்பு என்னைத் தேடி வந்தனர்...." இதுவே படுகொலை செய்யப்பட்ட இதழியலாளர் லஸந்த விக்கிரமதுங்கவின் கடைசி ஆசிரியத் தலையங்கத்தின் தலைப்பாகும்.

சகலருக்கும் அதிர்ச்சி தந்த இந்தத் தலையங்கத்தில் அவர் தன்னுடைய சாவின் நிச்சயத்தை தெரிவித்தது மட்டுமல்லாமல் தான் ஏன் இப்படியான ஆபத்து நிறைந்த துறையைத் தெரிவு செய்தார் என்பதைப் பற்றிய விளக்கத்தினையும் கொடுத்திருந்தார்.

"உலகில் தனது தொழில் நிமித்தம் இறக்க வேண்டிய ஒரேயொரு தொழில் உண்டு, அதுதான் இராணுவப் பணியாகும். இலங்கையில் அதனுடன் சேர்த்து இன்னுமொரு தொழில் உண்டு, அதுதான் இதழியல்துறையாகும்." என்றே இந்தத் தலையங்கத்தினை அவர் ஆரம்பித்தார்.

இங்கு ஊடக நிறுவனங்கள் தாக்கப்பட்டிருக்கின்றன எரிக்கப்பட்டிருக்கின்றன. இதழியலாளர்கள் அச்சுறுத்தப்பட்டு, தாக்கப்பட்டுக் கொலை செய்யப்பட்டும் இருக்கின்றார்கள்.

இந்த வகையைச் சேர்ந்தவனாக நான் இருப்பதில் பெருமைப் படுகின்றேன், குறிப்பாக கடைசிப் பிரிவினராக இருப்பதிலே, எனத் தனது கொலையைக் கட்டியம் கூறுகின்றார்.

"நண்பர்கள் என்னைச் சட்டத்தரணியாகத் தொழில் புரியும்படி வற்புறுத்தினார்கள். இரு கட்சிகளிலிருந்தும் அரசியல்வாதிகள் என்னை அணுகி தேர்தல்களில் போட்டியிடும் வாய்ப்புக்களையும் அமைச்சுக்களைப் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புக்களையும் வழங்கினார்கள்.

வெளிநாட்டுத் தூதுவர்கள் எனக்கு அவர்களின் நாட்டில் புகலிடம் கோரும் வாய்ப்புக்களையும் வழங்கினார்கள். என் வாழ்க்கையில் என்ன குறையிருந்தும் வழியில்லாமல் நான் இருந்ததில்லை.." என்றார்.

எனவே இலங்கையில் இருந்து கொண்டு ஊடகத்துறையைத் தேர்ந்தெடுத்தது ஏன் என அவர் கூறிய விதம் மிகவும் மனம் நெகிழ வைக்கும் வார்த்தைகளாகும்.

வாழ்க்கை கொடுக்கும் அழைப்புக்களில் பெரிய பதவி, புகழ், பாதுகாப்பு பணம் என இவையெல்லார்வற்றையும் விட மேலான அழைப்பொன்று இருக்கின்றது.

அதுதான் மனச்சாட்சியின் அழைப்பாகும் என்று சொன்ன வார்த்தைகளே இவை.

இத்தலையங்கத்தில் தமிழ் மக்கள் மீது கட்டவிழ்க்கப்பட்ட யுத்தத்தினைப் பற்றியும் குறிப்பிட அவர் மறக்கவில்லை.

அதனை ஜனாதிபதி மகிந்த இராஜபக்சவை நோக்கிய கணைகளாகவே வீசினார். "வடக்கு கிழக்கின்



மீதான இராணுவ ஆக்கிரமிப்பு தமிழ் மக்களை சுயமரியாதை இல்லாத இரண்டாந்தரப் பிரஜைகளாகவே வாழ வழி செய்யும்.

அவர்களை அபிவிருத்தி புனர்நிர்மாணம் என்பதையெல்லாம் காட்டி ஆறுதல்படுத்த முடியும் என்பதை உங்கள் கனவிலும் நினைக்காதீர்கள்.

இந்த யுத்தம் அவர்களின் மனதில் மாறாத வடுவாக மாறி காலம் உள்ளளவும் முரண்நிலைகளைத் தோற்றுவித்துக் கொண்டேயிருக்கும்.

அது மட்டுமல்லாமல் வெறுப்பு மிக்கதொரு புலம் பெயர் தமிழ் சமூகத்துடனும் நீங்கள் தொடர்ந்து அல்லாடிக் கொண்டிருப்பீர்கள்..

ஒரு அரசியல் தீர்வின் மூலம் இலகுவாகத் தீர்க்கப்படக்கூடியதொரு பிரச்சினையை இப்பொழுது நீங்கள் காலம் காலமாகத் தொடாந்து இழுத்தடிக்கப் போகிறீர்கள்." என எச்சரிக்கை விடுத்தார்.

ஐந்து வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த லஸந்தவின் வார்த்தைகளின் தீர்க்க தரிசனத்தினை இன்று கிழக்கு மற்றும் வட மாகாண தேர்தல்கள் மூலம் நிதர்சனமாக நாம் தெரிந்து கொண்டோம்.

லஸந்த ஒரு துணிச்சல் மிக்க ஊடகவியலாளர் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் இந்தப் பாத்திரத்தினை அவர் கையிலெடுத்ததன் பின்னணியினையும் நாம் சற்றே விளங்கிக் கொள்ள வேண்டும்.

கொழும்பு அரசாங்கத்தின் அதிகார மட்டங்களுக்கு சவால் விட்டு அவர்களின் கண்களில் விரலை ஆட்ட வேண்டுமென்றால் அதற்கு ஒரு குறிப்பிட்ட விதமான ஆளுமை தேவை.

அந்த ஆளுமையானது பல காரணிகளின் அடிப்படையில் உதிக்கின்றது. நகர்ப்புறத்தைச் சார்ந்த உயர் அல்லது உயர் மத்தியதர வர்க்கத்தைச் சோந்தவராக இருப்பது உயர் வர்க்கக் குடும்பங்கள் தமது பிள்ளைகளை அனுப்பும் பாடசாலைகளில் கல்வி கற்பது ஆங்கிலப் பலமை கொண்டிருப்பது தான் கற்ற பாடசாலைகள் மூலமாகவும் ஏனைய வழிகள் மூலமாகவும் பல மட்டங்களில் அறிமுகங்களையும் தொடர்புகளையும் பேணுவது என இவை பலவாகும்.

இதில் கற்கும் பாடசாலை மிகவும் முக்கியமாகும். அங்குதான் செல்வந்தர் குடும்பங்களுடன் தன்னம்பிக்கையுடன் ஊடாடும் குணாம்சத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

அங்கு கல்வி கற்பவர்களே, தமது வர்க்கத்தின் அடிப்படையினால் வளர்ந்து பெரியவர்களாகும்போது முக்கிய பதவிகளை வகிப்பவர்களாக மாறுகின்றனர். அவர்களின் தொடர்புகள் தொடர்ந்து கிடைக்கின்றன.

அத்துடன், இப்பாடசாலைகள் ஆங்கிலப் புலமையையும் அதனைப் பிரயோகிக்கும் ஆற்றலினையும் வழங்குகின்றன என்பதும் உண்டு.

மேலதிகமாக, இக்காரணிகளுடன் சேர்த்து ஒருவர் பெரும்பான்மை சிங்கள இனத்தினைச் சோந்தவராகவும் இருந்துவிட்டால் எங்கள் நாட்டில் ஒரு படி மேலாகத் துணிந்து செயற்படலாம். லஸந்தவுக்கு இக்காரணிகளெல்லாம் கூடி வந்தன.

1958ல் பிறந்து தமது இளவயதில் கொழும்பு புனித தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்றவர் லஸந்த.

இன்றைய சர்வதேசப் பாடசாலைகளுக்கு முன்பான காலம் அது. அன்று கிறிஸ்தவ தனியார் பாடசாலைகள்தான் கல்வியில் முன்னணியில் திகழ்ந்தன என்பதனால் அப்பாடசாலைகளிலேயே உயர் வாக்கத்தினர் தமது பிள்ளைகளையும் படிக்க விட்டனர்.

இப்பாடசாலைகளுள் புனித தோமஸ் கல்லூரி பெயர் பெற்ற பாடசாலையாகும். எமது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸவின் பிள்ளைகளும் இப்பாடசாலையில்தான் கல்வி கற்றனர் என்பது இதற்கு ஓர் உதாரணம்.

தனது பாடசாலைக் கல்வியின் பின்னர் சட்டப் படிப்பை மேற்கொண்டு ஒரு சட்டத்தரணியாகவும் கிட்டத் தட்ட எட்டு வருடங்களாகத் தொழில் புரிந்தார் லஸந்த.

இக்காலகட்டத்திலேதான் அவருக்கு அரசியலில் ஈடுபாடு ஏற்பட்டது. 1980களில் தேர்தலில் போட்டியிட்டார் என்றும் சொல்லப்படுகின்றது. அப்போது குடியுரிமைகளை இழந்திருந்த திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகாவுக்கு அந்தரங்க செயலாளராகவும் பணி புரிந்திருக்கின்றார்.

அன்று பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு மகிந்த இராஜபக்ஸவுடனான நட்பு அதற்குப் பின்னும் கடைசி வரை தொடர்ந்தது. அக்காலத்தில் எழுத ஆரம்பித்தவர் முதலில் ஐலண்ட் பத்திரிகையிலும் அன்றைய சன் பத்திரிகையிலும் பத்தி எழுத்தாளராகவும் அரசியல் விமர்சகராகவும் பணி புரிந்திருக்கின்றார்.

1994இலேயே இவரது பொற்காலம் பிறக்கின்றது. தனது தமையனார் லால் விக்கிரமதுங்கவுடன் இணைந்து சண்டே லீடர் பத்திரிகையினை அந்த வருடம்தான் ஆரம்பித்தார்.

ஓர் மதச்சார்பற்ற, தாராளவாத ஜனநாயகக் கொள்கையுடைய இலங்கையை உருவாக்க வேண்டும் என்கின்ற லஸந்தவின் நோக்குடன் சண்டே லீடர் ஆரம்பத்திலிருந்தே செயற்பட்டது.

அரசாங்க மட்டங்களிலுள்ள ஊழல்களை பிட்டுப் பிட்டு வைத்தது. அமைச்சரவைக் கூட்டங்களில் நடக்கும் அந்தரங்க விடயங்களை அம்பலமாக்கியது.

அந்தக் காலங்களில் அமைச்சராகவிருந்த மகிந்த இராஜபக்ஸவைத்தான் அன்றைய ஜனாதிபதி சந்திரிகா சண்டே லீடருக்குத் தகவல் கொடுக்கும் ஒற்றர் எனத் திட்டியது குறிப்பிடத்தக்கதாகும்.

சண்டே லீடர் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தில், அதாவது 1995 இலேயே லஸந்த முதல்முறையாகத் தாக்கப்பட்டார்.

இவருக்கும் இவருடைய குடும்பத்தினருக்கும் நாளும் பொழுதும் ஏற்படுத்தப்பட்ட அச்சுறுத்தல் காரணமாக இவருடைய மனைவி ரெயின் தனது மூன்று பிள்ளைகளையும் கூட்டிக் கொண்டு 2002ம் ஆண்டு குடியமர்வதற்காக அவஸ்திரேலியா சென்று விட்டார்.

அதற்குப் பின்னும் லஸந்த வளைந்து கொடுக்கவில்லை. மகிந்த இராஜபக்ஸ ஜனாதிபதியான காலத்தின் பின்னர்தான் சண்டே லீடர் அதி உக்கிரமான விமர்சனங்களை வெளியிடத் தொடங்கியது.

அவருடைய அரசாங்கம் பயங்கரவாதத் தடைச்சட்டத்தினை மேலும் இறுக்கமாக்கியது, யுத்தத்தினை மனிதாபிமானமற்ற முறையில் தொடாந்தது, வெளிப்படைத் தன்மையில்லாது ஆயுதக்கொள்வனவுகள் செய்யப்பட்டது, மூன்று சகோதரர்களும் அரசாங்கத்தில் அங்கம் வகித்து ஊழல் மலியச் செய்தது என இவை ஒவ்வொன்றுமே சண்டே லீடரின் எழுது பொருளாகின.

அரசாங்கம் நடத்தப்படும் முறைகள் பற்றி எத்தனையோ பெறுமதியான தகவல்களை வாசகர்கள் பெற்றுக்கொண்டனர். விடுதலைப் புலி உறுப்பினர்கள் கொல்லப்பட்டது தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு வெளியிடும் பொய் புள்ளிவிபரங்களைக் குறித்து அவர் எழுதிய நகைச்சுவைக் கட்டுரைகளும் கேலிச் சித்திரங்களும் மனதை விட்டகலாதவை.

இதற்கிடையில் சண்டே லீடர் மீதும் லஸந்த மீதும் எத்தனை தாக்குதல்கள்! 2008ம் ஆண்டின் கடைசிப் பகுதியில் ஜனாதிபதி மகிந்த இராஜபக்ஸவே அவரைத் தொலைபேசியில் அழைத்து "நீ இப்படி தொடர்ந்து எழுதினாயானால் உன் கதை முடிந்தது" என அச்சுறுத்தியிருக்கின்றார்.

கடைசியில், அவருடைய நண்பரான ஜனாதிபதி மகிந்த இராஜபக்ஸவின் ஆட்சியின் கீழே அவருடைய கையாட்களின் மூலம் லஸந்தவுக்கு மரணம் எற்பட்டது வரலாற்றின் விந்தையாகும்.

அவர் இறந்தபோது, "எங்களுக்கு இன்னும் ஒரு இரண்டு லஸந்தக்கள் இருந்திருந்தால் இந்த நாட்டையே மாற்றியிருப்போம்.." என்றெழுதினாராம் ஒருவர். உண்மைதான், இன்னும் இரண்டே இரண்டு லஸந்த விக்கிரமதுங்கக்கள் எமக்குக் கிடைக்க மாட்டார்களா?

அடி என்னடி உலகம், இதில் எத்தனை கலகம்

நன்றி


உலகத்தமிழ் செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த. சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டல்


**பயிற்சி 03** **பாடம் – கணிதம்**

1. 8 இதனை வரவுக்குறி மூலம் காட்டுக

2. 

தரப்பட்ட வென்னுருவில் n(A) ஐக் காண்க.

3. சுருக்குக $\frac{0.01 \times 0.01}{0.001}$

4. x இன் பெறுமதி காண்க. 



5. $x^2 - 6x$ இதனை நிறைவர்க்கமாக்க கூட்ட வேண்டிய உறுப்பைக் காண்க.

6. 20,30,50,60,M,70 என்ற எண்பரம்பலின் இடை 50 எனின் M இன் பெறுமானம் யாது?

7. $P(A) = 2/5$ எனின் $P(A^1)$ ஐக் காண்க.

8. $4x = \frac{1}{4}$ எனும் சமன்பாட்டின் x இன் பெறுமானம் காண்க.

9. சுருக்குக. $42 - \frac{5}{18}$

10. 

x ஐக் காண்க.

11. 1.35 மீற்றர் இதனை சென்றிமீற்றரில் தருக.


12. lg 1000 இன் பெறுமானம் யாது?

13. படித்திறன் 5 உம் (0,-2) எனும் புள்ளியினூடு செல்லும் நேர்கோட்டின் சமன்பாட்டை எழுதுக.

14. $X = -3$ , $y = 2$ எனின் $y^x$ இன் பெறுமானம் காண்க.

15. $\sqrt{2025}$ இன் பெறுமானம் யாது?

16. சுருக்குக $\sqrt{5} X \sqrt{10}$

17. 

AC = 16cm , OB = 6cm எனின் OC ஐ காண்க

18. ab/a+c = C எனும் சமன்பாட்டில் a ஐ b,c சார்பில் தருக.

19. சுருக்குக. $\frac{x2 + 5X + 6}{x + 2}$

20. அரைவட்டத்தின் சுற்றளவைக் காண்க.

**பயிற்சி 02 விடை**

1. 5.265 Kg
2. -3, -4
3. 2/6
4. - 28
5. (x-5) (Y+M)
6. a = $75^0$, b = $25^0$, C = $80^0$
7. 4 1/25
8. AB
9. 4
10. 35Km
11. 5
12. 27 பத்து
13. (0,0)
14. $36 x^2y^3$
15. (I) 200
    (II) 18 பக்கம்
16. இணைகரம்
17. a = வர்க்கமூலம் Mx/Y-P
18. 360 Kg
19. ரூபா 800
20. 1353

கணிதம் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் **T.குமணன்**

**MATHS**
Paper Classes Year 06, 07, 08, 09, 10 & G.C.E (O/L)
**Sir T. Kumanan 0772975953**
23. Sivan st Trinco.
G.C.E (O/L) பிரதி சனி தோறும்
Exam சகலமாணவர்களும் பங்குபெற்றலாம்.

# ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சைக்கான பயிற்சிகள் – 03

41. விலைப்பட்டியலை அவதானித்து கீழ்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

விலைப்பட்டியல்


| பொருள் | அளவு | விலை |
|---|---|---|
| சீனி | 1Kg | 80.00 |
| உருளைக்கிழங்கு | 1Kg | 100.00 |
| பென்சில் | 1 | 3.75 |
| றேந்தை | 1m | 12.50 |

1) $1\frac{1}{2}$kg சீனியின் விலை எவ்வளவு? (……………………….)
2) 500g உருளைக்கிழங்கு வாங்கத் தேவையான பணம் எவ்வளவு? (……………………….)
3) றேந்தை 1m வாங்கி ரூபாய் 20.00 ஐக் கொடுத்தால் கிடைக்கும் மிகுதிப்பணம் யாது? (……………………….)
4) 4 பென்சில்க் வாங்கி ஒருவர் கடைக்காரரிடம் ரூபாய் 10.00க் கொடுத்து மிகுதிக்காசுகளை 50சத நாணயங்களாகக் கொடுத்தார் எனின், அவர் கொடுத்த நாணயங்கள் எத்தனை? (……………………….)
5) $1\frac{1}{4}$kg உருளைக்கிழங்கு வாங்கி கடைக்காரருக்கு ரூ 200.00 க் கொடுத்தால் கிடைக்கும் மீதிப்பணம் எவ்வளவு? (……………………….)

42. பேருந்து காலை 6.45 இற்கு பேருந்து நிலையத்தலிருந்து புறப்பட்டது. 15 நிமிடங்களுக்குப் பின்னர் இரண்டாம் பேருந்து புறப்பட்டது. இரண்டாம் பேருந்து புறப்பட்ட நேரம் எவ்வளவு? (……………………….)

43. ஓர் இடத்திலிருந்து 10 பேர் 100 மீற்றர் தூரத்தை ஒரே வேகத்தல் நடந்து செல்வதற்கு எடுத்த நேரம் 20 நிமிடம் எனின், ஒருவர் அத்தூரத்தை நடப்பதற்கு எடுக்கும் நேரம் யாது? (……………………….)

44. உருவில் காணப்படும்




1) திண்மத்தின் பெயர் என்ன? (……………………….)
2) முகங்களின் எண்ணிக்கை யாது? (……………………….)
3) உச்சிகளின் எண்ணிக்கை? (……………………….)

45. மரங்கள் அழிக்கப்படுமானால்
என்ற தலைப்பில் ஆறு வாக்கியங்கள் எழுதுக.
(ஒவ்வொரு சொற்களிலும் குறைந்த பட்சம் நான்கு சொற்களேனும் இடம்பெற வேண்டும். அவ் வாக்கியங்களில் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாக இருத்தல் வேண்டும்)

1) ……………………………………………………………

2) ……………………………………………………………



……………………………………………………………

6) ……………………………………………………………

**01 ஆம், 02 ஆம் வினாக்களில் முதலில் தரப்பட்ட உருவுடன் தொடர்புடைய உருவைத் தெரிவு செய்க**

1)  (1) (2) (3)

2) (1) (2) (3)

**கீழேயுள்ள ஒவ்வொரு வினாவிலும் காணப்படும் கூற்று பிழையானதற்கான காரணம் என்ன என்பதை தந்துள்ள மூன்று விடைகளிலிருந்து தெரிந்து அதன் கீழ்க் கோடிடுக.**

1) எமது நாட்டின் தேசிய பறவையாகிய மயிலில் பல நிறங்கள் காணப்படுகின்றன.
   (1) எமது நாட்டிற்கு தேசிய பறவை இல்லை.
   (2) எமது நாட்டிற்குரிய தேசிய பறவை மயில் இல்லை.
   (3) மயில் ஒரு பறவை இல்லை.
2) பாடசாலைகளில் காணப்படும் கழிவுப் பொருட்கள் இடப்படும் நீல நிறப் பெட்டியில் உக்கக் கூடிய பொருட்கள் இடப்படும்.
   (1) பாடசாலையில் உக்கக்கூடிய பொருட்கள் காணப்படுவதில்லை.
   (2) நீலப்பெட்டிகள் காணப்படுவதில்லை.
   (3) நீல நிறப்பொட்டியில் மீள் சுழற்சிக்கு உட்படுத்தக்கூடிய பொருட்கள் இடப்படும்.

புலமைப் பரிசில் வழிகாட்டல் -
திருமலையின் பிரபல ஆசிரியர் **திரு. ந. மனோகரன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ள அபாயத்தில்.....

ஆகியவற்றின் சில பிரதேசங்களில் வெள்ள அபாயம் ஏற்பட்டுள்ளதுடன் அபாயம் உள்ள பகுதியில் உள்ள மக்களை பாதுகாப்பாக வெளியேற்றுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றது.

முந்தானையாறு வெள்ளம் கடலில் கலக்கும் பகுதிகளில் உள்ள மக்களை பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றுமாறு குறித்த பகுதிகளின் பிரதேச செயலாளர்களுக்கு மாவட்ட செயலாளரினால் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாதிக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ள பகுதிகளில் உள்ள மக்கள் பாதுகாப்பான இடம் என தெரிவிக்கப்பட்ட இடங்களுக்கு செல்லுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

பாதிக்கப்படும் பகுதிகளின் தொடர்பில் குறித்த பகுதிகளில் பிரதேச செயலாளர்கள் அறிவிப்புகளை வழங்குவர்கள் எனவும் அனர்த்த முகாமைத்துவ நிலைய உதவிப்பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

## நூற்றாண்டுக்கு

கிழக்குக் கடற்பரப்பில் கிடப்பதாக அவ்வலகின் ஆய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். பிரான்ஸ் நோக்கிப் பயணித்த சேர். ஜோன் ஜக்ஸன் எஸ்.எஸ். என்ற நீராவிக் கப்பலே விபத்தடைந்துள்ளது. வெஸ்மினிஸ்டர் கப்பலிடுகைக் கம்பனிக்குச் சொந்தமான இக்கப்பல் 4231 தொன் நிறையுடையது.

## வைத்தியர்......

அலைகளும் மிக வேகங் கொண்டிருந்தன. அவ்வேளையில் தனது இரு நண்பர்களுடன் கடலில் நீராடிக் கொண்டிருந்த றொபின்சனையும் ஏனைய இருவரையும் கடலலை புரட்டிப் போட்டுள்ளது. எனினும் ஏனைய இருவரும் தெய்வாதீனமாக உயிர்தப்பியிருந்தாலும் றொபன்சன் அவ்விடத்திலேயே மரணமடைந்ததாகத் தெரியவந்துள்ளது.

நீரில் மூழ்கடிக்கப்பட்ட அவரைக் கரைக்கிழுத்து வந்து ஆரம்பக்கட்ட முதலுதவி நடவடிக்கைகளை முன்னெடுத்த போதும் அவை பலனளிக்கவில்லை என அவருடன் நீராடிய வைத்திய நண்பர்கள் தெரிவித்துள்ளனர்.

அகால மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு மரண விசாரணைகளின் பின்னர் கையளிக்கப்பட்ட அவரது இறுதிக்கிரியை 16ம் திகதி நடைபெற்று உடலம் நல்லடக்கம் செய்யப்பட்டது.

## கிழக்கில் தொடரும்.......

விக்கிரக அறையில் சந்தேகத்திற்கு இடமாக யாரோ நடமாடுவதை அவதானித்திருக்கின்றனர். அதனைத் தொடர்ந்து அவ்வறையின் கதவை வெளிப்புறமாகத் தாழிட்ட அம் மாணவர் குழு காவல்துறைக்கு அறிவித்துள்ளது. சம்பவ இடத்திற்கு வருகை தந்த காவல்துறை சந்தேகநபரைக் கைது செய்த போது அவர் அங்கிருந்த உண்டியல்களையும் உடைத்திருப்பது தெரியவந்துள்ளது. ஒரு தொகைப் பணத்தையும் சில கூரிய ஆயுதங்களையும் காவல்துறை மீட்டுள்ளது.

குறித்த நபர் மட்டக்களப்பு தாண்டவன் வெளி பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரியவந்தது.

மட்டக்களப்பில் கோவில்கள் உடைக்கப்பட்டு கொள்ளைகள் நாளாந்தம் நடைபெறுகின்றது. அண்மையில் மாங்காடு மாணிக்கப்பிள்ளையார் கோவில், குருக்கல்மடம் செல்லக் கதிர்காம முருகன் கோவில் மற்றும் ஐயனார் கோவில் ஆகியன் ஒரே நேரத்தில் கொள்ளையிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## 5வது வலயத்தினுள்.....

வலயத்தினுள் உள்வாங்கப்பட்டுள்ளன.

நிர்வாக வலயங்கள் ஒவ்வொன்றிற்கும் தலைமை நிர்வாக அதிகாரிகள் மந்திரிசபையால் நியமிக்கப்படுவர். அத்துடன் இந் நிர்வாக வலயங்களின் செயற்பாடும் அரசாங்கத் திணைக்களமொன்றின் செயற்பாட்டை ஒத்ததாகவே காணப்படும். திவிநெகும திணைக்களம் என உருவாக்கப்படவுள்ள அத்திணைக்களங்களின் கீழ் சமூக மட்ட நிறுவனங்களும் கிராமிய மட்ட வங்கிகளும் உருவாக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

வலயம் ஐந்தினுள் உள்வாங்கப்பட்டுள்ள மாவட்டங்களின் அடிப்படையில் திருகோணமலையும் மட்டக்களப்பும் பொலனறுவையுடனும், அனுராதபுரத்துடனும் இணைக்கப்பட்டுள்ளதால் அம்மாவட்டங்களில் குடித்தொகைப் பரம்பலின் படி படி சிங்கள மக்கள் 58 வீதமாகவும், தமிழ் மக்கள் 24 வீதமாகவும் முஸ்லிம்கள் 18 வீதமாகவும் காணப்படுவர்.

## உலகின் அழுக்கான

வருடங்கள் ஆகியுள்ளது.

"குளித்தால்தான் வருத்தம் வரும்" என அவர் தெரிவித்துள்ளார். ஈரானின் மேல்மாகாணத்தின்.

கிராமப்புறமாக தேஜ்ஹா கிராமத்தில் வசித்துவரும் 80 வயதான ஹாஜி என்பவரே இவ்வாறு அடையாளம் காணப்பட்டுள்ளார். அசையாது அவர் அமர்திருப்பாரானால் அவரை மனிதன் என்று எவராலும் கண்டுபிடிக்க முடியாது என தெரிவித்துள்ள ஊடகவியலாளர் அவரை ஒரு பாறை என்றே அடையாளப் படுத்தக் கூடியதாக இருப்பதாகவும் தெரிவித்துள்ளார். பழுதடைந்த உணவும், எண்ணெய்க் கலப்படமான நீருமே வாழ்வதற்குப் அவருக்குத் தேவையாக இருக்கின்றது.

நிலத்தையே வீடாகக் கொண்டுள்ள அவர் தனது புகைப் பிடிப்பானில் புகையிலைக்குப் பதிலாக மிருக மலத்தையிட்டு பற்றவைத்துக் கொள்கின்றார்.

இளமையில் கடுமையான தாக்கங்களுக்குட்பட்டதாலேயே ஹாஜி இவ்வாறு மாறி விட்டதாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

## புதிய தமிழ் அரசியல்.....

பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த பிரமுகர்களின் கூட்டமே அன்று நடைபெற்றது. இதில், ஈ.பி.டி.பியைச் சேர்ந்த டக்ளஸ் தேவானந்தா, சிறிரெலோவைச்சேர்ந்த உதயராசா, தமிழர் விடுதலைக்கூட்டணியைச்சேர்ந்த நான் ஆகிய மூவரும், பத்பநாபா (ஈ.பி.ஆர்.எல்.எப்) ஐச் சேர்ந்த சிறிதரனுடன் இணைந்து ஒரு மாற்று அணியை உருவாக்க எண்ணுகின்றோம் என்ற ஒரு தப்பான அபிப்பிராயம் மக்களுக்குக் கொடுக்கப்படுகின்றது. உண்மையில் சிறிதரன் தான் இந்த சந்திப்புக்கு ஏற்பாடு செய்தார். இவர் என்னுடன் நீண்ட காலமாக தமிழ்த்தேசியக்கூட்டமைப்புடன் இணைந்து செயற்பட்டவராவார். ஏற்கெனவே கூறப்பட்ட தலைவர்களும் பல்வேறு அரசியல் கட்சிப் பிரமுகர்கள்,புத்திஜீவிகள் உட்பட நூற்றுக்கு

## வீடு திரும்பினர்

காங்கேசன்துறை சர்வதேச கடல் எல்லையில் வைத்து இலங்கை கடற்படையினரிடம் கையளிக்கப்பட்ட மீனவர்களிடம் நீரியல்வள திணைக்களத்தின் அதிகாரிலும் யாழ்ப்பாணத்தில் வைத்து விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னரே அவர்களை தங்களது சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

## சோலையடி கி. அ. ச...

எனக்குத் தொய்வு நோய் இருப்பதால் அதற்கான மாத்திரைகளை குடித்துவிட்டு தூங்கிக் கொண்டிருந்தேன். அப்போது வீட்டில் இருந்த எனது தம்பியை அப்பம் வாங்கிக்கொண்டு வருமாறு அவரது மகனுடன் 1,000 ரூபாவை கொடுத்து அனுப்பியுள்ளார். எனது வீட்டில் இருந்த சற்று மனநிலை பாதிக்கப்பட்ட எனது அத்தையிடம் அவர் கூறியிருக்கின்றார். அப்பம் வாங்கச் சென்ற இருவரையும் காணவில்லை சற்று அவர்களை பார்த்து வருமாறு அவர்களிடம் கூறி அவரையும் அனுப்பியுள்ளார்.

வீட்டில் யாரும் இல்லாத நேரம் எனது அப்பாவும் அவரின் நண்பரை பார்க்கச் செல்வதாக அவரிடம் கூறிவிட்டுச் சென்றிருக்கின்றார். அந்தச் சந்தர்ப்பத்தில் அவர் வீடுக்குள் வந்து வீட்டில் தனியாக நான் உறங்கிக் கொண்டிருந்த வேளை என்மேல் இருந்த போர்வையை விளக்கவே நான் தம்பிதானோ என நினைத்து கையை தட்டியபோதுதான் பார்த்தேன் இவர் என்பதை என்மேல் வந்து அவர் விழவே நான் அவரை தள்ளிவிட்டு உடனே வெளியே செல்லுமாறு கூறினேன். போக மறுத்த அவன் என்னை அடித்துத் துன்புறுத்தித் தள்ளிவிட்டான் அப்போது என் பின்தலையில் அடிபட்டு நான் மூச்சுத்திணற உடனே விட்டுவிட்டு வெளியே ஓடிவிட்டான்.

நான் எழுந்து வாசல் கதவை மூட முற்பட்டபோது வெளியே இருந்த சமையலறையில் ஒளிந்திருந்த அவன் மீண்டும் கதவை தள்ளிக் கொண்டு உள்ளே நுழைந்து என்னை பிடித்து கட்டிலில் தள்ளி தனது ஆசைக்கு இணங்குமாறு கூறினான். நான் மறுத்ததால் நீ ஒருவனை விரும்பியதாகவும் அவனை யாரும் இல்லாத வேளை வீட்டிற்கு வரச்சொல்லுவதாகவும் ஊராருக்குச் சொல்லுவேன் எனக்கூறி மிரட்டினான். (முன்னொரு நாள் எனக்குத் தெரிந்து அண்ணா ஒருவரிடம் நான் எனக்கு இவ்வாறு உடல்நிலை சரியில்லை என குறித்த சிரா சபைத் தலைவரிடம் கைத்தொலைபேசியை வாங்கி அவருக்கு குறுந்தகவல் அனுப்பினேன். அன்றைய தினம் அந்த அண்ணா எனது வீட்டிற்கு வந்து என்னை பார்த்து விட்டுச் சென்றிருந்தார்) அவருக்கும் எனக்கும் தொடர்பு உள்ளது எனத் கூறுவேன் என்றுதான் மிரட்டினான். என்றாலும் நான் பயப்படாமல் அவனைத் தள்ளி விட்டு ஓடி வந்து விட்டேன் என தெரிவித்தார்.

இவ்விடயத்தைக் காவல்துறைக்கு தெரிவிக்கவில்லையா? எனக் கேட்ட போது உப்புவெளி காவல்துறைக்கு முறையிட்டதாகவும் அவர்கள் இரு தரப்பினரையும் அழைத்து விசாரித்த போது நான் தனது ஆண் நண்பருடன் கதைத்துக்கொண்டிருந்ததை தான் பார்த்து விட்டதாகவும் அதனை மறைப்பதற்காகவே இவ்வாறு அபாண்டமான பழி சொல்வதாகவும் தெரிவித்துள்ளார் எனக் கூறிய அப் பராயமடையாத பெண் மேற்கொண்டு எவ்வித நடவடிக்கைகளையும் காவல்துறை மேற்கொள்ளவில்லை என்றும் தெரிவித்தார்.

இக் குற்றச்சாட்டு தொடர்பாக குறித்த கிராம சபைத் தலைவரிடம் அவரது கருத்தைக் கேட்க முனைந்த போது அவர் அவரது வீட்டை விட்டு வெளியேறிவிட்டதாகத் தெரிந்தது.

## ஆசிரியர்களாக 332.....

என்.ஏ.புஸ்பகுமார ஆகியோர் நியமனக் கடிதங்களை ஆசிரியர்களுக்கு வழங்கி வைத்தனர். தமிழ் மொழி மூலம் மொத்தமாக 240 ஆசிரியர்களுக்கும் சிங்கள மொழிமூலம் 92 பட்டதாரிகளுக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டன.

தமிழ் மொழிமூலம் உள்வாங்கப்பட்ட பட்டதாரிகளில் 81 பட்டதாரிகள் திருகோணமலை மாவட்டத்திற்கும், 105 பட்டதாரிகள் மட்டக்களப்பு மாவட்டத்திற்கும் 54 பட்டதாரிகள் அம்பாறை மாவட்டத்திற்குமாக நியமனம் பெற்றுள்ளனர்.

சிங்கள மொழிமூல பட்டதாரிகள் 92 பேருக்கும் திருகோணமலை, அம்பாறை ஆகிய மாவட்டங்களுக்கு இலங்கை ஆசிரியர் சேவை 3 இற்கான நிரந்தர நியமன கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

## மூதூரின் கடலரிப்பைத்..

இக் குழுவோடு மூதூர் பிரதேச தவிசாளர் யு.ஆ.ஹரிஸ் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஆளு.தௌபீக்கின் இணைப்பு செயலாளர் ஞ.ஆ.சனூஸ், மூதூர் பிரதேச திட்டமிடல் பணிப்பாளர் யுளு.ஆ.அறபாத், கரையோரப் பாதுகாப்பு குழுவின் தலைவர் ளு.ஆ.அமீர் உள்ளிட்ட பலரும் உடன் சென்றிந்தனர். பட்டியலிடப்பட்டிருந்தவை "தொடர்கின்றன... தொடர்கின்றன" எனக் குறிக்கப்பட்டதையிட்டு அவர் கேள்வி எழுப்பியுள்ளார்.

பரிந்துரைகள் எந்த மட்டத்தில் தற்போது தொடர்கின்றன என்பதே அவரது கேள்வியாக இருந்தது. எனினும் அச்சந்தர்ப்பத்தில் ஆரகிருந்த அரச அதிகாரிகள் எவராலும் அதற்குப் பதிலளிக்க முடியாது போயுள்ளது.

## மயிலவட்டுவான்......

பெருக்கெடுத்த நிலையில் முன்னாயத்தமாக இக்கிராமத்தினைச் சேர்ந்த 57 குடும்பங்கள் இன்று மாலை 4 மணிக்கு பிரதேச செயலாளர் யு.உதயசிறிதர், கிராம சேவையாளர் உதவிகளுடன் இடம் பெயர்ந்துள்ளனர்.

இன்றையதினம் இவர்கள் பாதுகாப்பாக வெளியேறாவிட்டால், நாளை அவர்கள் வேறு எங்கும் செல்ல முடியாத நிலை தோன்றும் என்றமையினாலேயே இவர்கள் இன்றைய தினம் வெளியேறியுள்ளனர்.

கடந்த வருடம் இவர்கள் வெளியேறத் தாமதித்தமையினால் கிராமம் முழுமையான நீரில் மூழ்கியதுடன், மக்கள் வெளியேற முடியாத நிலை ஏற்பட்டு படகுகள் மூலமே மீட்கப்பட்டிருந்தனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகள், இவர்களுக்கான பால்மா வகைகளை வழங்குவதற்கான நடவடிக்கைகளில் பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இடம்பெயர்ந்துள்ள மக்களைச் சந்தித்து அவர்களது தேவைகள் குறித்து தமிழ் தேசியக் கூட்டமைப்பின் கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெட்ணம் கேட்டறிந்ததுடன் அவர்களது அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றுவது குறித்து பிரதேச செயலாளர், கிராம சேவையாளர்களுடன் கலந்துரையாடினார்.

அத்தோடு 2007ஆம் ஆண்டு முதல் இன்று வரை 7 தடவைக்கு மேல் இடம் பெயர்ந்துள்ளதாகவும், தங்களது வீடுகள், மேட்டு நிலப் பயிர்ச்செய்கை கால்நடைகள், சேகரித்து வைத்த தானிய வகைகள், சமையல் உபகரணங்கள் பாதிக்கப்பட்ட நிலையில் இடம் பெயர்ந்துள்ளதாகவும் இனிமேல் இடம் பெயர முடியாது எனவும் கிராமத்திற்கு உயரமான கட்டடங்களை அமைத்துத் தருமாறும் கோரிக்கையினை தன்னிடம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மனிதன் அல்லாஹ்வுக்கு பொறுப்புச் சொல்ல வேண்டிய ஓர் அமானிதம்

இஸ்லாம் கூறும் நன் நெறியில் மனிதனை புனிதனாக்கி பெறுமானமுள்ள வாழ்க்கை வாழ்வதற்குரிய அம்சங்களையும் அல்லாஹ் பரிபூரணமாக எமக்கு அருளியுள்ளான். அதனை நேரிய முறையில் நாம் நெறிப்படுத்தி அது விதித்திருக்கும் கடமைகளை நிறை வேற்றி அல்லாஹ்வின் நல் அடியானாக அவன் முன் செல்வோம்.

அல்லாஹ் மனிதனைப் படைத்து அவனைக் கண்ணியப் படுத்தி வைத்தான். முதலில் பூரணமான ஓர் உடலமைப்பை அவனுக்கு வழங்கினான். எனவேதான் நிச்சயமாக நாம் மனிதனை மிக அழகான அமைப்பில் படைக் கின்றோம். என தன் திருமறையில் அருளியுள்ளான்.

மனிதனுக்கு சகல வழிகளிலும் வழங்கப்பட்டுள்ள பூரணத்துவத்திற்கு ஒப்பாக எப்படைப்பினங்களுக்கும் வழங்கப்படவில்லை தனக்கு பொறுப்புச் சொல்லக் கூடிய விதத்தில் மனிதனைப் படைத்தால த்தான் அவன் "மனிதனே" என்று அழைக்கிறான்.

இவ் அழைப்பு எமது உடலுக்கு விடுக்கப்பட்ட ஒன்றல்ல, மாறாக உணர்வுகளுக்கும் ஆன்மாவு க்கும், விடுக்கப்பட்ட அழைப்பாகும். ஆகவேதான் புத்திசுவாதீன மற்றவர்களின் செயகள் அளவிடு செய்யப்படுவதில்லை. இதனையே நபியவர்கள் மூவரை விட்டும் எழுது கோல் உயர்த்தப்படுகின்றது.

### நற் சிந்தனை

### நற் பலனைப் பார்த்து நட்புக் கொள்ளாதே நல்ல மனதைப் பார்த்து நட்புக் கொள்

நிகழ்ச்சி ஒலிபரப்பப்படும் தினத்தில் இப் பாடல்களை எனது விருப்பமாக ஒலிக்க விடுமாறு மிகத் தயவாய் வேண்டுகிறேன்.

01. இறை நூரில் வந்த நூறே
அன்பே ரஹுலுல்லாவே
விண்மேகம் வாழ்த்துக் கூறும்
வள்ளல் ரஹுலுல்லாவே
அறியாமை போக்க வந்தீரே....
அன்பே ரஹுலுல்லாவே

02. அல்லாஹ் என்று சொன்னாய்
உருகுதே நெஞ்சம்
ஆண்டவனே ரப்பே
அருள் புரிவாய்......

03. துஆ... கேளுங்கள்
என்றும் துஆ.... கேளுங்கள்
நம்மிக்கை உள்ளோர் கேளுங்கள்
என்றும் து ஆ.... கேளுங்கள்

04. அன்னல் நபியின் பொண் மொழியே
இதை அழகாய் உணர்வாய் பெண்
மணியே வண்ண மிக தீன் குழத்தின்
கண்மணியே....

நன்றிகள்

## இத்தா எதற்கு

தொடர்ச்சி..

நாம் இது பற்றி எமது இஷ்டத்திற்கு இத்தாவை 40 நாட்களா கவோ வேறெந்த விதத்துக்கோ மாற்றிக்கொள்ள எந்த அனுமதியு மில்லை.

இங்கு அவதானிக்க வேண்டிய விடயம் என்ன வென்றால் இத்தா இருப்பது கணவனின் இஷ்டத்திற்காக வல்ல கணவன் அனுமதி தந்து விட்டுப் போனான் என சில பெண்கள் 40 நாட்களோடு இத்தாவை முடித்துக் கொள்கிறார்கள்.

இத்தா என்பது இறைவனின் ஆணை. படைத்தவனின் கட்டளைகள் படைக்கப்பட்டவர்களின் கட்டளைக ளாய் மாற்றப்பட முடியாது.

ஒரு கணவன் தன் மனை வியை இரக்கமாக வைத்திருந்தாலும் பாராமுகமாக இருந்தாலும் அவனது இறப்பின் பின் இத்தா இருக்க வேண்டியது அம் மனைவியின் மீது இஸ்லாமிய கடமை. இது அவள் இறைவனுக்கு அடிபணியும் செயல் கணவனுக்கு அடிபணியும் செயலல்ல.

**ஏன் இத்தா ஏவப்பட்டுள்ளது?**

பொதுவாக மனைவியின் வயிற்றில் குழந்தை இருக்கிறதா என்பதைக் கணிப்பதற்காக என ஒரு கருத்து நிலவுகிறது. இது முற்றிலும் சரியான வாதமல்ல ஏனெனில் இது காரணமாக இருப்பின்

1) தலாக்குக்கு 3மாதவிடாய்களும் விதவைக்கு 4மாதம் 10 நாட்களும் என வித்தியாசப்பட மாட்டா இரண்டுக்கும் ஒரேயளவு நாட்கள் ஏவப்பட்டிருக்கும்.

2) மாதவிடாய் வராத பெண்களுக்கும் விசேடமாக மாத விடாய் வரும் காலத்தைக் கடந்த பெண்களுக்கும் 3 மாதங்கள் என அல்லாஹ் குர்ஆனில் குறிப்பிடுகிறான். இது பிள்ளைப்பேறு பெறக் கூடிய வயதைத் தாண்டிய பெண்களைக் குறிப்பிடுகிறது.

3) பிள்ளை வயிற்றிலிருப்பது நிச்சய மாகத் தெரிந்த பின்னர் பிள்ளையைப் பெற்றெடுக்கும் வரை இத்தா இருக்கு மாறு பணித்திருக்கிறான் கர்ப்பிணிகள் 5,6,7 மாதங்களில் இத்தாவை முடிக்க அனுமதி வழங்கப்படவில்லை.

4) மிகச் சிறந்த முறையான தலாக் ஒரு பெண் மாதவிடாய் முடிந்து சுத்தமானதும் கணவனுடன் உடலுறவு கொள்ளும் முன் கூறப்பட வேண்டிய ஒன்று இந்த தலாக் சொல்லப்பட்டால் அப் பெண் அடுத்த 3 மாதவிடாய்கள் வரும் வரை இத்தா இருக்க வேண்டும்.

எனில் அப் பெண்ணுக்கும் அக் கணவனுக்கும் அவள் எப்படியும் கர்ப்பினியாக இருக்க முடியாது என்பது தெள்ளத் தெளிவாகத் தெரியும் எனவே இந்த இத்தா குழந்தை வயிற்றிலிருப் பதைப் பரிட்சிப்பதற்காக அல்ல ஒரு மனைவி தன் கணவன் இறந்ததைத் தெரிந்து கொண்ட நாள் முதல் இத்தா இருக்க வேண்டும்..

அவன் வெகுநாள் வெளி ஊரி லிருந்தாலும் வெகுகாலம் காணாமல் கேள்வியே எழுவதில்லை.

6) மூன்று மாதங்களில் கர்ப்பம் ஏற்பட்டு விட்டதை வெளித்தோற்றங்களிலிருந்து எப்போதுமே நிச்சயமாகக் கூறிவிட முடியாது ஏதாவது ஒரு காரணத்துக் காக மாதவிடாய் வராமலிருந்த பெண் கர்ப்பமானால் 3 மாதங்களாயினும் கர்ப்பிணியாக இருப்பது அவளுக்கே கூடத் தெரியாமல் இருக்கலாம்.

அவ்வாறே இன்றைய விஞ்ஞான உலகில் கர்ப்பத்தைத் தெரிந்து கொள்ள மூன்று மாதம் காத்திருக்க அவசி யமில்லை.......

(தொடரும்) இரண்டே வாரங்களில்




## பெண்களுக்கான சில அழகுக் குறிப்புக்கள்



✸ முகச்சுருக்கத்தை போக்க தேங்காய் எண்ணெயில் மஞ்சத்தூளை போட்டுக் குலைத்து உடம்பிற்கு தடவி. பயத்தமாவை தேய்த்துக் குளித்தால் தோல் பளபளப்பாகவும், மிருதுவாகவும் இருக்கும்.

✸ ஒரேஞ்சு பழத்தை இரண்டாக வெட்டி முகத்தில் தேய்த்து, பத்து நிமிடம் கழித்து சோப்பு போட்டுக் கழுவ வேண்டும். தினம் இவ்வாறு செய்து வந்தால் முகம் பளபளப்பாகவும், இளமையுடனும் இருக்கும்.

✸ முகத்தில் உள்ள தேவையற்ற முடிகளை நீக்கி அடிக்கடி எலுமிச்சை சாற்றை தடவ வேண்டும். தினமும் இவ்வாறு செய்வதால் முடி வளர்ச்சி குறைந்து முகம் அழகு பெறும்.

✸ வேப்பிலை, புதினா, சிறிது மருதாணி மற்றும் குப்பைமேனி இலைகளை காயவைத்து, தூளாக்கி வைத்துக் கொள்ளவும். இதில் சிறிது எடுத்து, பாலில் குலைத்து, முகத்தில் பூசி 20 நிமிடம் ஊற வைத்துக் குளித்தால், முகம் வேர்க்குரு வராமல், வெளியில் கருத்துப் போகாமல் இருக்கும்.

✸ இரவு படுக்கும் முன், புதினாச் சாறு இரண்டு தேக்கரண்டி அரை மூடி எலுமிச்சம்பழச் சாறு ஆகியவற்றுடன் பயற்றம்பருப்பு மாவை கலந்து முகத்தில் தடவிக் கொண்டு பத்து நிமிடம் ஊறிய பிறகு ஐஸ் ஒத்தடம் கொடுக்க முகம் சுத்தமாகும். பருவினால் ஏற்படும் தழும்பும் மறையும்.

✸ அப்பிள் பழத்தைச் சின்னச் சின்னத் துண்டுகளாக வெட்டி முகத்தில் தடவினால் சருமத்தில் உள்ள எண்ணைப் பசை குறையும்.

✸ முகத்தில் உள்ள முடிகளை அகற்ற முட்டையின் வெள்ளைக்கரு, சர்க்கரை, சோளமாவு அனைத்தையும் ஒன்றாகக் கலந்து பசைபோல ஆக்கி முகத்தில் பூசவும்.

## வாழ்க்கைப்பாதையில் பெண்களைப் பற்றி

கடந்தவார தொடர்ச்சி

ஆனால், இன்று நாம் படும் வேதனைகளை, நாளை, நாமே, இன்னொருவருக்கு ஏற்படக் காரணமா கின்றோம்.

இதைக் களைந்து, புதிய சமுதாயம் மலர, பெண்கள் சுதந்திரமாக வாழ, பெண்களாகிய நாம் தான் உறுதுணை புரிய வேண்டும்.

இன்று எம் சூழலிலே, போரினால் பாதிக்கப்பட்டு இறந்தவர்கள் எத்தனையோ ஆயிரம். இவ்யுத்தத் தினால், இன்று இளம் விதவைகளாய், இல்லத்தை நடாத்துபவர்கள் ஏராளம்.

இவர்கள் துணிவுடன், தம் குழந்தைகளுக்காய் வாழ்க்கையை எதிர் கொண்டாலும், வசை மொழிகளை எதிர்கொள்ள முடியாதளவிற்கு மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர்.

இன்று நானறிந்த வகையில், போரினால் தன்னுயிர்க் கணவனை இழந்த ஓர் இளம் விதவை, தன் ஒரே மகனின் நல் வளர்ச்சிக்காய் தன் வாழ்வை அர்ப்பணித்து, தன் பெற் றோருடன், தன் சுய சம்பாத்தியத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்றாள்.

இருப்பினும், அவள் எங்குச் சென்றாலும் சரி, அவள் எப்படி உடுத்தினாலும் சரி, என்று அவள் செய்யும் எல்லாவற்றிற்குமே அவளின் மனதைப் புண்படுத்தும் விதமான பல பேச்சுக்கள் பல கேள்விகள் கேட்பது யார்? ஆம்.

பத்து மாதம் தன் உதிரத்திலே சுமந்து பெற்ற அவளது அன்னை. அவளை அரவணைத்து, ஆறுதல் வார்த்தை கூறி அன்பு பொழிய வேண்டிய அவளது அன்னையே, அவளுக்கு அம்புக் கணைகளை எய்யும் போது, அவள் வேறு யாரிடம் செல்வாள்?

எவ்விதமான மனக் கசப்புகளு மின்றி, மகிழ்ச்சி வெள்ளத்திலே மூழ்கிச் சென்று கொண்டிருந்த தன் இல்லற வாழ்வு, குறுகிய காலத்திலே ஒரு செக்கனிலேயே, தன் கண்முன்னே தன்னுயிர்க் கணவனை பறிகொடுத்து.

நிற்பவளுக்கான ஒரே போக்கிடம் அவள் பிறப்பிடம். அதுவும் அவளுக்கு ஒரு சிறைக்கூடம் என்றால்...? இது நிஜம். இன்றுவரை அவள் துன்பப்பட்டுக் கொண்டேயிருக்கின்றாள் என்பது முற்றிலும் உண்மை.

சிறு வயதிலேயே ஒரு பெண் கணவனை இழந்து விட்டால், தன் ஆசைகள் எல்லாவற்றையும் இழக்க வேண்டுமா?

தவறான வழியில் செல்லாமல், தன் உழைப்பால், தன் தேவைகளையும், விருப்பங்களையும் அவள் பூர்த்தி செய்வதில் தவறேது?

எம் வசை மொழிகளை மட்டும் வழங்கி அவர்கள் மனதை வருத்தும் நாம் அவர்கள் வாழ்க்கைக்கு வழிகாட்டு கின்றோமா?

அப்படியிருக்க ஏன் தேவை யற்ற பேச்சுக்கள், அனாவசிய அபிப்பி ராயங்கள் அதையும் எதிர்த்து, ஒரு ஆண் ஒரு விதவையை பல சவால்களுக்கு மத்தியில் திருமணம் செய்து கொண்டால், அவன் பரம்பரையே அவர்கள் வாழ்நாள் முழுவதும் பிரச்சினைகளை எதிர் கொள்வதும் மறுக்க முடியாத உண்மை.

இந்நிலை முற்றிலும் மாற வேண்டும். மாறுவதற்கு நாமனைவரும் முயற்சி செய்ய வேண்டும். (தொடரும்)

(ஜெய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிண்ணியா நிஜாமியா செயற்பாட்டு மையத்தின் பட்டமளிப்பு விழா

கிண்ணியா நிஜாமியா சிறுவர் செயற்பாட்டு மையத்தின் முதலாவது பட்டமளிப்பு விழா (11)அன்று சனிக்கிழமை கிண்ணியா மத்திய கல்லூரியில் அப்துல் மஜீத் கேட்புபோர் கூடத்தில் முற்பகல் 09.00 மணிக்கு ஆரம்பிக்கப்பட்ட இந்நிகழ்வு மூன்று கட்டமாக இடம் பெற்ற நிகழ்வில் முதலாவது நிகழ்வில் பிரதம அதிதியாக கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர் கிண்ணியா கோட்டக் கல்வி அதிகாரி இப்றாகீம் முன்பள்ளி பணியகத்தின் அப்பிரதேசத்துக்கான இணைப்பாளர் சமீம் மற்றும் பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் மற்றும் புத்திஜீ விகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்



## விளையாட்டு உபகரணங்கள் கையளிப்பு

கடந்த ஞாயிற்றுக்கிழமை அன்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வரின் 2013ம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டின்கீழ் தோப்பூர் கோல்ட்



ஸ்டார் அஸ்ரப் வளர்மதி வின்ஸ்டார் மற்றும் 59 ஆஸாத் நகர் ஈஸ்ட் லங்கா போன்ற விளையாட்டுக்கழகங்களுக்கு ரூபா 15000 வீதம் விளைாட்டு உபகரணங்கள் கையளிக்கப்பட்டதுடன் தோப்பூர் பிரதேச மஸ்ஜிதுல் ஹுதா பள்ளிவாயலுக்கான ஒலி பெருக்கி தொகுதியும் மஸ்ஜிதுல் ஹிதாயா மற்றும் ஆயிஷா போன்ற பள்ளிவாயலுக்கான கதிரைகளும் தோப்பூர் கட்சி காரியாலயத்தில் வைத்து கையளிக்கப்பட்டன

இந்நிகழ்வில் தோப்பூர் பிரதேசத்து க்காண மாகாண சபை உறுப்பினரின் இணைப்பாளர் றிபாஸ் குறித்த பள்ளிவாயல்களின் தலைவர்கள் விளையாட்டு கழகத்தின் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்



மட்.விவேகானந்த மகளிர் மகாவித்தியாலயத்தின் தரம் 01 மாணவர்களைவர வேற்கும் நிகழ்வு அதிபர் திருமதி.திலகவதி.ஹரிதாஸ் தலைமையில் 17.01.2014 இடம் பெற்றது அதிதிகள்வர வேற்கப்படுவதையும். முதலாம்தரத்திற்கு அனுமதி பெற்றமாணவர்கள மாலை அணிவித்துவர வேற்கப்படுவதையும் படங்களில்காணலாம். (சச்சு)

## "எனக்குப் புனர்வாழ்வா?.... அவ்வாறாயின் சம்பந்தர் ஐயாவிற்கும் அளிக்கவேண்டும் அல்லவா?" - அனந்தி



வடமாகாண சபையின் உறுப்பினரான அனந்தி சசிதரனுக்கு புனர்வாழ்வழிக்க படைத்தரப்பு முயன்றுவருவதாக வெளியான செய்திகளைத் தொடர்ந்து அவர் குளோபல் தமிழ்ச் செய்திகளுக்கு அளித்த செவ்வியின் முழு வடிவம் வருமாறு:

கொழும்பு ஊடகம் ஒன்று என்னைக்கைது செய்து புனர்வாழ் வளிக்கத் திட்டமிடுவதாக செய்தி ஒன்றினை வெளியிட்டுள்ளது. இலங்கை படைத்துறையினர் இது குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாகவும் இவ்வூடகம் குறிப்பிட் டுள்ளள நிலையில் இது குறித்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலுமுள்ள மனித நேய அமைப்புக்களும், ஆர்வலர்களும் ,புலம்பெயர் தமிழர்களும் என்னிடம் விசாரித்து வருகின்றனர்.

உண்மையில் எதிர்வரும் மார்ச் மாத ஜெனீவா மனித உரிமைகள் தொடர்பான மாநாட்டில் பெரும் நெருக்கடியை சந்திக்கவுள்ளதாக கூறப்படும் அரசு இவ்வாறான ஊடகப் பரப்புரைகள் மற்றும் அச்சுறுத்தல் மூலமும் உண்மைக்கு புறம்பான குற்றச் சாட்டுகள் மூலமும் என்மீது அவதூறு கற்பிக்க முயல்வது அதன் பலவீனத்தையே வெளிப்படுத்துகிறது.

கடந்த இருபத்தொரு வருடங்களாக அரச சேவையில் முகாமைத்துவ உதவியாளராக மூன்று மாவட்டங்களில் பணியாற்றிய என்னை பிரிவினை வாதத்தை தூண்டுகிறார் எனக் குற்றம் சாட்டி புனர்வாழ்வளிக்க வேண்டுமெனக் கூறுவது அபத்தமான விடயமேயாகும்.

தென்பகுதி இனவாதத் தலைமைகளை தேசபக்தர்களாக இனங்காட்டி அவர்களின் இனவெறிக் கருத்துக்களை கைதட்டி பாராட்டும் அரசு, மனித உரிமைகள் பற்றி நியாயபூர்வமாக பேசி அதற்காக மட்டுமே குரல் கொடுத்து வரும் என்போன்றவர்களை பிரிவினை வாதிகளாக இனம் காட்டமுயல்வதை என்னவென்று சொல்வது? உண்மையில் சர்வதேசரீதியில் பாரிய குற்றச் சாட்டுக்கும் விசாரணைகளுக்கும் முகம் கொடுக் வேண்டிய நிலையில் உள்ள இந்த அரசு, தனக்கு நெருக்கடியை கொடுத்து வரும் சர்வதேச சமூகத்தையும் புனர்வாழ்வுக்குட்படுத்த வேண்டும் என்று கூறினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

முள்ளிவாய்கால் போர் முடிவின் போது நான் எனது பிள்ளைகள் மற்றும் கணவருடன் அரச படையினரிடம் சரணடைந்த போது என்னையும் என் பிள்ளைகளையும் விட்டுவிட்டு என் கணவரை மட்டும் தடுத்து வைத்தது ஏன்? அப்போதே எமக்கு புனர்வாழ்வளித் திருக்கலாமே!

இன்று நான் ஒரு தனிமனுஷி அல்ல... எண்பதாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் நம்பிக்கைக்குரிய பிரதிநிதி .அவர்கள் என்னை பிரிவிவைவாதியாக பார்க்கவில்லை.தமது வாழ்வியல் மற்றும் மனித உரிமைகளுக்காக குரல் கொடுக்கும் ஒரு பெண்ணாகவே பார்க்கிறார்கள். சர்வதேச சமூகமும் என்னை அப்படித்தான் அங்கீகரித்து எனக்கு ஆத்ம பலத்தை தந்து எனது நியாயமான போராட்ட குரலுக்கு செவிசாய்த்து வருகிறது.

இந்த நிலையில் நான் பிரிவினைவாதியென்றால், என்னை தேர்தலில் நிறுத்திய தமிழ்த்தேசிய கூட்டமைப்பினர், என்னை ஆதரித்து வாக்களித்த மக்கள், எனக்கு தமிழ்த்தேசியத்தை போதித்து நிற்கும் மதிப்பிற்குரிய சம்பந்தன் ஐயா, மாவை சேனாதிராசா ஐயா உட்பட தமிழ் உணர்வாளர்கள் அனைவரும் பிரிவினை வாதிகளாக அல்லவா இருக்க வேண்டும்.?

இனி இவர்கள் அனைவருக்கும் அல்லவா புனர்வாழ்வளிக்க வேண்டி வரும்? ஒரு இனத்தின் நியாயமான மனித, அரசியல் மற்றும் வாழ்வியல் உரிமைகளை வழங்கும் திராணியற்று அம் மக்களை ஆயுதமுனையில் ஒடுக்கி வைக்க நினைக்கும் பேரினவாதச் சிந்தனையாளருக்கு ஏற்பட்டுள்ள சர்வதேச அழுத்தம் அதனை மேலும் மேலும் தவறுகளையே செய்யத் தூண்டு கிறது என்பதையே இந்த புனர்வாழ்வு பற்றிய ஊடகச் செய்தி வெளிப்படுத்தி நிற்கிறது.

## மாபெரும் இரத்த தான முகாம்






ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் தலைமையகம் மற்றும் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் கிழக்கு மாகாண கிளைகள் ஒன்றிணைந்து 1000 நபர்களை இலக்கு வைத்து நாடாத்தும் மாபெரும் இரத்த தான முகாம், இரத்த தானம் சம்மந்தமான விழிப்புணர்வு கண் காட்சி 2014.01.14 காலை 9.00 மணி முதல் சம்மாந்துறை அப்துல் மஜீட் மண்டபத்தில் இடம் பெற்றது. இன் நிகழ்வில் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத் தலைமைக்கழக நிர்வாகிகளும் கலந்து கொண்டுள்ளனர்.

இன் நிகழ்வில் கலந்து இரத்த தானம் செய்யும் அனைவருக்கும் ஸ்ரீலங்கா தவ்ஹீத் ஜமாஅத்தினால் நற்சான்றிதல் வழங்கப்படுகின்ரமை குறிப்பிடத்தக்க அம்சமாகும். இங்கு அதிகமான ஆண் பெண்கள் இரத்தம் வழங்குவதை இங்கு காணக்கூடியதாக உள்ளது. (பர்ஹான்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்களாக 332 பட்டதாரிகள் நியமனம்



கிழக்கு மாகாணத்தில்லுள்ள பாடசாலைகளில் வெற்றிடமாக காணப்படும் கணிதம், விஞ்ஞானம், தொழில்நுட்பம் மற்றும் உடற்கல்வி பாடங்களுக்கான தமிழ், சிங்கள, மொழி மூல 332 பட்டதாரிகளுக்கு புதன்கிழமை (15) ஆசிரியர் நியமனங்கள் வழங்கப்பட்டன.

திருகோணமலை உவர்மலை விவேகானந்தா கல்லூரியில் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் விமல வீர திஸாநாயக்க தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் நஜீப் எ மஜீத், கிழக்கு மாகாண தவிசாளர் ஆர்யவதி கலப்பதி, மாகாண சபை உறுப்பினர் ஆர்.எம்.அன்வர், கல்வி அமைச்சின் செயலாளர் ....

13

## படகு மூழ்கியது - சேதமில்லை

செங்கலடி ஏறாவூர் பிரதேச மாவடி ஓடைப்பாலம் வெள்ளத்தினால் உடைப்பெடுத்ததைத் தொடர்ந்து அப்போது போக்குவரத்தில் ஈடுபட்டிருந்த படகு மூழ்கடிக்கப்பட்டது.

அப்படகில் பயணம் செய்த இருவரும் காப்பாற்றப் பட்டுள்ளனர் எனினும் படகு வெள்ள நீரினால் இழுத்துச் செல்லப்பட்டுள்ளது.

மட்டக்களப்பிலும் அம்பாறையிலும் தொடர்ந்து பெய்யும் மழை காரணமாகப் பல குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயத்தை எட்டியுள்ளன. அதனால் படகுப் போக்குவரத்துக்கும் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது என எமது செய்தியாளர் தெரிவிக்கின்றார் (சிவா)

## மூதூரின் கடலரிப்பைத் தடுக்கக் கல்வேலி

மூதூர் கரையோரக் கிராமங்களில் ஏற்பட்டுவரும் கடலரிப்பை தடுப்பதற்கு கல்வேலி அமைப்பதற்கான முதற்கட்ட கள ஆய்விற்காக கரையோரப் பாதுகாப்புத் திணைக்களத்தின் பொறியியலாளர் குழுவினர் மூதூருக்கு வருகை தந்திருந்தனர்

பொறியியலாளர் பத்மசிரி தலைமையில் வருகை தந்த குழுவினர் ஹபீப் நகர், தக்வா நகர், பஹ்ரியா நகர் கரையோரக் கிராமங்களில் ஏற்பட்டுள்ள பதிப்புகள் நேரில் சென்று பார்வையிட்டனர்



## கிழக்கில் தொடரும் சைவ ஆலயக் கொள்ளைகள்......



புனர்நிர்மாணம் செய்யப்பட்டு வரும் தேத்தாத்தீவு கொம்புச் சந்திப் பிள்ளையார் ஆலயத்தின் உண்டியல்கள் உடைக்கப் பட்டதுடன் மூலவிக்கிரகமும் அகற்றப்பட்டு மேற்கொள்ளப்பட்ட கொள்ளை முயற்சியொன்று கைகூடாமற் போயுள்ளது.

கடந்த 15ம் திகதி இரவு 12 மணியளவில் இவ்வாலயத்தின் அருகில் வந்திறங்கிய மாணவர் குழுவொன்று ஆலயத்தின் மூல.....

அமைதி காக்கும் சைவ அமைப்புக்கள்

13

## "புதிய தமிழ் அரசியல் கட்சி"

### ஒரு புரளி- ஆனந்தசங்கரி

சில அரசியல் குழுக்களுடன் யாழ்நகரில் உள்ள யூரோவில் மண்டபத்தில் கடந்த 11 ஆம் திகதி சனிக்கிழமை நடந்ததாகக் கூறப்படும் நிகழ்வு உண்மையானதேயாகும். ஆனால், அதன் நோக்கம் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்கு மாறான ஓர் அமைப்பை உருவாக்குவதல்ல என தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் மிகக் குழப்பமான நிலையில் உள்ள யாழ்ப்பாணக் கள நிலைபற்றிக் கலந்துரையாடும் நோக்கில் சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன உட்பட......

13



# சவால்மிக்கதாக மாறும் கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நிலை

### - தமிழ்த்தேசிக் கூட்டமைப்பு -

(மூர்த்தி கங்கா)

கிழக்கு வாழ் தமிழ் மக்களின் நிலை சவால் மிக்கதாக மாறிவருவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

11.01.2004 அன்று மட்டக்களப்பு சுபராஜ் இன் விடுதியில் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர்களும் , மட்டக்களப்பு மாவட்ட கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களும் கலந்துகொண்ட பத்திரிகையாளர் சந்திப்பின்போது வெளியிடப்பட்ட அறிக்கை.

இலங்கை சுதந்திரமடைந்த நாள் தொட்டு இன்று வரை, இலங்கையின் பன்மைத்துவம், வழிவழி வந்த பேரினவாத அரசுகளால் மூர்க்கத்தனமாக மறுக்கப்பட்டே வந்து கொண்டிருக்கின்றது. வடக்குக் கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்கள் தங்கள் தனித்துவங்களைப் பேணும் வகையில், தொடர்ச்சியாக நடைபெற்றுவந்த தேர்தல்களில் தங்கள் ஆணையை வெளிப்படுத்திக் கொண்டுதான் இருக்கின்றார்கள். ஆனால்....

04



## மயிலவட்டுவான் மக்கள் இடம் பெயர்வு

மட்டக்களப்பு மாவட்டத்தின் மயிலவட்டுவான் ஆற்று வெள்ளம் அதிகரித்து வருகின்ற நிலையில் அக்கிராம மக்கள் கடந்த வியாழக்கிழமை மாலை பாதுகாப்பாக வெளியேறி காயான்குடா கண்ணகி வித்தியாலயத்திற்கு இடம்பெயந்துள்ளனர்.

பதுளை உள்ளிட்ட மலையகப் பகுதிகளில் பெய்து வரும் கடும் மழை காரணமாக கும்புக்கண்ஓயா குளத்தின் நீர் மட்டம் உயர்ந்ததையடுத்து அதன் கதவுகள் திறந்து விடப்பட்டுள்ளன. இதனால் மட்டக்களப்பு மாவட்டத்தின் முந்தனை ஆறு உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளம் கரைபுரண்டு ஓடுகின்றது.

இதன் காரணமாக மயிலவட்டுவான் ஆற்று வெள்ளம்

## வீடு திரும்பினர் கிழக்கு மீனவர்கள்



படங்கள் - கடற்படை இணையம்

இந்திய கரையோர காவல்படையினரால் இலங்கை கடற்படையினரிடம் கையளிக்கப்பட்ட 52 மீனவர்ளும் தங்களுடைய சொந்த கிராமங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் பஸ் நிலையத்தில் வைத்தே அவர்கள் தங்களுடைய சொந்த ஊர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

திருகோமலையைச் சேர்ந்த மீனவர்களுக்கு தலா 1250 ரூபாவும் ஏனைய இடங்களைச்சேர்ந்த மீனவர்களுக்கு 1000 ரூபாவும் வழங்கப்பட்டதாக கடற்படையினர் அறிவித்தனர்........

13






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org